03 பாரதூரம் புரியாத முஸ்லிம் பிரதிநிதிகள்

06 அமெரிக்க சொர்க்கத்தில் ஆசிய அடிமைகள்

07 கொழும்பு முஸ்லிம்கள் வாழிடம், பொருளாதாரம், சுகாதாரம் ஒரு நிலவர அறிக்கை!


# முஸ்லிம் குரல்

கவடு - 05. தருகை - 10 ரூபா

Muslim Kural

21 மார்ச் 2003 - வெள்ளிக்கிழமை 17 - முஹர்ரம் - 1424 Registered as a Newspaper in Srilanka


ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் உங்கள் கரங்களில்... வாரஇதழாக மக்கள் கருத்துக்களுடன்!

# ஐக்கிய தேசியக் கட்சி - முஸ்லிம் காங்கிரஸ் மோதலும் முரண்பாடும் அம்பாறையில் அம்பலத்தில்!

(நமது விஷேட அரசியல் செய்தியாளர்)

ஐக்கிய தேசியக் கட்சி, முஸ்லிம் காங்கிரஸ் தலைமைகளிடையே உள்ளார்ந்த ரீதியில் நிலவி வந்த அதிகாரப் போட்டி அம்பாறையில் அம்பலத்துக்கு வந்துள்ளது. ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் பதவியேற்று 15 மாதங்கள் கடந்து விட்ட நிலையில், அம்பாறையில் அம்பலத்துக்கு வந்திருக்கும் இவ் அரசியல் மோதல், வெறும் உள்ளூர் அரசியலின் போட்டா போட்டி என நாம் ஒதுக்கித் தள்ளிவிட முடியாது! ரணில் விக்கிரமசிங்காவின் ஆசீர்வாதத்துடன் ஐக்கிய தேசிய முன்னணி அமைச்சர்கள் புடைசூழ நமது முஸ்லிம்களின் தனித்துவமான அரசியலின் மீது ஐக்கிய தேசியக் கட்சி நடாத்தும் திட்டமிட்ட அரசியல் யுத்தத்தின் ஒரு கட்டம்தான் இது!

## ஐக்கிய தேசியக் கட்சியின் அரசியல் வியூகம்

ஐக்கிய தேசியக் கட்சியின் அரசியல் கபடத்தனத்தை நம்பி மோசம் போன நமது அரசியல் தலைமையின் மிகப் பலவீனமான சந்தர்ப்பத்தை பயன்படுத்தி, மிகத் திட்டமிட்டு இயங்கி வரும் பேரினவாத சிங்கள அரசியலின் வேலைத் திட்டம் இப்போது செயற்பாட்டுத் தளத்திற்கு வந்துள்ளது. அரசியலை பாராளுமன்றத்திற்குள் மட்டுமே வெறுமனே குறுக்கிப் பார்க்கும் கண்களுக்கு ஒரு போதுமே புரியாத இவ் அரசியல் தந்திரோபாயம் குறித்த பல்வேறு எச்சரிக்கைகளை, அரசியல் விழிப்புணர்வுமிக்க சக்திகள் பல்வேறு தடவைகள் நமது அரசியல் அரங்கில் ஏலவே வெளிப்படுத்தி வந்திருக்கின்றனர்.

நமது தங்கத் தலைவர் மாஹூம் எம்.எச்.எம்.அஷ்ரஃப் அவர்களின் மறைவுடன் இத்திட்டமிட்ட சதி அரங்கேறுகிறது. நமது தலைவர் மரணமடைந்ததின் பின் நமது மக்களின் தலைமைகளான அப்பாவி அரசியல் வாதிகளின் பதவி ஆசை காரணமாக ஐக்கிய தேசியக் கட்சியுடன் கூட்டுச் சேர்ந்து கும்மாளம் அடித்ததன் விளைவை முஸ்லிம் காங்கிரஸ் மட்டுமல்ல முழு முஸ்லிம் சமூகமுமே அனுபவிக்கிறது; அனுபவிக்க இருக்கிறது. இவைகளுக்குப் பதிலாகக் கிடைத்தது கொஞ்சப் பணம், இரண்டு மூன்று அந்தஸ்த்து, அந்தஸ்த்தில்லாத அமைச்சர் பதவிகள் - இரண்டு மூன்று அரை மந்திரிப்பதவி, மூன்று தேசியப் பட்டியல் பாராளுமன்றக் கதிரைகள், விரல் விட்டு எண்ணிவிடக் கூடியதிணைக்கள உயர் பதவிகள், வெளிநாட்டுத் தூதுவர்கள் என்கின்ற சமாச்சாரங்கள்தான்.

ஆனால் நமது ம்க்களுக்கு அரசியல் ஆத்தத்தில் இந்த ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் இது வரை ஏற்படுத்தி வந்திருக்கும் இழப்புகள் மிகப் பாரதூரமானவை. ஈடு செய்வதற்கு இணையற்றவை. நமது தேசிய தலைவரை இழந்த கையோடு தேசிய இயக்கத்தை இழந்தோம். (முஸ்லிம் காங்கிரஸை பிரித்தது ரணில் விக்கிரமசிங்கதான் என முஸ்லிம் காங்கிரஸ் எம்.பிக்களான அன்வர் இஸ்மாயில், ஹரீஸ் ஆகியோர பகிரங்கமாகவே குற்றம் சாட்டியுள்ளனர்.) சமாதானத்தின் பெயரால் நமது அரசியல் உரிமைகளை இழந்தோம். நாலாபுறமும் பல குழுக்களாக சிதறினோம்; பலவீனப்பட்டோம். போராளிகளாக இருந்தவர்கள் துரோகிகளானார்கள். துரோகிகளாக இருந்தவர்கள் மேலும் துரோகிகளானார்கள். இந்நிலைமையை ரணிலின் அரசாங்கம் திட்டமிட்டு தோற்றுவித்துவிட்டு, நமது மக்களின் உன்னத அரசியல் அபிலாஷைகளுக்கு சாயடிக்கும் கைங்கரியத்தை அரங்கேற்றுகிறது; முஸ்லிம்களை நடுத்தெருவில் தள்ளிவிட்டு.

ஐக்கிய தேசிய முன்னணியுடன் நமது தேசிய அரசியல் இயக்கம் கூட்டுச் சேர்வதற்கு ஏதாவது நியாயம் இருக்கின்றதா என அன்று கேட்டதற்கு "உன்னத சமாதானத்திற்காக" எதையும் கொடுக்கலாம்; கடந்தகால அரசியல் அனுபவத்தையும் மறந்து என ஊர் ஊராய் அரசியல் வகுப்பு நடத்தினார்கள், மேடை போட்டு, துண்டுபிரசுரம் அச்சிட்டு, போஸ்டர் ஒட்டி.

உன்னத சமாதானத்திற்காக நமது மக்களிடம் அரசியல் வகுப்பு நடாத்தியவர்கள் "இந்த உன்னத சமாதானம்" முஸ்லிம்களையும் பாதுகாக்கும்தானே? என ரணிலிடம் கேட்க திரணியற்று இருந்திருக்கிறார்கள். இவர்கள் சந்தைப்படுத்த முயற்சிக்கும் இவ் உன்னத சமாதானம் இதுவரை முஸ்லிம்களுக்குத் தந்த அனுபவப் பாடம் என்ன? வாழைச்சேனை எரிந்தது. உடல்களை தீயில் எரித்தது. ஒருபடி மேலே போய் முஸ்லிம்களுக்கான தனித்துவமான அரசியல் அதிகார அலகை மறுப்பதில் போய் இன்று நிற்கிறது. இன்று வரை நமது அரசியல் தலைமைகள், நமக்கான தனி அதிகார அலகை மறுப்பதற்கு விடுதலைப் புலிகளுக்கோ - தமிழ் கூட்டமைப்பினருக்கோ அல்லது வேறெந்த வெளிச் சக்திகளுக்கோ என்ன உரிமை இருக்கிறது என கேட்கவேயில்லை. மௌனம்! மௌனம்!! மௌனம்!!!

நமக்காக நமது தலைமைகள் குரல் எழுப்புவர் என நம்பியிருந்த முஸ்லிம்கள் மத்தியில், இவர்களின் குரல் கட்டப்பட்டிருப்பது கண்டு இனம்புரியாத அரசியல் அச்சம் ஏற்பட்டுள்ளது. இந்த அச்சம் கவிந்திருக்கும் சூழலில்தான் அம்பாறையில் வேறொரு திசையில் இருந்து நமது அரசியல் தனித்துவத்தின் மீது எகிறிப் பாய்ந்திருக்கிறது ஐக்கிய தேசியக் கட்சி அதனுடைய முக்கிய அமைச்சர்கள், கட்சியின் தவிசாளர், செயலாளர் சகிதம்.

ஐக்கிய தேசியக் கட்சிக்கும், முஸ்லிம் காங்கிரஸுக்கும் இடையே முரண்பாடுகள் அம்பாரை மாவட்டத்தில் மட்டுமல்ல மட்டக்களப்பு, திருமலை, கொழும்பு, கண்டி, குருநாகல், பேருவளை என உருவாகி உள்ளுக்குள் புகையைத் தொடங்கி விட்டது.

முஸ்லிம் காங்கிரஸின் அரசியல் அதிகாரமுள்ள அம்பாறை மாவட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவாளர்கள் புறக்கணிக்கப்படுகிறார்கள் என்பதற்காக கொதித்தெழுந்துள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள், ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தில் தொடர்ந்தும் வடக்கு, கிழக்கு முஸ்லிம்கள் வஞ்சிக்கப்படுவதற்கு ஏன் இதுவரை கொதித்தெழவில்லை. ஐக்கிய தேசியக் கட்சி அரியாசனத்திற்கு வந்ததன்பின் அனைத்து முஸ்லிம்களுக்கும் செய்த சேவைதான் என்ன?

ஐக்கிய தேசியக் கட்சியின் அதிகாரத்தை தக்கவைப்பதற்கான போட்டியில் ஏன் நமது மக்கள் தொடர்ந்தும் பலியிடப்படுகின்றனர்? ஆட்சி அதிகாரங்களை அனுபவிப்பதற்கு ஐ.தே.கட்சி தேவை. ஆனால் ஐ.தே.கட்சியின் முஸ்லிம் ஆதரவாளர்கள் தேவையில்லை என கொழும்பில் ஒரு வேசமும், மக்களிடம் இன்னுமொரு வேசத்தையும் காட்டி மக்களைப் பிரித்து மோதவைத்து புறக்கணித்து நிற்கும் முஸ்லிம் மக்களின் தலைமைகள்தான் இதற்குப் பதில் சொல்ல வேண்டும். தயவு செய்து அரசியல் சதுரங்க அதிகாரப் போட்டியில் நமது மக்களைப் பலியிட வேண்டாம் என்பதே எமது வேண்டுகோளாகும்.

ஐக்கிய தேசியக் கட்சியின் வடக்கு கிழக்கு முஸ்லிம்கள் தொடர்பான திட்டமிட்ட அரசியலை ஒரு தேர்தல் கூட்டின் மூலம் மாற்றி விடலாமெனக் கனவு கண்ட நமது முஸ்லிம் அரசியல் தலைமைகள் நமது மக்களிடம் இதற்குப் பதில் சொல்ல வேண்டும். அதனை விடுத்து நமது மக்களுக்குள்ளேயே, பிளவையும் மோதலையும் ஏற்படுத்தக் கூடாது.

அம்பாரை, மட்டக்களப்பில் தனித்துவம், கண்டியிலும் கொழும்பிலும் கூட்டு என அரசியல் சந்தர்ப்பவாதம் புரிந்த நமது அரசியல் தலைமைகள் இன்று ஐக்கிய தேசியக் கட்சியின் வலையில் வகையாக மாட்டிக் கொண்டுவிட்டது. இதற்கு மையோன் முஸ்தபா இன்று கருவியாகி விட்டார் அவ்வளவுதான்.

இந்நிலைமையை கட்சி கட்சியாக, அணி அணியாகப் பிரிந்து நிற்கும் நாம் எப்படி எதிர்கொள்வது? இக்கட்சிகளா நமக்கு முக்கியம் அல்லது நமது மக்களின் அரசியல் உரிமைகளும் இருப்பும் பாதுகாப்பும் கூடிய வாழ்வா முக்கியம் என்பதை நமது மக்கள் உடனடியாக முடிவு செய்ய வேண்டிய முக்கிய கால கட்டம் இதுவாகும்.

# இன்றுள்ள முஸ்லிம் காங்கிரஸில் நான் இணைய மாட்டேன்!

## மக்கள் மத்தியிலிருந்த ஊகங்களுக்கு ஹிஸ்புல்லா ஆப்பு!

முஸ்லிம் குரலுக்கு அளித்த விசேட பேட்டி உள்ளே!

இதுவரை, இன்றுள்ள முஸ்லிம் கொங்கிரசில் சேர்வதற்கான எந்தவிதமான எண்ணத்தையும் நான் கொண்டிருக்கவில்லை. முஸ்லிம் கொங்கிரஸ்காரர்கள் என்னை கட்சியில் சேர்ந்துகொள்ளுமாறு அழைக்கவுமில்லை. அவர்கள் அழைப்பதற்கு முதல் முஸ்லிம் காங்கிரசில் சேர்வதா? இல்லையா? என்பதை நான்தான் தீர்மானிக்கவேண்டும்.

நான் முஸ்லிம் காங்கிரஸ்காரன் தான். அக்கட்சியில் தொடர்ந்தும் இருக்கவேண்டும் என்பதற்காகத் தான் நான் தொடர்ந்தும் போராட்டங்களை நிகழ்த்தினேன். முஸ்லிம் காங்கிரஸ் ஆரம்பித்த நோக்கத்தில் அக்கட்சி இருக்கவேண்டும். அப்படி இருந்தால் நானே போய் அக்கட்சியில் சேர்ந்திருப்பேன். இன்று அக்கட்சியின் போக்கு அடியோடு மாறிவிட்டது. அது நமது மக்களைக் கைவிட்டுவிட்டது.

நான் சொல்லும் முஸ்லிம் காங்கிரஸ் எவ்வாறு இருக்கவேண்டும் என்றால், மறைந்த தலைவரும், நாங்களும் உயிரைப் பணயம் வைத்துக் கட்டியெழுப்பிய முஸ்லிம் காங்கிரஸ் தான் எமக்கு வேண்டும். நாங்கள் இந்தக் கட்சியை முன்னெடுத்துச் சென்றது உயரிய நோக்கத்தை அடைவதற்கே. அந்த நோக்கம் நமது மக்களின் விடுதலையே! அந்த நோக்கத்தை திசை மாற்றாத முஸ்லிம் காங்கிரஸ்தான் நமது மக்களுக்கும் எனக்கும் வேண்டும். இப்போது இருக்கும் முஸ்லிம் காங்கிரஸ்



எனக்கு வேண்டாம். முழுக்க முழுக்க முஸ்லிம் மக்களின் நலன்களுக்கு விரோதமாக செயற்பட்டுவரும் முஸ்லிம் காங்கிரசில் போய்ச் சேருவதற்கு எனக்கு எந்த அவசியமுமில்லை. அக் கட்சியில் சேரும் எண்ணமும் எனக்கில்லை. இன்றுள்ள சூழலில் முஸ்லிம் காங்கிரசில் நான் எம்.பியாக இல்லை என்பதையிட்டு அல்லாஹ்வுக்கு நன்றி கூறுகிறேன். நான் அக்கட்சியில் இருந்திருந்தால் என்னையும் நமது மக்களுக்கு துரோகமிழைப்பதற்கு நிர்ப்பந்தித்து இருப்பார்கள். நான் இன்று நமது மக்களின் உண்மையான மனோநிலைக்காக குரல் எழுப்பி வருகின்றேன். ஆகவே, இந்த விடயத்தில் இப்போது நான் மிகத் தெளிவாகவே உள்ளேன் என்கிறார் நமது செய்தியாளரிடம் ஹிஸ்புல்லாஹ் எம்.பி!

# இலங்கை வெளிநாட்டு அமைச்சரின் அடாவடித்தனம் ஈராக்கியத் தூதுவருக்கு கண்டிப்பான எச்சரிக்கை!

(தூதுவராலய செய்தியாளர்)

உலகிலுள்ள மக்களெல்லாம் ஈராக்கைத் தாக்காதே என குரல் எழுப்பி வரும் இந்நேரத்தில் - இலங்கை அரசாங்கத்தின் வெளிவிவகார அமைச்சர் "இலங்கையில் அமெரிக்க எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை" தூண்ட வேண்டாமென கண்டிப்பான உத்தரவினை ஈராக்கியத் தூதுவருக்கு கடந்த வாரம் பிறப்பித்துள்ளார்.

ஈராக்கியத் தூதுவரை தனது வெளிநாட்டு அமைச்சுக்கு அழைத்தே இக்கண்டிப்பான ராஜதந்திர உத்தரவை அமெரிக்காவின் குட்டிச் செல்லப்பிள்ளையான டிரோன் பெர்னாண்டோ வழங்கியுள்ளார். இதுவரையில் புஷ்ஷின் செல்லப் பிள்ளையான டொனிபிளேயருக்கு இப்போது ஒரு குட்டித் தம்பியாக டிரோன் பெர்னாண்டோ வந்து விட்டார்!



ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்தின் முக்கிய சிரேஷ்ட அமைச்சர்களில் ஒருவரான டிரோன் பெர்னாண்டோவின் இவ் உத்தரவு இலங்கை அரசாங்கத்தின் ஈராக் தொடர்பான அரசியல் வெளிவிவகாரத் துறை நிலைப்பாடு என்பதில் யாருக்கும் சந்தேகம் இருக்க முடியாது?

இலங்கை வெளிவிவகார அமைச்சின் இவ் அடாவடித்தனத்திற்குப் பின்னால், அமெரிக்காவுக்கு சேவகம் செய்யும் இலங்கை அரசாங்கத்தின் நிலைப்பாடு வெளிப்படையாகத் தெளிவுப்படுத்தப்பட்டாலும் நாட்டு மக்களின் அடிப்படை உரிமை மறுக்கப்படுவதையும் மக்களின் அடிப்படை இறைமை மீது அரசாங்கம் மீறல்களை நடாத்த முனைகிறது என்பதையும் இந்த விடயத்தில் நாம் உணர்ந்து கொள்ள வேண்டும்.

எவ்விதமான நியாயங்களும் இன்றி, அமெரிக்கவின் அரசியல் இராணுவாத பொருளாதார நலன் சார்ந்த ஏக போக அடாவடித்தனத்திற்கு பணிய மறுத்துவரும் ஈராக்கிய மக்களை அநியாயமான போரின் மூலம் கொன்றுவிட வேண்டாமென; ஆதிக்க அமெரிக்காவுக்கு எதிராக உலக மக்கள் அணிதிரண்டு குரல் எழுப்பி வருவது இலங்கை அரசாங்கத்திற்கு பெரும் அலர்ஜியாக இருந்து வருகிறது.

உலக மக்களின் அமெரிக்காவுக்கு எதிரான குரலை கண்டு திகைத்து வரும் இலங்கை அரசாங்கம், அண்மைக் காலத்தில் அமெரிக்காவுக்கு எதிராக பகிரங்கமாக இலங்கையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டப் பேரணிகள் பொதுக்கூட்டங்கள் தொடர்பான "அரசியல் செயற்பாடுகளுக்கு" வேட்டு வைக்கும் பணியை இப்போது தொடங்கியுள்ளது. அதன் முதற்கட்டமாகவே ஈராக்கியத் தூதுவர் எச்சரிக்கப்பட்டுள்ளார்.

இலங்கையின் விடயங்களில் தலையிட வேண்டாமென்றும், அமெரிக்காவுக்கு எதிரான ஆர்ப்பாட்டங்களை ஏற்பாடு செய்ய வேண்டாம் என்றும், அப்படி செய்வதற்கான ஆதாரங்கள் கிடைக்கப்பெறின் தூதுவராலய செயற்பாடுகளை மட்டுப்படுத்த வேண்டி ஏற்படும் எனவும் எச்சரிக்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளது.




அதிகாரமில்லாது பொம்மை போன்று பாராளுமன்ற உறுப்பினர் பதவி வகிக்க நான் தயாரில்லை. இரண்டில் ஒரு முடிவு எனக்குத் தெரியவேண்டும்! உங்கள் தேசியப் பட்டியல் எம்பிப் பதவியைப் தூக்கி யெறியத் தயாராகவுள்ளேன். நடப்பது யூ.என்.பி.ஆட்சிதானே?

## கரையோர மாவப்பம்

துடைப்பமெடுத்துத்
தூசு தட்டித்
தூளி செய்து தூக்கி வை
பெருநாள் முடிந்தது
இனித் தேவையில்லை இது
மறு பெருநாள் வரும்
ஒருநாள்
அதுவரை சும்மா
ஆட்டிக் கொண்டிரு
சென்ற பெருநாளில் இதற்கு
பெரு மவுசு பெருங் கூட்டம்
கரையோர மாவப்பம் உண்டு
புரையேறிப் பலர் ஏப்பம்
புளித்த மா வென்றாலும்
புதிதாய்ச் சுடச் சுடச்
சுட்டதாலும்
ஏகமாய் விற்பனை
வேகமாய் வெற்றி

அத்தோடு முடிந்தது இனி
அதையேன் கிளறுகிறாய்
ஆறட்டும் சும்மா
ஆட்டும் தூளியில் விடு
இன்னொரு பெருநாள்
பின்னொரு நாள் வரும்
அந்நாளில் எடுத்து
அடுக்கி வைக்கலாம்
அடுப்பூதி
செய்முறைகள் செப்பங்கள்
செய்மதிகளில் செய்து
வித விதமாய்
ஒலி ஒளி பரப்பாக்கலாம்
மறுபடியும்
மரம் தறித்துக்
கடை பரப்பி விற்கலாம்
அதற்கு முன்
உடையும் மாற்றிப்
பெயரும் மாற்றலாம்

கரையோர மாவப்பம்
அல்ல இது

அது புளித்த மாவு
இது வேறு இதன் பெயர்
தென் கிழங்குத் தீனிமா
தெவிட்டாத மாப்பண்டம்
தின்னக் கிடையாத
தீன் பண்டம்
ஆவி பறக்க வாயூற
"அவென" வாய் பிளந்து
கேட்கும்
ஆவின் கூட்டம் கூடும்
கூவி விற்கலாம் பொறு.

அதுவரையும்
சும்மா
அங்கே
உட்கார்ந்து
ஆட்டிக் கொண்டிரு

-என்.ஏ.தீரன்.

அரசியல்வாதிகளே! நீங்கள் மக்களுக்கு கொடுத்த வாக்குறுதிக்கு நமது கவிஞர் ஒருவரின் எதிர்விளைவுதான் இது - சிளம்

இலங்கை முஸ்லிம்களின் சொந்தக்குரல்! [illegible]தங்கள், வாங்கிப் படியுங்கள், எழுதுங்கள்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழைச்சேனையிலிருந்து ஒரு கடிதம்

அஸ்ஸலாமு அலைக்கும்!

அன்பின் முஸ்லிம் குரல் பத்திரிகை ஆசிரியர் அவர்களுக்கு, உங்கள் பத்திரிகை வாசகன் றபீக் எழுதும் செய்தி: இந்த நாட்டின் முஸ்லிம்களை ஈவிரக்கம் இன்றிக் கொலை செய்யும் இந்த தருணத்தில் முஸ்லிம்களின் அபிலாஷையை வென்றெடுப்பதற்காக வேண்டி நீங்கள் முஸ்லிம் குரல் எனும் நமக்கான பத்திரிகையை ஆரம்பித்திருக்கின்றீர்கள். ஜசாக்கல்லா கைறாஹ். நான் எனது ஊரான வாழைச்சேனையில் நடந்த முஸ்லிம் மனித இனக் கொலை பற்றி எழுத எண்ணி உள்ளேன். நீங்கள் அதை உங்கள் பத்திரிகையில் தயவு செய்து பிரசுரியுங்கள்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் வாழைச்சேனையிலும் அதனை அண்மிய முஸ்லிம் பிரதேசங்களில் நடந்த மனித இன வெறித்தாக்குதலில் எல்.ரி.ரி.ஈ யினரால் கொல்லப்பட்ட முஸ்லிம்களின் விபரம் பின்வருமாறு:

27.06.2002 ஆம் திகதி 10 படகுகள் தீவைத்து எரிப்பு. அதே தினத்தில் 158 முஸ்லிம் வர்த்தகர்களின் கடைகள் தீ வைத்து எரிப்பு. 2 முஸ்லிம்கள் சித்திரவதை செய்யப்பட்டு படுகொலை. 5 முஸ்லிம்கள் கடத்தப்பட்டுக் கொலை, 5 முஸ்லிம்கள் குண்டுத்தாக்குதலில் பலி. 63 பேர் படுகாயம், 38 வீடுகள் சேதம். 22.06.2002 ஆம் திகதி செம்மன் ஓடை குபா பள்ளிவாசல் மீது தாக்குதல் என வன்முறைகள் தொடர்ந்த வண்ணமுள்ளன. இதை தொடர்ந்து 02.12.2002 இல் எனது சகோதரர் சுட்டுக் கொலை செய்யப்பட்டார். இவர் கொலை செய்யப்பட்ட காரணத்தினால் அவரின் உம்மாவும் மற்றும் தங்கையும் அவரின் மறைவைத் தாங்க முடியாத காரணத்தினால் அதிர்ச்சியில் மரணமானார்கள். இதை தொடர்ந்து 04.01.2003 ஆம் திகதி ஆட்டோ சாரதி அப்துல் தவாப் முஹம்மது ஹுசைன் (65) நள்ளிரவில் கடத்தப்பட்டு வாழைச்சேனை கல்மடு எனும் எல்.ரி.ரி.ஈ இனரின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதியில் கைகள் கட்டப்பட்டு கழுத்து வெட்டப்பட்டு படுகொலை. இவ்வாறு முஸ்லிம்களுக்கு எதிராக இன்று வரை தொடரும் வன்முறைகள் பல இன்றுவரை எமக்கோர் நியாயம் தரப்படவில்லை. அவர்களுக்கு தேவைப்படும் பொழுது எல்லாம் எமது முஸ்லிம் இளைஞர்களை கடத்தி அவர்களின் உடம்பில் உள்ள இரத்தம், கிட்னி முதல் அவர்களுக்கு தேவைப்படும் பாகங்களை அவர்கள் எடுத்து விட்டு எமது முஸ்லிம்களின் உடம்பை புதைத்தோ அல்லது சுடப்பட்டே அல்லது எரித்தோ எம்மைப் பற்ற வைத்துவிடுவார்கள்.

உதாரணத்துக்குச் சொல்லப் போனால், எனது பாடசாலை நண்பன் ஒருவன் 16.05.2001 ஆம் திகதி முதல் காணாமல் போனார் 3 நாட்கள் கழித்து இவர் எல்.ரி.ரி.ஈ யினரின் கட்டுப்பாட்டுப் பகுதிக்கும் முஸ்லிம் கிராமத்திற்கும் இடைப்பட்ட இடத்தில் கண்டு பிடித்த போது இவர் குற்றுயிராக இருந்தார். அவர் உடம்பில் சிறியளவிலேனும் இரத்தம் இல்லை. இப்படி எல்லாம் எமது முஸ்லிம் மக்களுக்கு நடக்கின்றது. நாள் தோறும் நடக்கும் இந்த கொடூரங்களில் இருந்து எம்மை எல்லாம் வல்ல அல்லாஹ் பாதுகாத்தருள்வானாக.
ஆமீன் யாரப்பல் ஆலமீன்.

எம்.எம்.றபீக்,
வாழைச்சேனை.

**ஒருவர் ஒரு கருத்தை சொல்லிவிட்டார் என்பதற்காக உங்கள் கருத்தை நீங்கள் சொல்லாமல் இருக்கலாமா?**

நாம் எழுதுவதற்கும், நமது மக்களுக்குள் கருத்துக்களை பரிமாறிக் கொள்வதற்கும் விவாதங்களைத் தொடங்கவும், தொடரவும் தயாராகவுள்ளோம்! உங்கள் கருத்துக்களை சுருக்கமாக எமக்கு எழுதி அனுப்புங்கள்!

*-பிரதம ஆசிரியர்*

# நமது ஆளுமைகள்

மர்ஹூம் பதியுத்தீன் மஹ்மூத்

④

## குவாஜா கமாலுத்தீனும், பதியுத்தீன் மஹ்மூதும்

வரலாற்றுக்கும் தனிமனித வாழ்க்கை சரித்திரத்திற்கும் மிக நெருங்கிய தொடர்புண்டு. ஏனெனில் சமூக மேம்பாட்டுக்காக உழைத்த சிந்தனையாளர்கள், அறிஞர்கள், சமூக சீர்திருத்தவாதிகள், அரசியல் தலைவர்கள் சிலரது வாழ்வு நமது சமூக வாழ்வோடு பின்னிப் பிணைந்துள்ளன. நமது சமூக உருவாக்கத்திற்கு அவர்களது பங்களிப்புக்கள் பக்கத் துணையாக நின்று உரமாகியுள்ளது. நமக்கும் இந்த ஆளுமைகளின் இலட்சியங்களும் இலக்கும் முன்மாதிரியாக அமையவேண்டும்.

அம்மாபெரும் ஆளுமைகளின் பதிவுகளை நமது நிகழ்கால சந்ததியினருக்கும், எதிர்காலத்திற்கும் கையளிப்பதே இத்தொடரின் நோக்கம். நீங்களும் நமது சமூக ஆளுமைகள் பற்றிய கட்டுரைகளை எமக்கு எழுதலாம்.

(பிரதம ஆசிரியர்)

குவாஜா கமாலுத்தீன் அவர்களும் பதியுத்தீன் அவர்களுக்கும் இருந்த நட்பு மிகவும் நெருங்கியதாக இருந்தது. ஜனாப் பதியுத்தீனின் தூய்மையான உள்ளத்தாலும், உழைப்பாலும் நட்பாலும்தான் பலர் அவரோடு நெருங்கியதும் அழியாததுமான நட்புக் கொண்டிருந்தனர்.


குவாஜா கமாலுத்தீன் யார் என்பதைப் பார்ப்போம், அவர் ஒரு இஸ்லாமியப் பேரறிஞர் என்பது மிகைக் கூற்றல்ல. இங்கிலாந்திலே வோக்கிங் என்ற என்ற இடத்திலே போபால் ராணியால் (Begum of Bhopal) ஒரு பள்ளிவாசல் கட்டப்பட்டிருந்தது. அங்கு ஒரு முஸ்லிம் மிஷனை இவர் ஆரம்பித்தார். அவ்வோக்கிங் மிஷனின் ஸ்தாபகராக அவர் இருந்தார். இவர் தனது பரிஸ்டர் பதவியைத் துறந்துவிட்டு இங்கிலாந்து சென்றவராவர். அவரது மிஷன் இங்கிலாந்திலே பெரும் இஸ்லாமிய சேவையிலே ஈடுபட்டிருந்தது. அதன் முயற்சியும் இங்கிலாந்திருந்த லோட்ஹெட்லியை முஸ்லிமாக்கியது. இச்சம்பவம் உலகத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. இன்னும் பலர் அதன் பயனாக இஸ்லாத்தைத் தழுவினர். மிகவும் புகழ்பெற்ற "இஸ்லாமிக் ரிவீவ்" (Islamic Review) என்னும் சஞ்சிகையை வெளியிட்டார். ஜனாப் பதியுத்தீன் தனது 14 வது வயதிலேயே அதனை வாசிக்கத் துவங்கியவராவர். குவாஜா கமாலுத்தீன் அவர்கள் சிறந்த நாவன்மை மிக்க பேச்சாளராவார். பல இஸ்லாமிய ஆராய்ச்சித் துறையிலான நூல்களை வெளியிட்டவருமாவர்.

அவரோடு ஜனாப் பதியுத்தீன் கொண்ட நட்பு மிகவும் தூய்மையும், புனிதமும் வாய்ந்ததே. பதியுத்தீன் இலங்கை முஸ்லிம் லீக்கின் பொதுக் காரியதரிசியாக இருந்து, முஸ்லிம் சமுதாயத்திற்குப் பெற்றுக் கொடுத்த நன்மைகளைக் குவாஜா கமாலுத்தீன் அவர்கள் அறிந்திருந்தார்கள். பதியுத்தீனின் சேவைகளை முன்பே அவர் அறிந்திருந்தார் என்பதற்கு, அவர் எழுதியிருந்த கடிதக்குறிப்பே போதுமானதாகும். "உங்களை நான் நன்றாக அறிந்திருக்கிறேன். உங்களை எனக்கு அறிமுகப்படுத்துவதற்கு உங்கள் பெயர் மட்டுமே மிகவும் போதுமானதாகும். உங்களை நான் இங்கே வரவேற்கின்றேன். விடுமுறைக் காலங்களிலே என் வீடாகிய மான்செஹராவுக்கு வந்து என்னுடன் வசித்து விட்டுப் போகலாம்." இக்கடிதம் இந்தியாவில் இருந்த முஸ்லிம் பெரியார்களும் பதியுத்தீனைப் பற்றிப் போதிய அளவு அறிந்திருந்தனர் என்பதற்கு ஒரு சான்றாகும். குவாஜா கமாலுத்தீன் அவர்கள்தான் பதியுத்தீனுக்குச் சர்வதேச அரங்கிலே பங்கு பற்றுவதற்காக ஊக்கத்தையும், உற்சாகத்தையும் கொடுத்துப் பயிற்சிபெறச் செய்தவராவர்.

இருவருக்கும் இடையே இருந்த பற்று நாளுக்கு நாள் மிகவும் மேலோங்கி வளர்ந்து வரலாயிற்று. எனவே ஜனாப் பதியுத்தீனுக்குக் குவாஜா கமாலுத்தீன் அவர்களோடு பல காலங்களைக் கழிக்கச் சந்தர்ப்பம் கிடைத்து விட்டது. குவாஜா கமாலுத்தீன் அவர்கள் திருக்குர்ஆனுக்கு விளக்க உரை எழுதுவதற்கு மிகவும் ஆவலுடனும் ஆசையுடனும் இருந்தார். அவர் அதனை எழுதத் தொடங்கியதோ தனது கடைசிக் காலத்திலாகும். வயது முதிர்வு காரணமாக அப்பொழுது அவர் மிகவும் தளர்வுற்றுக் காணப்பட்டனர். அத்தோடு பாரிச வியாதியோடும் பீடிக்கப்பட்டிருந்தார். எனவே படுக்கையில் சாய்ந்து கொண்டிருந்தவாறேதான் திருக்குர் ஆன் விளக்கவுரைகளைப் (Commentaries of Holy Quran) ) பதியுத்தீன் அவர்களிடம் கூறிக் கொண்டிருப்பார். அவர் பக்கத்தில் இருந்தவாறே பதியுத்தீன் அவர்கள் அதனை மிகவும் செவிசாய்த்து எழுதிக் கொண்டிருப்பார். அரபு எழுத்துக்களாகிய அலிப், லாம், மீம் என்பவற்றுக்கு இருபத்தி ஐந்து பக்கங்களுக்கு மேலான விளக்கங்களைக் கூறிக் கொண்டு சென்றிருக்கிறார். பதியுத்தீன் அவர்கள் எழுதியுள்ள விளக்கங்களை அவர் சரிபிழை பார்ப்பார். பின் இங்கிலாந்திலிருந்து வெளிவந்த ஆங்கில வெளியீடான "இஸ்லாமிக் ரிவீவ்" என்னும் சஞ்சிகையில் பிரசுரிப்பதற்காக "வோக்கிங் மிஷனுக்கு" அனுப்புவார். அவ்வாறு விளக்கங்களை அளித்ததன் பின் அவை எல்லாவற்றையும் ஒரு புத்தகமாக ஆக்கி வெளியிட வேண்டுமென்று மிகவும் ஆசையோடே இருந்தார்.

பதியுத்தீன், குவாஜா கமாலுத்தீன் அவர்களது வீட்டில் தங்குவதற்காகச் சென்றதும், அங்கே அவர் இருக்கும் அறைக்குப் பக்கத்து அறையையே பதியுத்தீனுக்காக ஒதுக்கிக் கொடுத்தார். ஒரு மாத காலமளவு அவரது வீட்டில் தங்கிவிட்டுக் காபுலுக்குப் போவதற்கு ஆயத்தமானார். குவாஜா கமாலுத்தீன் அவர்கள் மறு அறையில் சுகவீனம் காரணமாகச் சாய்ந்து கொண்டிருந்தார். பதியுத்தீன் பிரிந்து செல்வதற்காக அவரிடம் வந்த பொழுது அவரைக் கட்டித் தழுவினார். பின் திருக்குர்ஆனைக் கையில் ஏந்திக் கொண்டு "பதியுத்தீன், இதனைப் பற்றிப் பிடித்துக் கொள்ளுங்கள். இதுவே எல்லாம். உங்களது வெற்றிக்குத் தேவைப்பட்டதும் அதுவே" (Bediudin, Hold fast to this. This is every thing. That is all you need to success) என்றார்.

அன்னியோன்யமான தொடர்புகளை ஜனாப் பதியுத்தீன் அவர்கள் குவாஜா கமாலுத்தீன் அவர்களுடன் கொண்டுள்ளார் என்பதை அவரது சகோதரரும் வழக்கறிஞருமான ஜனாப் சலாஹுதீன் அவர்கள் அறிந்து கொண்டதும் மிகவும் சந்தோஷமடைந்தார். ஜனாப் பதியுத்தீன் அவர்களது ஆத்மீக லௌகிக வாழ்வு மீது மிகவும் கண்ணும் கருத்துமாகவே வழக்கறிஞர் சலாஹுதீன் அவர்கள் இருந்து வந்தார்.



எனவே, இவ்வாறான தொடர்பு அவருக்கு மகிழ்ச்சியைக் கொடுத்து1932 ஆம் ஆண்டு பதியுத்தீன் மஹ்மூத் அவர்களிடம் எழுதிய கடிதமொன்றிலும் வழக்கறிஞர் சலாஹுதீன் அவர்கள் இவ்வாறு குறிப்பிட்டிருந்தார்.

"நீங்கள் எமது மிகவும் மதிப்புக்குரிய தலைவர் குவாஜா கமாலுத்தீன் சாஹிப் அவர்களோடு வசித்து வருவதைக் கேள்விப்பட்டதும் மிகவும் சந்தோஷம் அடைந்தேன். நீங்கள் அவர்களோடு சிலகாலம் தங்கிப் பழகுவதற்கு ஒரு சந்தர்ப்பம் கிடைத்ததையிட்டு இறைவனுக்கு நன்றி செலுத்த வேண்டும். மதம் பற்றிய பாடங்களைப் படித்துக் கொள்வதற்காக இந்த உலகிலே இப்பொழுது ஒரு முஸ்லிம் இருப்பதாயின் மிகவும் தூரத்திலாயினும் அவர் பாதத்தடியில்தான் நீர் இருக்கின்றீர். அவர்தான் குவாஜா சாஹிப். இலங்கையில் இருந்து வெளியே சென்று ஒரு பெரிய மனிதரையும், கற்றறிந்த மார்க்கப் பக்தரையும் காண வேண்டுமென்ற ஆசை என்னிடம் இருப்பதாயின் அவர்தான் அல்லாஹ் உங்களோடு சேர்த்து வைத்த பெரியாராவர். இதற்காக நீங்கள் இறைவனிடம் இலட்சக்கணக்கான நன்றிகளைச் செலுத்த வேண்டும். அல்லாஹ் தான் எமது நல்லெண்ணங்களையும் நிறைவேற்றி வைப்பவனாவான். எனவே அல்லாஹ், நான் இறப்பதற்கு முன்பே அவரை நேரில்காண்பதற்கு எனக்கு ஒரு சந்தர்ப்பத்தை ஏற்படுத்தித் தருவான் என்று எண்ணுகிறேன். இஸ்லாத்திற்குச் சேவை செய்வதற்காக 'நாம் மதிப்பளிக்கக் கூடிய ஒருவர், இவ்வுலகிலே இருப்பாராயின் அவர்தான்' குவாஜா சாஹிப் ஆவர்.

மரியாதையை நீங்கள் அவருக்குக் கொடுத்து, அவரோடு தங்கியிருக்கின்ற காலத்திலே எவ்வளவு அதிகமாக மதப் பாடம் கற்றுக் கொள்ள இயலுமோ அவ்வளவையும் கற்றுக் கொள்வதற்கு மிகவும் ஆவலோடு இருக்கவேண்டும். இவ்வகையில் உமக்குக் கிடைத்துள்ள அதிர்ஷ்டம் மிகவும் ஆசையூட்டுவதாகவே இருக்கின்றது. இவ்வாறான ஒரு சந்தர்ப்பம் எனது சகோதரர் ஒருவருக்குக் கிடைத்ததையிட்டு நான் மிக்க மகிழ்ச்சியுணர்வு அடைகின்றேன். எனது மிகவும் தாழ்மையான சலாத்தை மிகவும் மரியாதைக்குரிய இமாமாகிய அவருக்கு தயவு செய்து சொல்லவும். எனது ஆத்மாக்காகவும் அவரைக் காண வேண்டும் என்ற எனது ஆசையைப் பூர்த்தி செய்து கொள்வதற்காகவும், பிரார்த்தனை செய்யும் படி அவரிடம் கோட்டுக் கொள்ளவும்."

இப்படிக்கு,
அன்புள்ள
[illegible]

# மத்ரஸாவை அழித்து அரசியல் நடத்தலாமா?

ஏறாவூரில் அமைக்கப்பட்டுள்ள கலாசார மண்டபத்தில் இடம்பெறும் செயற்பாடுகள் இவ்வூர் மக்களுக்கு பெரும் கவலையை கொடுத்திருக்கின்றன. அதுமாத்திரமன்றி இஸ்லாமிய கலாசார ரீதியிலும் ஆன்மீக அடிப்படையிலும் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியிருப்பது குறித்து முஸ்லிம்கள் விசனம் தெரிவிக்கின்றார்கள். ஏறாவூர் முஸ்லிம் பிரதேசத்தில் கலாசார மண்டபம் ஒன்றின் தேவை மிக நீண்டகாலமாக இருந்து வந்தது.

அப்போது பிரதியமைச்சராக இருந்த ஹிஸ்புல்லாவிடம் கலாசார மண்டபம் அமைப்பதற்கான உதவி கோரப்பட்டது. அவ்வேளை "போதுமான நிலத்தை பெற்றுத்தந்தால் வாகனங்கள் நிறுத்தும் வசதியுடன் கூடிய குளிரூட்டப்பட்ட அதிநவீன கலாசார மண்டபமொன்றை அமைத்துத் தருவதற்கு நான் தயாராக இருக்கின்றேன்" என ஹிஸ்புல்லாஹ் அப்போது பதிலளித்தார். போதுமான நிலம் பெறுவது என்பது ஏறாவூர் முஸ்லிம் மக்களால் நிறைவேற்ற முடியாத விடயமாக இருந்தது என்பது ஹிஸ்புல்லாஹ்வுக்கு நன்கு தெரிந்ததே.

சில காலத்தின் பின்னர் தற்போதைய பிரதியமைச்சர் பசீர் சேகுதாவூதிடம் இக்கோரிக்கை முன்வைக்கப்பட்டது. அவர் அப்போது அமைச்சர் அஷ்ர.".ப்பின் இணைப்பாளர் பதவியில் இருந்தார். அதனால் பெருந்தொகை நிதியை பெற்றுக் கொள்வது சாத்தியமாயிற்று. இந்நிலையில் முஸ்லிம் ஜும்ஆ பள்ளிவாசல் பரிபாலன சபையுடன் தொடர்பு கொண்டு குர்ஆன் மத்ரஸா இருக்கும் இடத்திலேயே கலாசார மண்டபத்தை அமைக்கத் தீர்மானித்தார்.

இந்த மத்ரஸா கடந்த பதினைந்து வருடங்கள் முஸ்லிம்களுக்கு ஆன்மீக கல்வியை ஊட்டியது. இதனால் மக்கள் மத்ரஸாவை கைவிட முடியாத நிலையிலிருந்தனர். இச்சந்தர்ப்பத்தில் பசீர் சேகுதாவூத் பலமாக வாக்குறுதிகளை பள்ளிவாசல் நிருவாகத்தினருக்கு கொடுத்தார். நான் கொண்டு வந்திருக்கும் பல இலட்சம் ரூபாய் பணத்தின் மூலம் அமைக்கப்படும் கலாசார மண்டபத்தில் முதலாம் பகுதியில் ஆன்மீக கல்வி போதிக்க தொடர்ச்சியாக இடமளிக்கப்படும். அத்துடன் மேல் மாடியில் இஸ்லாமிய கலாசாரம் தொடர்பான செயற்பாடுகள் மாத்திரமே நடைபெறும் என்பதுதான் அந்த வாக்குறுதி யாகும். ஆனால் இன்று இரண்டுமே நடைபெறவில்லை. கலாசார மண்டபத்தின் கீழ்ப்பகுதி அரசியல் குண்டர்கள் உறங்குமிடமாக பயன்படுத்தப்படுகிறது. இங்கு போதைப் பொருட்களும் தாராளமாய் புழக்கத்தில் விடப்படுகின்றன.

மேல்மாடியில் அரசியல் காய் நகர்த்தல் கூட்டங்கள் அவ்வப்போது இடம் பெறுகின்றன. அத்துடன் அரசாங்க மானியம் மற்றும் கொடுப்பனவுகள் வழங்குவதாக கூறப்பட்டு அடிக்கடி பதிவுகள் நடாத்தி முஸ்லிம்களை அலைக்கழிக்கும் ஏமாற்று நிகழ்ச்சிகள் இடம் பெறுகின்றன. சுருங்கக்க் கூறின் இக்கலாசார மண்டபம் பிரதியமைச்சர் பசீர் சேகுதாவூத்தின் அரசியல் செயற்பாட்டுக் காரியாலயமாகவே இயங்குகிறது. மத்ரஸாவும் இல்லை, கலாசார மண்டபமும் இல்லை. அங்கு ஏலவே நடைபெற்று வந்த எந்த விடயங்களையும் மேற்கொள்ளவும் முடியவில்லை. இதுதான் எங்கள் நிலைமை!

*-எம்மார் - ஏறாவூர்*

# ஆம் நாளை அவர்கள் வருவார்கள்?



*ஆம் எங்கள்*
*உரிமைகளையும் உடைமைகளையும்*
*இன்று இருப்பவையும் இழக்கின்ற*
*காலம் வந்து விட்டது.*

*எங்கள் முன் வந்தவர்கள்*
*எம்மிடம் நிறைய பேசினார்கள்*
*நாங்கள் எம்மை அவர்களிடம்*
*வளைந்துக் கொடுத்தோம்.*

*மேடைகளில் தொண்டைத் தண்ணீர் - வத்த*
*உரத்த குரலில் கத்தினார்கள் - எம்*
*உடமைகளையும் உரிமைகளையும்*
*இருப்பையும் பாதுகாத்துத் தருவோம் என்று.*

*ஆம் நாங்களும் அவர்களை*
*நம்பினோம் எங்கள் இழப்புக்காக*
*போராடக் கூடிய ஒரே ஒரு ஆயுதமான*
*வாக்குரிமையை அவர்களிடம் ஒப்படைத்தோம்.*

*இப்போது நாங்கள் தெளிந்து விட்டோம்*
*அவர்கள் தலைமைத்துவத்திற்கும் எம்மை*
*இரண்டாக பிளவு படுத்துவதற்கும்*
*அரசியல் காய் நகர்த்தலுக்காகத்தான்*
*எம்மிடம் வந்தார்கள்*

*நாளை புலரட்டும்*
*எம்மிடம் இவர்கள் வருவார்கள்*
*நாம் அப்போது மௌனமான*
*குரலில் உரத்துச் சொல்வோம்.*

*எம் பின்னால் வாருங்கள்*
*உரிமைகளையும் இழப்புக்களையும்*
*நாம் அனைவரும் சேர்ந்து*
*பெற்றுக் கொள்வோம்*
*என்று!*

ஏ.நிஸாம், வாழைச்சேனை.

# இஸ்லாமிய கட்டிடக் கலை [இந்தியா]

**நீங்களும் படிக்கலாம் - சில குறிப்புகள்.**

அரேபிய முஸ்லிம்கள் 7 ஆம் நூற்றாண்டுக்குப்பின் சிரியா, எகிப்து, வடஅபிரிக்கா, இந்தியா, ஸ்பெயின் முதலிய நாடுகளை வென்ற போதுதான் இஸ்லாமிய கட்டிடக் கலை உறுதியுடன் தோன்றியது. அரேபியர்கள் இயற்கையாகவே கலை உணர்வு கொண்டவர்களாகவும், சிறந்த கலை அம்சங்களை ஏற்றுக் கொள்ளும் பரந்த மனப்பான்மை உடையோராகவும் இருந்தனர். ஆகவே, இவர்கள் வெற்றி கொண்ட நாடுகளிலுள்ள கலைகளைத் தழுவியும் தங்கள் கட்டிடங்களை கட்டினர்.

சிரியா, எகிப்திலும் தோன்றிய கட்டிடச் சிற்பம், ஸ்பெயினிலும், வட ஆபிரிக்காவிலும் தோன்றிய மோக் ராட் கட்டிடச் சிற்பம், பைசாந்தியாக் கட்டிடச் சிற்பம், 6ஆம் 7ஆம் நூற்றாண்டையே பாரசீகக் கட்டிடச் சிற்பம், ஆகியவைகளை இது கொண்டிருந்தது.

ஸ்பெயினிலுள்ள அல் ஹம்ரா, கிரணடா அரண்மனைகளும், துருக்கியிலுள்ள சுலைமானிய மசூதியும் கெய்ரோவிலுள்ள இபன்துவான் மசூதியும் இஸ்லாமிய கட்டிடக் கலைக்கு எடுத்துக் காட்டுகளாகும். பனிரெண்டாவது நூற்றாண்டில் முஸ்லிம்கள் டெல்லியை கைப்பற்றி, இந்தியாவில் தமது ஆட்சியை நிறுவிய பின் - இஸ்லாமிய சிற்பக் கலை இந்தியாவில் தோன்றியது. இக்கட்டிடக் கலையை மதிப்பிடுவதற்கு மொகலாயருக்கு முற்பட்டவை, (1206 - 1526), மொகலாய காலத்தவை (1526-1859) என ஆய்வாளர்கள் பிரித்துப் பார்க்கின்றனர்.

மொகலாயருக்கு முற்பட்டவை

மொகலயருக்கு முற்பட்ட இந்திய இஸ்லாமிய கலைமரபில் முதன்மையானது கஜனி முகம்மது மரபு. இம்மரபு இந்தியாவில் தோன்றவில்லை என்றாலும், இந்தியக் கலையில் மிகுந்த செல்வாக்கு பெற்றுள்ளது. மற்றும் இது மேல்நாட்டுக் கலை மரபினையும் கீழ்நாட்டு கலை மரபினையும் இணைக்கும் சங்கிலியாகும். இதற்கு அடுத்தது பட்டாணிய மரபு ஆகும். இம்மரபு வட இந்தியாவில் கில்ஜி துக்ளக் சையத்லாடி வம்ச மரபில் பயிலப்பட்டது. முதன் முதலாக டெல்லியிலும், அஜ்மீரிலும் இரண்டு பெரிய மசூதிகளை கட்டினார்கள்.

பழைய இடங்களிலுள்ள குதுப் மினார் (1231) கில்ஜி காலத்திற்கு சிறந்த எடுத்துக்காட்டாகும். 250 அடி உயரமுடையது. ஒப்பற்ற சிற்ப வேலைப்பாடுகள் நிறைந்தது. அதன் குதிரை லாட வளைவுகளும் சலவைக்கல் ஒட்டுக்களும் கில்ஜி வம்சகால கட்டிட சிற்பக் கலையின் சிறப்பியல்புகளாகும். இந்தியாவின் இஸ்லாமியக் கட்டிடக்கலையின் மிகச் சிறந்த பதிவுமாகும் இது!



டெல்லியில் உள்ள குதுப் மினார்

## உறவுப் பாலம் அமைப்போம்!

முஸ்லிம்களுக்கென சுதேசமான பத்திரிகையின் தேவை குறித்து பலராலும் பேசப்படும் இக்காலப்பகுதியில் காத்திரமான பாத்திரங்களை ஏற்று "முஸ்லிம் குரல்" வெளிவருவதானது மகிழ்ச்சியைத் தருகிறது.

பத்திரிகையின் விசாலம், வடிவமைப்பு, உள்ளடக்கங்கள் என எமது எதிர்கால எண்ணக் கருத்துகளுடன் சங்கமமாகி செல்லும் "முஸ்லிம் குரல்" பிரசவம் பிரமிக்க வைக்கிறது.

திறன்மிக்க முஸ்லிம் பத்திரிகை ஒன்றை நீண்ட காலம் நிலைபெறச் செய்ய வாசகர்கள் ஒத்துழைப்பும், பணம் படைத்த தனவந்தர்களின் உதவிக்கரங்களும் என்றும் அதன் பால் நீள வேண்டும்.

தமிழ் ஈழ போராட்டத்தின் குரலாக ஒலித்துவரும் தமிழ் பத்திரிகைகளின் பக்கம் முஸ்லிம் சமூகம் முண்டியடித்து மூழ்கிப் போய் வாசகப் பங்களிப்பை பகிர்ந்து கொண்டு வருகின்றனர். மூலை முடுக்கெல்லாம் தமிழ் பத்திரிகைகளாகவே இருக்கின்றன. பல்லாயிரக் கணக்கான பிரதிகள் அச்சிடப்பட்டு விநியோகிக்கப்படுகின்றன. முதலீடுகள் பெருகுகின்றன. முஸ்லிம்களின் மூளையை சலவை செய்து முஸ்லிம்களுக்கெதிராகவே அதன் போக்குகள் இருந்து வருவதை நம்மவர்கள் இன்னும் கண்டு கொள்ளவில்லை. நமது விரல்களாலேயே நமது கண்களை குத்திக் கெடுத்துக் கொண்டதை நாம் உணராமல் இருக்கிறோம்.

முஸ்லிம்களின் குரலை தேசிய பிராந்தியங்களில் ஒலிக்க வைக்க பல பத்திரிகைகள் மாத - வார இதழ்களாக வெளிவந்து கொண்டிருப்பதை மறுக்க முடியாது. ஒதுக்கவும் முடியாது. கடந்த காலங்களிலும் பல பத்திரிகைகளைப் பார்த்தோம். அவைகள் இன்று வெளிவருவதில்லை. இந்நிலை "முஸ்லிம் குரலுக்கு" ஏற்படாமல் பார்த்துக் கொள்வது அதன் அபிமானிகள் மீதுள்ள பொறுப்பாகும்.

அனுபவம், ஆற்றல் மிக்க நிருவாகம் ஒன்று "முஸ்லிம் குரலின்" பின்புலத்தில் இருப்பதனை இதுவரை வெளிவந்த இதழ்களின் ஒவ்வொரு பக்கங்களும் படம் போட்டு காட்டுகின்றன. இதனால் நீண்ட காலம் நிலைத்து நிற்கும் என்பதே எமது எதிர்பார்ப்பாகும்.

இலங்கையில் வெளிவரக் கூடிய முஸ்லிம் பத்திரிகை சஞ்சிகைகளுக்கிடையில் ஓர் உறவுப் பாலம் அமைவதும், பத்திரிகைகளினதும் அதில் தடம் பதிக்கும் எழுத்தாளர்களினதும் தேவை சுதந்திரம், பாதுகாப்பு குறித்து உத்தரவாதத்துடன் இயங்குவதும் முஸ்லிம் ஊடகத்துறையின் முன்னேற்றத்திற்காக வியூகங்கள் அமைக்கவும் ஒன்றிணைந்து செயற்படக் கூடிய கூட்டமைப்பொன்றை ஏற்படுத்துவது குறித்து "முஸ்லிம் குரல்" அதன் எதிர்கால இலக்குகளில் ஒன்றாக கொள்ள வேண்டும்.

முஸ்லிம் வாசகர்களின் முகங்கள் திசை திரும்பாமல் பார்த்துக் கொள்ளவும் நிலையான வாசகர்களை அதன் பக்கம் தக்க வைத்துக் கொள்ளவும் அவ்வப்போது புதிய மாற்றங்களை "முஸ்லிம் குரல்" கைகொள்ளும் என்ற நம்பிக்கை எமக்கு உண்டு.

கரடு முரடான சமூகப் பயணத்தில் வீரத்ர நெஞ்சுடன் வீறுநடை போட "முஸ்லிம் குரல் " எடுக்கும் பிரயத்தனங்களுடன் "முஸ்லிம் இளைஞனும்" என்றும் கைகோர்த்து உறுதுணையாக இருப்பான்.

வல்லவன் அருள் நம் அனைவரையும் வந்தடைய வேண்டுவோம்.

அல்ஹம்துலில்லாஹ்.

ஆசிரியர்
"முஸ்லிம் இளைஞன்"
அட்டாளைச்சேனை.

**முஸ்லிம் குரலின் வளர்ச்சிக்கு அனுசரணையாளர்களாக விளம்பரம் செய்யுங்கள்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதூரம் புரியாத முஸ்லிம் பிரதிநிதிகள்

அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே தொடர்ச்சியாக நடைபெற்று வரும் அரசியல் பேச்சுவார்த்தையை முஸ்லிம் அரசியல் தலைவர்கள் ஒரு அரசியல் விளையாட்டாக எடுத்துக் கொண்டு வருகின்றனர். விடயத்தின் பாரதூரத்தை இன்னமும் புரிந்து கொள்வதாக இல்லை. அப்படிப் புரிந்து கொண்டிருந்தால் இருபது வருடகாலமாக போரிட்டு இரத்தம் சிந்திக் கொண்டிருந்த இரு தரப்பு தவிர்க்க முடியாது ஒரு அரசியல் பேச்சுவார்த்தையில் பல்வேறு முரண்பாடுகளுக்கு மத்தியிலும் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் போது, அச் சூழலை வெற்றிகரமாக கூட்டாக எதிர்கொண்டு தமது மக்களின் நலன்களை உறுதிப்படுத்தும் நோக்கில் தீர்மானகரமான முடிவுகளையும் செயற்பாடுகளையும் மேற்கொண்டிருப்பர்.

இப்பேச்சுவார்த்தையில் சமத்துவமான தனித்தரப்பாக முஸ்லிம்கள் கலந்து கொள்வது, அதற்கான கோரிக்கை என்பவற்றை பாரதூரமாக கவனத்தில் கொண்டிருப்பர். இந்த மூலாதாரக் கோரிக்கையை எத்தனை பாரதூரத்துடன் முன்னெடுத்துச் செல்ல வேண்டும் என்பதை எந்தத் தலைவர்களும் அவர்களின் ஆதரவாளர்களும் தமது சிந்தனைக்குள் எடுத்துக் கொண்டதாக இல்லை. நிலைமைகள் இவ்வாறாக நீடித்துச் செல்வதனால் உண்டாகும் பாரதூரத்தன்மையைப் புரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக சில விடயங்களை இங்கு ஆராய வேண்டியுள்ளது.

விடுதலைப் புலிகள் 1990-1995 வரையிலான காலங்களில் பெற்ற இராணுவ வெற்றிகள் பாரியனவாக இருந்தாலும், அவ் வெற்றிகளைப் பெறுவதற்கு தமது தரப்பிலும் பாரிய இழப்புகளைக் கொடுக்க வேண்டியிருந்தது. யுத்த வரலாற்றை ஆராயும் எவரும் இதனை இலகுவில் புரிந்து கொள்ள முடியும். பிற்காலங்களை அதாவது 1996 இற்குப் பின்னர் எடுத்துக் கொண்டால், விடுதலைப் புலிகள் நவீன ஆயுதங்களும் கனரக ஆயுதங்கள் காரணமாகவும், நுணுக்கமான போர் உத்திகள் காரணமாகவும் மிகவும் குறைந்த இழப்புகளுடன் பாரிய வெற்றிகளைப் பெற்றதுடன் அரசபடையாட்களுக்கு பாரிய ஆள் இழப்பினை ஏற்படுத்தினர். நிறைய போர்த்தளபாடங்களை கைப்பற்றிக் கொண்டு தமது பலத்தை மேலும் பன்மடங்காக்கிக் கொண்டனர்.

கடைசியாக விடுதலைப் புலிகளின் கப்பல் தகர்க்கப்பட்டமை, பேச்சுவார்த்தை அரங்கில் பெரும் அதிர்வை ஏற்படுத்தி இருந்தது. விடுதலைப் புலிகளின் பத்திற்கும் அதிகமானவர்கள் கொல்லப்பட்டமைக்கும் பின்னர் விடுதலைப் புலிகளின் தலைமை அவசர கூட்டங்களை நடாத்தி எடுத்துள்ள முடிவு மிகவும் அவதானத்திற்குரியதாகும். ஒரே நேரத்தில் பல சமிக்ஞைகளையும் செயல்களாகவும் சொல்லாகவும் அவர்கள் வெளிப்படுத்தியுள்ளனர்.

புலிகள் தனி நீதிமன்ற வளாகத் திறப்பு, வங்கிக் கிளைகள் திறப்பு, அரசு தனது படைப்பலத்தை அதிகரித்துக் கொண்டால், தாமும் படைப்பலத்தை அதிகரிப்பது நியாமானதே என்ற கூற்று: அதாவது சமபல நிலையை தொடர்ச்சியாகப் பேணிக் கொள்வது என்பவற்றுடன் விடுதலைப் புலிகள் தெளிவாக தமக்கு இரண்டே தீர்வு மாத்திரமே உள்ளது என்கின்றனர். ஒன்று தமிழீழ அரசு அல்லது தமிழீழ சமஷ்டி அரசு. ஆனால் பின்னயதை மனப்பூர்வமாக வழங்கும் உணர்வு சிங்களவரிடம் இல்லை. . . என்பன போன்ற சமிக்ஞைகள் அடுத்தடுத்து விடுக்கப்பட்டுள்ளன. அதேசமயம் எக்காரணத்தைக் கொண்டும் விடுதலைப் புலிகள் போரை ஆரம்பிக்கப் போவதில்லை. போர்நிறுத்த உடன்பாட்டை இறுக்கமாகப் பேணுவோம். என்ற செய்தியும் அவர்கள் தரப்பால் விடுக்கப்பட்டுள்ளது. இவற்றை சாராம்சப்படுத்தினால். . . *விடுதலைப் புலிகள் தாமே போரைத் தொடங்க மாட்டார்கள். அரசு போரை ஆரம்பித்தால், பதிலடியாக ஆரம்பிக்கும் விடுதலைப் புலிகளின் தாக்குதலானது, தனியரசு ஒன்றை அல்லது அதற்கு நிகரான ஆட்சி அதிகாரத்தை நிறுவுவதில்தான் சென்று முடிவடையும்* என்றே அர்த்தப்படுத்தப்படல் வேண்டும்.

இதுதான் இன்றைய பின்புலம். இந்தப் பின்புலத்தில்தான் அரசியல் பேச்சுவார்த்தைகள் தொடர்ச்சியாக நடைபெற்று வருகின்றது. இப்போது முதலாவது கட்டத் தின் ஆறாவது சுற்று நடைபெறப் போகின்றது. இவற்றை தீவிரமாக நாம் கவனத்தில் கொள்வோம் எனின், வடக்கு கிழக்கு முஸ்லிம்களாகிய நமது தனித்துவமான அரசியல் பாதை, அரசியல் செயற்பாடுகள் எவையென் பது குறித்து எச்சரிக்கையுடன் மிகுந்த தெளிவான பார்வையை நாம் பெற்றுக் கொள்ள முடியும்.

அரசியல் ரீதியில் நமது அரசியல் அபிலாசைகளை சிங்களத் தரப்பும் தமிழ்த்தரப்பும் தொடர்ச்சியாகப் புறக்கணித்து வருகின்றது. சிங்களத் தரப்பின் புறக்கணிப்பு ஐம்பது வருடங்களுக்கு மேலாக நடைபெற்று வருகின்றது. தமிழ்த்தரப்பின் புறக்கணிப்பு கடந்து இருபது வருடங்களாக நடைபெற்று வருகின்றது.



-சலாமத்

நமது முஸ்லிம் அரசியல் தலைவர்கள் என்று சொல்லிக் கொண்டிருப்பவர்களுக்கு வேண்டுமானால் இலங்கை அரசுத் தரப்புடன் தம்மைச் சரணடையும் நிலையில் வைத்திருப்பதனால் அவர்களுக்கு அமைச்சுப் பதவிகள், பிரதி அமைச்சுப்பதவிகள், திணைக்கள, கூட்டுத்தாபனப் பொறுப்புகள் என்று குறிப்பிட்ட எண்ணிக்கையினருக்கு கடந்த 12 வருடங்களாக வாய்ப்புக்கள், 'வாசிகள்' சில கிடைத்துள்ளன. இன்றைய கட்டத்தில் ஒட்டுமொத்த சமூக நலன் நின்று நோக்குவோம் எனின், மேற்படி வாய்ப்புக்களும் வாசிகளும் முக்கியத்துவம் அற்றவையாகும்.

அந்தவகையில், தற்போதை அரசியல் பேச்சுவார்த்தைக் காலகட்டத்தில், நமது தரப்பிற்கு அதாவது முஸ்லிம்களின் தரப்பிற்கு ஆகப்பெரும் பலவீனமான அம்சமாக இருப்பது தனிப்பட்ட வாசிகளுக்கான இந்த அண்டிப் பிழைப்புத் தான். அதாவது, நமது அரசியல் தலைவர்கள் என்று சொல்லிக் கொள்பவர்கள் தமது அரசியல் சுயாதீனத்தை இழந்து அரசாங்கத்தின் பங்காளிகளாக இருப்பதுதான்.

எந்த பங்காளித்தனம் இதற்கு முன்னரெல்லாம் முஸ்லிம்களின் நலன்களையும் பாதுகாப்பினையும் உறுதிப்படுத்திக் கொள்வதில் ஓரளவிற்கேனும் துணை செய்ததோ அதுவே இன்று நமது அரசியல் உரிமைகளையும் அதிகாரங்களையும் வென்றெடுப்பதற்கு பெரும் தடைக்கற்களாக அமைகின்றன. இதனை சரியாக இனங்கண்டுதான், அமைச்சர் பதவிகளையும் துணை அமைச்சர் பதவிகளையும் மற்றும் கோட்டாக்களையும் கோட்டாப் பதவிகளையும் தூக்கியெறிந்து விட்டு, சுயாதீனமாக, தனித்துவமான தனித்தரப்பாக நில்லுங்கள் என்று நமது மக்கள் மத்தியில் இருந்து பலமான குரல்கள் அரசியல் தலைவர்களை நோக்கி எழுந்தன. ஆனால் இந்தக் குரல்கள் மிக இலகுவாக நமது தலைவர்கள் என்று சொல்பவர்களால் அப்போது தட்டிக்கழிக்கப்பட்டது. இதனை தட்டிக்கழித்தவர்கள் மறந்து விடலாம். மக்கள் மறக்க மாட்டார்கள்.

உதாரணமாக, ஒருசில மாதங்களுக்கு முன்னர், ஒலுவில் கடல்சார் பயிற்சிக் கேட்போர் கூடத்தில் ஹக்கீமைச் சந்தித்து கல்விமான்கள் டாக்டர்கள் சட்டத்தரணிகள் அடங்கிய குழு அழுத்தம் கொடுத்தது.

"முஸ்லிம் காங்கிரஸ் அமைச்சர்கள் தமது பதவிகளைத் துறந்து முஸ்லிம் சமூகத்தை வழிநடாத்த வேண்டும். மு.கா. தலைவர் ஹக்கீம் முதலில் இதனைச் செய்ய வேண்டும் இதனைப் பின்பற்றி அமைச்சர் அதாவுல்லா, நூர்தீன் மசூர், முகைதீன் அப்துல் காதர், பசீர் போன்றவர்கள் தமது பதவிகளைத் துறந்து சமூகத்திற்காக செயற்பட வேண்டும்" என்று கோரியிருந்தனர்.

பிரதான கோரிக்கைகளாக. . .

* முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒன்றுபடல் வேண்டும்.
* அடுத்த பேச்சுவார்த்தையில் முஸ்லிம்கள் தனித்தரப்பாகக் கலந்து கொள்ள வேண்டும்.
* முஸ்லிம் கொங்கிரஸ் தலைவர்கள் அமைச்சுப் பதவிகளையும் பிரதி அமைச்சர் பதவிகளையும் துறந்து விட்டு தனித்துவமாக முஸ்லிம் சமூகத்திற்கு வழிகாட்ட வேண்டும் என முன்வைத்தனர்.

இதற்கு ஹக்கீம் அவர்களின் பதில் என்னவாக இருந்தது?

அமைச்சர் பதவி இல்லாவிட்டால் இவ்விடத்தில் உங்களைச் சந்திக்க முடியாதுபோயிருக்கும். முஸ்லிம் சமூகத்தின் உரிமைகளை வென்றெடுக்க அமைச்சர் பதவியும் முக்கியமானதாகும். இதே பதில்களை அல்லது இதையொத்த பதில்களைத் தான் மாற்று அணியினர் என்று சொல்லப்படும் அதாவுல்லா, சுபைதீன் அணியினரும் தருவார்கள் என்பதில் ஐயமில்லை.

தற்போது, தனித்தரப்பாக பங்குபற்ற வேண்டும் என்று முஸ்லிம் மக்கள் விடுத்த அரசியல் கட்டளையை மிகவும் காலம் கடந்தேனும் முஸ்லிம் அரசியல் தலைவர்கள் உரத்து உச்சரிக்கத் தொடங்கியுள்ளனர். அதுவும் பாராளுமன்ற அனைத்து முஸ்லிம் பிரதிநிதிகளும், கட்சி வேறுபாடுகளின்றி, அணி வேறுபாடுகள் இன்றி ஒரு தனிக்குழுவாக அரசாங்கத்திற்கு விண்ணப்பித்துள்ளனர். அவ்வாறாக விடுதலைப் புலிகளுக்கும் விண்ணப்பிக்கின்றனர். ஒரு தொடக்கம் என்ற வகையில், இது ஓரளவிற்கு மக்களுக்கு ஆறுதல் தரும் விடயமாகும். இந்த நிலைப்பாட்டில் நம்மவர்கள் உறுதியாக நிற்பார்களா அல்லது சாக்குப் போக்குச் சொல்லிக் கொண்டு, அரசாங்கம்-விடுதலைப் புலிகளின் நிகழ்ச்சி நிரலுக்குள் நுழைந்து கரைந்து விடுவார்களா என மக்கள் விழிப்புடன் அவதானித்துக் கொண்டிருக்கின்றார்கள்.

முஸ்லிம் தலைமையானது, அரசாங்கத்தின் பங்காளியாக இருப்பதைக் காரணமாகக் காட்டி, அரசியல் பேச்சுவார்த்தைகளில் முஸ்லிம்தரப்பு தனித்தரப்பாக பங்கு கொள்வதை தமிழ்த் தரப்பு கேள்விக்குள்ளாக்குகின்றது. தனித்தரப்பாகப் பங்குபற்றும் நமது மக்களின் கோரிக்கையினைத் தமிழ்த்தரப்பு தட்டிக்கழிக்கின்றது. அதேசமயம், அரசாங்கத்தின் விசுவாசிகளாக முஸ்லிம் தலைவர்கள் - அவர்கள் அந்த அணியாகட்டும், இந்த அணியாகட்டும் முஸ்லிம்களின் தனித்தரப்புக் கோரிக்கையை அரசாங்கத் தரப்பு திட்டவட்டமாக மறுத்து வருகின்றதை கேள்வி எழுப்ப முடியவிலை. இன்று தனித்தரப்பு நாளை தனித்தரப்பு என நமது மக்களுக்கு பூச்சாண்டி காட்டி வருகின்றன.

முஸ்லிம்கொங்கிரஸ் ஆரம்பிக்கப்பட்டு, நமது மக்களின் செல்வாக்கினைப் பெற்ற காலம் தொட்டு *முஸ்லிம்களுக்கான தனியான அரசியல் அதிகாரம்* குறித்த ஆணையை நமது மக்கள் தந்து வருகின்றார்கள். அண்மைக்காலமாக மிகவும் தீவிரமாக வலியுறுத்தி வருகின்றனர். இதன் உச்ச நிலையாகவும் வடிவமாகவும் பல்கலைக்கழக மாணவ சமூகத்துடன் இணைந்து நமது மக்கள் முஸ்லிம் தேசப் பிரகடனத்தையும், நமக்கான சுயநிர்ணயம், சுயாட்சி உரிமைகள் குறித்தும் திட்டவட்டமாகத் *தனித்தரப்பாக செயற்படுவது குறித்தும்* தமது உன்னதமான ஆணையை வழங்கியுள்ளனர்.

இதற்குமேல், முஸ்லிம் அரசியல் தலைவர்களுக்கு தனித்தரப்புக் கோரிக்கையின் பாரதூரத்தையும் அதனை வென்றெடுப்பதற்கு தன்னலம் பாராது எவ்வளவு சீரியசாகச் செயற்பட வேண்டும் என்பதை எப்படிப் புரிய வைக்க முடியும்? இன்றைய அரசியல் சூழலின் பாரதூரத் தன்மையை உணர்ந்து, அமைச்சுப் பதவிகள் அடங்கலாக பட்டம் பதவிகள் என்ற *சகல அடிமைச் சங்கிலிகளையும்* அறுத்தெறிந்து விட்டு, சொந்த மக்களின் அரசியல் பிரதிநிதிகளாக அரசியல் போர்க்களம் இறங்குமாறு இதற்கு மேல் எப்படிப் புரிய வைப்பது? ஒன்று, நன்கு புரிந்திருந்தும் காட்டிக் கொடுப்பு என்று கொள்ள வேண்டும். அல்லது எதையும் புரிந்து கொள்ள முடியாத அரசியல் வங்குரோத்துத்தனம் என்று கொள்ள வேண்டும்.

## புத்தளம் பாயிஸின் வீட்டில் ஆயுதங்கள்! அன்று ஆடிய நாடகம் இன்று அம்பலம்.

(புத்தளம் செய்தியாளர்)



ஹக்கீம் கொலைத்திட்டம் பிரதமரின் கவனத்துக்கு

கடந்த சனிக்கிழமை இரணவிலவில் கைது செய்யப்பட்ட கூலிப்படை... பாதாள உலகக் குண்டர்களும் (11பேர்) ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ...அமைப்பாளர் ... பாயிஸை ...

Alleged plot to kill Hakeem

Police arrest armed gang on way to Colombo

புத்தளம் பாயிஸைக் கொலைசெய்யத் திட்டமிட்டிருந்த ஒரு குழுவினரை ஜனவரி மாதம் 11ஆம் திகதி பொலிசார் கைது செய்தனர். புத்தளம் பாயிஸைப் பொறுத்தவரை அவருக்கும் புத்தளத்திலிருக்கும் பல்வேறு குழுவினருக்கும் இடையில் நிலவிவரும் முரண்பாடுகள் காரணமாக மோதல்களும் உயிரிழப்புகளும் புத்தளத்திலும் அதனை அண்டிய பிரதேசங்களிலும் நடைபெற்று வருகின்றன. இப்போதும் இப் பகைமைகள் காரணமாய் புத்தளம் அடிக்கடி இயல்பு வாழ்க்கையை இழக்கவேண்டி வருகின்றது.

கடந்த 15ஆந் திகதி புத்தளத்தில் ஒரு இளைஞன் வெட்டப்பட்டு ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதை அடுத்து அவரின் வாக்குமூலத்தின் அடிப்படையில் புத்தளத்தில் உள்ள பாயிஸின் வீட்டை பொலிசார் சுற்றி வளைத்து தேடுதல் நடாத்தியபோது இராணுவச் சீருடையும், ஆயுதங்களும் பாயிஸின் வீட்டில் கைப்பற்றப்பட்டுள்ளதாக புத்தளம் பிரதான பொலிஸ் அத்தியட்சகர் ஆர்.எம்.ரத்னாயக்க, லங்காதீப பத்திரிகைக்கு தெரிவித்துள்ளார். இச் சம்பவத்தின் பின் பாயிஸ் தலைமறைவாகியுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இது பாதாள உலகக் கோஷ்டிகளுக்கிடையிலான ஒரு பிரச்சினைதான். ஆனால் அன்று பாயிஸைக் கொல்ல வந்தவர்கள் - கொழும்பில் நடைபெறவிருந்த முஸ்லிம் காங்கிரஸ் தேசிய மகாநாட்டில் தன்னையும் கொல்ல இருந்தார்கள் என்ற ஒரு கதையை ஹக்கீம் கட்டிவிட்டு, மக்கள் மத்தியில் பெரும் அனுதாபத்தை பெற முயற்சித்ததை நாமறிவோம்.

அன்றைய நிலையில் ஹக்கீம் - அதாவுல்லா மோதல் மிகவும் தீவிரமடைந்திருந்திருந்ததும், ஹக்கீம் மீதான பெரும் அரசியல் எதிர்ப்பை மக்கள் மத்தியில் சந்திக்க வேண்டியிருந்த சூழ்நிலையை மாற்றுவதற்கு பாதாள உலகக் கோஸ்டிகளுக்கிடையிலான பிரச்சினையில் தன்னையும் சம்பந்தப்படுத்தி அரசியல் நாடகம் ஒன்று ஆடப்பட்டது.

அதுவொரு நாடகம் என்பது புத்தளத்தில் தொடர்ந்து பாயிஸ் தலைமையில் உள்ள குழுவினருக்கும், மற்றக் குழுவினருக்கும் நடந்துவரும் சண்டைகள் - மோதல்களில் வெளிப்படுகின்றது. இதில் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் எந்த விதத்திலும் சம்மந்தப்படவில்லை.

தன்னைக் கொல்வதற்கு நடந்த சதியே இதுவென ஹக்கீமே கூறி, தனது பாதுகாப்பை அதிகரிக்குமாறு அரசாங்கத்தைக் கோரினார். இக்கோரிக்கையை அடுத்து அவரின் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டடது. இது ஒரு மோசமான அரசியல் நாடகமே என்பதில் எங்களுக்கு எந்தவிதமான சந்தேகமுமில்லை. மக்களுக்கு உண்மையை அறியத் தருவது பத்திரிகையாளர்களான எங்களின் கடமையாகும்.



திஹாரி இஸ்லாமிய அங்கவீனர் நிலையத்தின் வளர்ச்சிக்காக எட்டு லட்சம் ரூபாய்க்கான காசோலையை சவூதித் தூதுவர் முஹமட் எம்.எல். அலி நிலையப்பணிப்பாளர் அல்ஹாஜ். ஜிப்ரி ஹனீபாவிடம் கையளித்த போது. சர்வதேச ஆலோசனை குழு உறுப்பினர் புரவலர் அல்ஹாஜ் ஹாசிம் உமர், சவூதி தூதரக பணிப்பாளர் அப்துல் அல் நாஸர், மௌலவி பாரி, அல்ஹாஜ் சம்சுதீன், பொருளாலர் சுபையிர் ஆகியோர் படத்தில் இருப்பதை காணலாம்.

## எம்.ஐ.எம்.முகைதீன் தனது ஆய்வின் நேர்மையை நிரூபிக்க வேண்டும்! தவறான புள்ளி விபரங்கள் திருத்தப்பட வேண்டும்!

### கடுங்கோபத்துடன் காத்தான்குடியிலிருந்து ஒரு கடிதம்

07 மார்ச் 2003 இல் வெளியான முஸ்லிம் குரல் பத்திரிகையின் சுவடு 3 இல் எம்.ஐ.எம். முகைதீன் அவர்கள் எழுதிய "வடக்கு கிழக்கு மாகாண முஸ்லிம் மக்களின் மீற்குடியேற்றம்" என்ற தலைப்பின் 2வது தொடரைப் பார்வையிட்டேன்.

இக்கட்டுரையில் உள்நாட்டுக்குள் இடம்பெயர்ந்த முஸ்லிம் குடும்பங்கள் மாவட்ட ரீதியாக பட்டியல் இட்டுக் காட்டப்பட்டிருந்தன. இதில் மட்டக்களப்பு மாவட்டத்தில் இடம்பெயர்ந்த குடும்பங்கள் 343 எனவும் அதன் விகிதாசாரம் 1.59 எனவும் காட்டப்பட்டிருப்பது கண்டு அதிர்ச்சியும், ஆழ்ந்த வேதனையும் அடைந்தேன். முஸ்லிம் தேசத்தின் காத்தான்குடியில் பிறந்தவன் என்பதனால் எம்.ஐ.எம்.முகைதீன் அவர்களின் இந்த பாரிய வரலாற்றுத் தவறை என்னால் ஜீரணிக்க முடியாமல் போவதால் மட்டக்களப்பு மாவட்டத்தின் உண்மை நிலையை முஸ்லிம் தேசத்திற்கும், சர்வதேசத்திற்கும் வெளிச்சம் போட்டுக் காட்ட வேண்டிய வரலாற்றுத் தேவை ஏற்பட்டுள்ளது. அவ்வாறு வெளிக்கொணராது விடப்பட்டால் எம்.ஐ.எம்.முகைதீனின் ஏட்டுச் சுரக்காய் புள்ளி விபரம் உண்மையென வரலாற்றின் பக்கங்கள் பதிவு செய்து கொள்ளும்.

பலாத்காரமாக வெளியேற்றப்பட்ட முஸ்லிம்களை இடம்பெயர்ந்தவர்கள் என்று சித்தரிக்க முற்படும் தமிழ் இனமேலாதிக்கவாதிகளுக்கு அல்லது புலிப் பாஸிஸவாதிகளுக்கு ஆதரவுக் கரம் நீட்டும் கைங்கரியத்தை எம்.ஐ.எம். முகைதீன் "உள்நாட்டுக்குள் இடம் பெயர்ந்த முஸ்லிம்கள்" என்று குறிப்பிட்டதன் மூலம் செய்து முடித்துள்ளார். அத்துடன் பலாத்காரமாக வெளியேற்றப்பட்ட முஸ்லிம்களின் எண்ணிக்கையை நுனிப்புல் மேய்ந்து குறைத்துக் காட்டியுள்ளார்.

அரசாங்க புள்ளி விபர நிறுவனங்களை நம்பி வாழும் எம்.ஐ.எம். முகைதீன் முஸ்லிம் சமூகம் பற்றி இதுவரையில் கொடுத்து புள்ளி விபரங்கள் பெரும் சந்தேகத்தை ஏற்படுத்துகின்றது. தவறான புள்ளி விபரத்தை வைத்துக் கொண்டு முஸ்லிம் சமூகத்தை ஏமாற்றி, பேய்த்துக் காட்டலாம் என்றோ, பேச்சுவார்த்தை மேசைக்கு செல்ல தகுதியான ஆள் நான்தான் என்றோ இனிமேல் எம்.ஐ. எம். முகைதீன் மார்தட்டக் கூடாது. முஸ்லிம் தேசத்தில் கள ஆய்வுகளில் ஈடுபடாமல் கொழும்பிலிருந்து கொண்டு பழைய புள்ளி விபரங்களை கொண்டிருக்கிறார். எம்.ஐ.எம்.முகைதீனின் மிகப் பெரும் ஆய்வுத் தவறை மட்டக்களப்பு மாவட்டகள் ஆய்வுக்கு நூறாக்குகின்றது.

இதே போன்று ஒரு வரலாற்றுத்தவறை எம்.ஐ.எம். முகைதீன் 1988 ஆம் ஆண்டு புலிகளுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தின் போதும் செய்து காட்டினார். அப்போது முஸ்லிம் சமூகத்திற்கு இருந்த அரசியல் விழிப்புணர்வுக் குறைவினால் அந்த மிகப் பெறும் தவறை முஸ்லிம் சமூகம் கண்டு கொள்ளவில்லை. எம்.ஐ.எம். முகைதீன் - புலிகள் ஒப்பந்தத்தின் 1 வது பந்தியிலேயே "முஸ்லிம்கள் ஒரு இனக் குழு" என ஒப்புக் கொண்டு முஸ்லிம்கள் தனியான தேசிய இனம் இல்லையென்று தமிழ் இனவாதிகளுக்கு முஸ்லிம் சமூகத்தை அடையாளப்படுத்திக் கொடுத்துள்ளார்.

1980 ஆம் ஆண்டு தொடக்கம் ஆரம்பித்த தமிழ் தேச பாஸிஸ பயங்கரவாதத்தினால் மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்த சுமார் 30 முஸ்லிம் கிராமங்கள் இல்லாதொழிக்கப்பட்டு துவம்சம் செய்யப்பட்டன. இங்கு வாழ்ந்த மக்கள் அனைவரும் தற்போது காத்தான்குடி, ஏறாவூர், ஓட்டமாவடி, பொலநறுவை, திகாரிய போன்ற பிரதேசங்களில் வாழ்கின்றார்கள். இவர்கள் ஆரம்பத்தில் அகதி முகாம்களில் தங்கியிருந்தாலும், மிக விரைவாக மீள் குடியேறலாம் என்ற நம்பிக்கை அற்றுப் போக அகதி முகாம்களில் இருந்து வெளியேறி, காணிகளை வாங்கி தற்காலிக குடிசைகள் அமைத்து தங்கியுள்ளனர்.

**ஏ.யூ.எல்.எம்.ஹாரீஸ்**

அகதி முகாம்களில் தங்கியுள்ளவர்கள் மட்டுமே இடம்பெயர்ந்தவர்கள் என்ற அரச, தமிழ் அதிகாரிகளின் தாரக மந்திரத்தை உள்வாங்கியே எம்.ஐ.எம்.முகைதீன் பெற்றுக் கொண்ட புள்ளி விபரம் அரச புள்ளி விகிதத் திணைக்களத்தாலும், புனர் வாழ்வு அமைச்சினாலும் தயாரிக்கப்பட்டிருக்கலாம். வெளியேற்றப்பட்ட முஸ்லிம்களுக்கு அகதி அந்தஸ்து பெற்றுக் கொடுக்கும் எந்த ஒரு நடவடிக்கையையும் முஸ்லிம் தலைமைகள் செய்ததற்கான எந்த ஒரு சான்றையும் வரலாற்றில் நாம் காண முடியாது. முஸ்லிம்களின் கண்ணீரை வாக்குகளாக்கும் முயற்சியை மட்டுமே முஸ்லிம் தலைமைகள் தேர்தல் காலங்களில் மேற்கொண்டன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் வெளியேற்றப்பட்ட முஸ்லிம் கிராமங்களும், குடும்பங்களும், சேத மதிப்பும் இங்கே தரப்படுகின்றது. இதில் இருந்து உண்மை நிலையை நாம் உணர்ந்து கொள்ளலாம். *எம்.ஐ.எம். முகைதீன் போன்றோர் கள ஆய் வுகளில் ஈடுபட வேண்டும். அப்படி ஈடுபடாது அரசாங்க நிறுவனங்களிலிருந்து பெறப்படும் விபரங்களை தொகுத்து நூல் வெளியிடுவதற்கு எம்.ஐ.எம். முகைதீன் போன்றோர் தேவையில்லை. இதற்கு ஒரு பல்கலைக்கழக மாணவன் போதும். முகைதீன் ஒரு ஆய்வாளன் என்பதை இனித்தான் நிரூபிக்க வேண்டியுள்ளது. புள்ளி விபரங்களின் தொகுப்பாளராகவே அவர் இதுவரை இருந்து வருகிறார். தனது ஆய்வின் நேர்மை பற்றி எம்.ஐ.எம் முகைதீன் தனது கருத்துக்களை முன் வைக்க வேண்டும்.*

| வெளியேற்றப்பட்ட கிராமங்கள | குடும்பங்களின் எண்ணிக்கை | சேத விபரம் மில்லியன் ரூபாவில் | வெளியேற்றிய ஆண்டு |
|---|---|---|---|
| 1. மண்முனை | 52 | 27 | 1990 |
| 2.ஒல்லிக்குளம் | 225 | 125 | 1990 |
| 3.சிகரம் | 45 | 22 | 1990 |
| 4.கீச்சான் பள்ளம் | 75 | 30 | 1990 |
| 5.நொச்சிமுனை | 62 | 30 | 1983 |
| 6.மட்-கள்ளியங்காடு முஸ்லிம் கொலனி | 72 | 35 | 1990 |
| 7.காங்கேயனோடை | 43 | 20 | 1990 |
| 8.கரடியனாறு | 11 | 05 | 1990 |
| 9.வேப்பவெட்டுவான் | 16 | 06 | 1990 |
| 10.காசான் குடா | 50 | 26 | 1990 |
| 11.தோடுவில் சோலை | 10 | 05 | 1990 |
| 12.உறுகாமம் | 140 | 70 | 1983 |
| 13.மாவடிச்சேனை | 25 | 13 | 1990 |
| 14.மாவலையாறு | 12 | 05 | 1990 |
| 15.உன்னிச்சை பாவக்கொடிச்சேனை இறுநூறுவில் | 150 | 72 | 1983 |
| 16.கித்துல் வெவ | 50 | 26 | 1990 |
| 17.கொடுவாமடு | 04 | 02 | 1990 |
| 18.கடுகெலியா கொங்குதங்கிய மடு | 10 | 05 | 1990 |
| 19.மாவடி ஓடை | 10 | 05 | 1990 |
| 20.ஊத்துச்சேனை | 50 | 26 | 1990 |
| 21.வடமுனை | 45 | 24 | 1990 |
| 22.பாலைநகர் | 290 | 155 | 1990 |
| 23.கல்லிச்சை | 150 | 71 | 1990 |
| 24.ஹிஜ்ரா நகர் | 170 | 72 | 1990 |
| 25.தியாவட்டவான் | 090 | 49 | 1990 |
| 26.மதுரங்குளம் | 50 | 25 | 1990 |
| 27.காவத்தமுனை | 50 | 25 | 1990 |
| 28.முக்கர்கல் | 35 | 14 | 1990 |
| 29.உச்சி ஓடை கபுறடி (வாகனேரி) | 20 | 10 | 1990 |
| | ---- | ---- | |
| | 2012 | 1000 | |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒவ்வொரு பேச்சுவார்த்தையாக நாம் இழந்து கொண்டிருக்கிறோம்!

*இன்றைய சமகால அரசியல் சூழலில் முஸ்லிம்களின் அரசியல் தலைமையில் ஒருவர் என்ற வகையில், முஸ்லிம்கள் தேசிய இனப்பிரச்சினை அரசியல் களத்தில் இன்று மிக முக்கியமான சவால்களை எதிர்நோக்கியுள்ளார்கள். இது பற்றி உங்களின் பார்வைதான் என்ன?*

முஸ்லிம் குரல் பத்திரிகைக்கு இப்படியானதொரு பேட்டியை வழங்குவதில் நான் மிகுந்த சந்தோஷமடைகின்றேன். முஸ்லிம்கள் கைவிடப்பட்டு விட்டார்கள் என்ற ஒரு நிலைப்பாட்டிலே பெருமளவிலான முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள். முஸ்லிம்கள் இருப்பதை நாங்கள் யாரும் மறுக்க முடியாது. அரசுக்கும் - விடுதலைப் புலிகளுக்கும் இடையே செய்யப்பட்ட ஒப்பந்தம் தொடக்கம். இன்றுவரை முஸ்லிம்கள் முற்று முழுதாக புறக்கணிக்கப்பட்டே வருகிறார்கள். பேச்சுவார்த்தையிலும் கூட முஸ்லிம்களுடைய நியாயமான கோரிக்கைகளை அல்லது அபிலாசைகளையாவது முன்வைக்கின்ற ஒரு வாய்ப்பினைக்கூட இழந்த ஒரு சமூகமாகவே நாங்கள் இப்பொழுது மாற்றப்பட்டுள்ளோம். அதிலும் குறிப்பாக அரசாங்கத் தரப்பிலே கலந்து கொள்கின்ற முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் சகோதரர் ரவூஃப் ஹக்கீம் அவர்களினால் எந்தளவுக்கு கருத்துக்களை அங்கு முன்வைக்க முடிந்தது என்றோ, அல்லது அப்படியான சந்தர்ப்பங்களிலே வைக்கப்பட்ட கருத்துக்களுக்கு எவ்வளவு முக்கியத்துவம் வழங்கப்பட்டது என்பதை அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள், கூட்டறிக்கைகள் என்பவற்றைப் பார்க்கின்ற போது எமக்கு கவலைக்குரிய ஒரு விடயமாகவே இருக்கின்றது. எனவேதான் நாங்கள் இந்த விவகாரங்களை ஏதாவது ஒரு அடிப்படையிலே, எங்களுடைய கருத்துகளும், அபிலாசைகளும் முன்வைக்கப்பட வேண்டும் என்ற அடிப்படையிலேதான் சில நடவடிக்கைகளை நாங்கள் இப்பொழுது எடுத்து வருகின்றோம்.

*முஸ்லிம்களுடைய அரசியல் தலைமைகள் மிகவும் மோசமாகப் பிளவுண்டிருக்கும் நிலையில், வடக்கு, கிழக்கு மாகாண முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களின் ஒன்றியத்தினை ஆரம்பித்ததில் நீங்கள் மிகவும் பிரதானமானவராக இருக்கின்றீர்கள். இவ்வொன்றியத்தின் பிரதான அரசியல் இலக்கு என்ன?*

உண்மையில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தனது கடமையை சரியாகச் செய்திருந்தால் இவ்வாறான ஒன்றியம் ஒன்று அவசியமில்லை. ஏனென்றால் வடக்கு, கிழக்கு மாகாண முஸ்லிம்களுடைய மொத்தமான வாக்குகளை அள்ளிக் கொடுத்து ஸ்ரீ.ல.மு.காங்கிரஸை தங்களது பேச்சாளராக நியமித்துள்ளார்கள். எனவே. எங்களுடைய மறைந்த மாபெரும் தலைவருடைய காலத்தில் வேறெந்த கட்சியும் எங்களுடைய விடயத்தில் பேசவேண்டிய அவசியம் இருக்கவில்லை. அதே விடவும் கூடுதலாக மக்கள் கடந்த தேர்தலிலே முஸ்லிம் காங்கிரஸுக்கு ஆணை கொடுத்துள்ளனர். ஆகவே முஸ்லிம்களுக்கு பேசுவதற்கென்றே உருவாக்கப்பட்ட கட்சிதான் ஸ்ரீ.ல.மு.காங்கிரஸ் வேறெந்த நோக்கத்திற்காகவும் முஸ்லிம் காங்கிரஸ் உருவாக்கப்படவில்லை. அந்தக் கடமையைச் செய்வதிலேயே முற்று முழுதாக ஸ்ரீ.ல.மு.கா. தலைமைத்துவம் தவறுவிட்ட காரணமாகத்தான் முஸ்லிம்கள் மத்தியில் பிளவு ஏற்பட்டது.

ஆரம்பத்திலேயே அரசுக்கும் புலிகளுக்கும் ஒப்பந்தம் செய்யப்பட்ட காலகட்டத்திலே முஸ்லிம்களுக்குள் பிளவு இருக்கவில்லை. நாங்கள் தேசிய ஐக்கிய முன்னணியாக இருந்த போதும் இப்போது பிளவுப்பட்டிருக்கின்ற சகோதரர் அதாவுல்லா அணியினர் ரவூஃப் ஹக்கீமுடன் இருந்த போது நாங்கள் எல்லோரும் ஒன்றாகச் சேர்ந்து செயற்படும் முயற்சிகளைத்தான் மேற்கொண்டோம். ஆனால், முதலில் நாங்கள் எந்தளவு சேர்ந்து அமைச்சர் ரவூஃப் ஹக்கீமுடன் இருந்த போதிலும் அவர் உண்மையிலேயே ஒரு சரியான பாதையில் போவதாகத் தெரியவில்லை. ஒட்டு மொத்த முஸ்லிம் சமூகத்தை ஏமாற்றி வருகின்ற ஒரு போக்கிலேயே அவர் இருப்பதை நாங்கள் உணர்ந்த போதுதான் இனி அவரோடு தொடர்ந்தும் இருப்பதில், செயற்படுவதில் எந்த விதப் பிரயோசனமும் இல்லை என இறுதியாக நாங்கள் அவரை விட்டு வெளியேறினோம்.

எங்களை இன்னும் ஏமாற்றிக் கொண்டிருப்பதை அனுமதிக்க முடியாது என்று அடிப்படையிலேயே உடனடியாகவே மக்கள் மத்தியில் சென்று (அப்போது அவர்கள் எல்லோரும் ஒன்றாகவே இருந்தார்கள்.) சம்மாந்துறை, நிந்தவூர் போன்ற ஊர்களில் கூட்டங்களை வைத்து உண்மைகளை மக்களிடம் சொன்னோம்.

அதன் பிறகுதான் பாராளுமன்ற பகிஷ்கரிப்பு ஏற்பட்டது. அமைச்சர் அதாவுல்லா அணி என்று இரண்டாகப் பிரிந்தது. ஆகவே தான் முஸ்லிம் காங்கிரஸ் தலைமை விட்ட தவறான போக்குத்தான் இப்படியான பிளவுகளுக்கு காரணம். தொடர்ந்தும் இவ்வாறாக நாம்



ஹிஸ்புல்லாஹ் எம்.பியின் நேர்காணல்

பிளவுபட்டிருக்க முடியாது என்ற அடிப்படையிலேயே எல்லோரையும் ஒற்றுமைப்படுத்த வேண்டுமென்ற முயற்சியை நாம் மேற்கொண்டோம். நாங்கள் ஒவ்வொருவரையும் சந்தித்துப் பேசினோம்.

குறிப்பாக நாங்கள் இந்த விடயத்தில் ஒரு முடிவெடுத்தோம். நாங்கள் எல்லோரும் அடிப்படையில் ஒரு கட்சியைச் சேர்ந்தவர்கள். வடக்கு. கிழக்கு மாகாணத்தில் இப்போது இருக்கின்ற பதினேழு முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களும் ஐக்கிய தேசிய கட்சி உட்பட ஸ்ரீ.ல.மு.காங்கிரசில் வளர்ந்தவர்கள் தான். ஆதலால் எங்களுக்குள் கருத்து வேறுபாடு சமூக நோக்கில் இருக்க முடியாது.

இவ்வாறு நாங்கள் ஒவ்வொருவரையும் ஒன்று சேர்த்து இறுதியில் ஸ்ரீ.ல.மு.கா. ஒத்துழைப்பில்லாத காரணத்தினால் சில தாமதங்கள் ஏற்பட்டு பின்னர் சிலரின் ஒத்துழைப்புடன். முஸ்லிம் காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர்களும் ஒன்று சேர்ந்து இயங்குவதற்கான ஒரு சூழ்நிலை ஏற்பட்டது. ஆகவே தான் நாங்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து இயங்குவதற்குத் தீர்மானித்தோம்.

எங்களுடைய இலட்சியம் இரண்டே இரண்டுதான். பாரளுமன்ற உறுப்பினர்களின் ஒன்றியக் கூட்டங்களில் எந்தக் கட்சி அரசியலும் பேசமுடியாது. வேறு தனிப்பட்ட எந்தக் குழுக்களுடைய அல்லது அணிகளுடைய பிரச்சினைகளைப் பற்றியும் பேச முடியாது. எங்களுடைய இலட்சியம்-

1. தனித்தரப்பு
2. பொதுத் தீர்வுத் திட்டம்

இதைத்தவிர எங்களுக்கு வேறு எந்த இலட்சியமும் கிடையாது. தனித்தரப்பாக நாங்கள் போக வேண்டும். அந்தத் தனித்தரப்பு பொதுத் தீர்வுத் திட்டத்தோடு போக வேண்டும். பொதுத் தீர்வுத் திட்டம் என்பது நீண்ட கால அரசியல் நோக்கில் இனப்பிரச்சினைத் தீர்வுக்கான இப்போதிருக்கின்ற சமஷ்டி அரசியல் திட்டமென்றால், அதற்கு நாங்கள் எவ்வாறான தீர்வுத் திட்டத்தை முன்வைப்பது என்பது பற்றி எல்லா முஸ்லிம் நிபுணர்கள், கல்விமான்கள், எல்லோருடைய ஆலோசனைகளையும் பெற்று. அது தொடர்பிலே ஒரு தீர்மானத்தை எடுத்து முன்வைப்பது. தனித்தரப்பாக போகின்ற போது ஒரு பொதுவான தீர்வுத் திட்டத்தை எல்லாக் கட்சிகளும் ஏற்றுக் கொண்ட பொதுத் தீர்வுத் திட்டத்தை முன்வைக்கக் கூடியதாக இருந்தால் அங்கே பிரச்சினைகள் இருக்க முடியாது என்ற இரண்டு அம்சங்களின் அடிப்படையிலேதான் இப்போது நாங்கள் இந்த ஒன்றியத்தை ஆரம்பித்து, பல்வேறுபட்ட நெருக்கடிகளுக்கு மத்தியில் ஓரளவு ஒற்றுமையை ஏற்படுத்தி இவ் அடிப்படையான விஷயங்களுக்காக செயற்பட்டு வருகின்றோம்.

*முஸ்லிம்களுடைய அரசியலில், இந்தப் பேச்சுவார்த்தை தொடங்கியதற்குப் பிற்பாடு முஸ்லிம்கள் தனித்துவமாக கலந்து கொள்ள வேண்டுமென்ற குரல்கள் பல்வேறு தரப்பினராலும் எழுப்பப்பட்டு வருகின்றன. முஸ்லிம் காங்கிரஸ் தலைமை இந்தக் குரலை தொடர்ந்தும் அலட்சியப்படுத்தி அரச தரப்பு பிரதிநிதியாகவே கலந்து கொண்டு வருகின்றது. ஆனால் பின்னெழுந்த சூழ்நிலையில் தவிர்க்க முடியாமல் மக்களுடைய நிர்ப்பந்தம் காரணமாக அண்மையில் நீங்கள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அவர்களை சந்தித்து தனித்தரப்பாகப் போவதற்காக ஒரு பேச்சுவார்த்தையை மேற்கொண்டீர்கள். அவர் 7 ஆம் கட்டப் பேச்சுவார்த்தையில் நிச்சயமாக முஸ்லிம்கள் தனித்தரப்பாக போகலாம் என்ற தொனியுடனான ஒரு வாக்குறுதியை உங்களுக்குத் தந்திருப்பதாக நீங்கள் ஊடகங்களுக் கூடாக மக்களுக்கு சொல்லியிருந்தீர்கள். நிச்சயமாக நீங்கள் நம்புகின்றீர்களா கடந்தகால அரசியல் சூழலில் முஸ்லிம்கள் நடத்தப்பட்ட விதங்களை கருத்தில் கொண்டு தனித்தரப்புக்கு ரணில் விக்கிரமசிங்க பூரணமான உடன்பாடுடன் அதற்கான ஏற்பாடுகளில் தீவிரமாக இயங்குவார் என்று?*

இந்த விடயம் தொடர்பாக நாங்கள் தொடர்ச்சியாகப் பேசி வந்தோம். பிரதமமந்திரியோடு முதல் தடவை பேசினோம். அதற்குப் பிறகு அவர் சில கருத்துக்களைச் சொன்னார் அதிலே தெளிவான பதில்கள் ஏதுமிருக்கவில்லை. பின்னர் நாங்கள் நோர்வே நாட்டுத் தூதுவரைச் சந்தித்துப் பேசினோம். பின்னர் நாங்கள் மீண்டும் பிரதம மந்திரியோடு பேசிய பொழுதுதான் அந்தப் பேச்சுவார்த்தை யில் சகோதரர் ரவூஃப் ஹக்கீமும் கலந்துகொண்டார். அந்த பேச்சுவார்த்தையின் போது பிரதமமந்திரி சொன்னார். டோக்கியோவில் நடைபெறவிருக்கின்ற இந்தப் பேச்சுவார்த்தையிலே நீங்கள் கலந்து கொள்வது சாத்தியமில்லை. அடுத்த பேச்சுவார்த்தையிலே கலந்து கொள்வதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்துவதாக. ஆகவே இது தொடர்பாக விடுதலைப் புலிகளோடும் பேசுவது நல்ல சூழ்நிலையை ஏற்படுத்தும் என்று சொன்ன போதுதான் நாங்கள் சொன்னோம்; இல்லை, நீங்களே தான் அந்தப் பொறுப்பை எடுக்க வேண்டும். பேச்சுவார்த்தையில் நாங்கள் கலந்து கொள்வதற்கான பொறுப்பு நீங்கள்தான். விடுதலைப் புலிகளைச் சந்தித்து எங்களுக்கிடையே உறவுகளை ஏற்படுத்துவது என்பது வேறு பிரச்சினை. அவர்களை சந்திக்கவும், பேசவும் நாங்கள் ஆயத்தமாகவிருக்கிறோம் என்று. அதற்கு அவர் சொன்னார் பேச்சுவார்த்தையில் நீங்கள் தனித்தரப்பாக பங்குபற்றுவதற்கான பொறுப்பினை நான் பொறுப்பேற்றுக் கொள்கின்றேன். நீங்கள் அவர்களோடு சுமுகமான உறவினை ஏற்படுத்தும் முகமாக பேசுங்கள் என்றார். ஆகவே நாங்களும் 7 ஆம் கட்ட பேச்சுவார்த்தையை மையமாகக் கொண்டு தான் அந்தப் பணிகளைச் செய்துகொண்டிருகிறோம். பிரதம மந்திரி அவர்கள் இது தொடர்பாக எங்களுக்கு உறுதிமொழி வழங்கியிருக்கிறார். விடுதலைப் புலிகளைச் சந்தித்து நட்பு அடிப்படையில் பேசவேண்டும் என்கிற எங்களது முடிவை நோர்வே தூதுவரை சந்தித்த பொழுது அறிவித்தோம். அன்டன் பாலசிங்கம் நாட்டை விட்டு வெளியேற முன்பதாக அந்தச் சந்திப்புக்கான ஏற்பாடுகளை செய்து தருவதாகச் சொன்னார். எங்களுக்கான சந்திப்பிற்கான நேரம் தீர்மானிக்கப்படாத நிலையிலேயே, கப்பல் தாக்கப்பட்ட விடயம் காரணமாக சந்திப்பிற்கான ஏற்பாடுகள் செய்யப்படவில்லை.

*இது ஒரு அரசியல் வாக்குறுதி என்ற அடிப்படையில் இந்த வாக்குறுதி 7 ஆம் கட்டப் பேச்சுவார்த்தையில் நிறைவேற்றுப்படாது விட்டால், உங்களுடைய மாற்று ஒழுங்குகள் என்னவாயிருக்கும்? அதற்கான என்ன திட்டங்களை நீங்கள் வைத்திருக்கின்றீர்கள்?*

நாங்கள் அறிந்த வரையில் 7 ஆம் கட்டப் பேச்சுவார்த்தையானது, ஏப்ரல் மாதம் புதுவருடத்திற்குப் பிறகு இறுதி வாரத்தில் பேங்கொக் நகரத்திலே நடைப்பெறவிருப்பதாக தெரிகிறது. ஆகவே பேச்சுவார்த்தைக்கு ஆகக் குறைந்தது 2 வாரங்களுக்கு முன்பாவது எங்களுக்கு நிகழ்விருப்பவை தெரிய வேண்டும். நாங்கள் 6 ஆம் கட்டப் பேச்சுவார்த்தை முடிந்த பின்னர் 7 ஆம் கட்டப் பேச்சுவார்த்தைக்கான தயாரிப்புகளை ஆரம்பிப்போம். பேச்சுவார்த்தைக்கான நிகழ்ச்சி நிரல், தனித்தரப்பாக கலந்து கொள்வதற்கான வேலைகளை நாங்கள் ஆரம்பிப்போம். எனவே நாங்கள் பிரதம மந்திரியை மீண்டும் சந்தித்து தனித்தரப்பாக போவதற்கான திருப்தியான பதில்கள் இல்லாமல் இருந்தால் நாங்கள் அது தொடர்பாக உடனடியாக எங்களது ஒன்றியம் கூடி இது தொடர்பான தீர்மானத்தை எடுக்க வேண்டியிருக்கும். ஆனால், எங்களது ஒன்றியம் மிகவும் உறுதியாக இருக்கின்றது. 7 ஆம் கட்ட பேச்சுவார்த்தையிலே தனித்தரப்பாக கலந்து கொள்ள வேண்டும் என்பதில். இவ்வாறு சாத்தியமாகவிடின் எவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்பது பற்றி இன்ஷா அல்லாஹ் எதிர்காலங்களிலே நாங்கள் பேசித் தீர்மானிப்போம்.

*நடைபெற்று வரும் அரசியல் நிலைமைகளைப் பார்க்கும் போது, அண்மையில் கிளிநொச்சியில் தமிழ் கூட்டமைப்பும், விடுதலைப் புலிகளும் இணைந்து ஒரு உத்தியோக பூர்வமான அரசியல் நிலைப்பாட்டினை எடுத்திருக்கிறார்கள். முஸ்லிம்களுக்கு தனி மாகாணம் தேவையில்லை என்று. இது சம்பந்தமாக நீங்கள் உட்பட, நமது அரசியல் தலைமைகள் எதுவுமே பேசவில்லை. ஏன் இந்த மௌனம்?*

நோர்வே நாட்டுத் தூதுவர். நான் மட்டக்களப்பில் இருந்த போது அந்தக் கூட்டம் முடிந்த அடுத்த நாள் காலையிலேயே என்னோடு பேசும் போது சொன்னார். நேற்றையக் கூட்டத்திலே இப்படியொரு முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது என்று. தமிழ் மக்களுக்கு என்ன உரிமைகளும், சலுகைகளும் வழங்கப்படுகின்றதோ அதே உரிமைகளும். வசதிகளும் முஸ்லிம்களுக்கும் வழங்கப்படும் என்று நேற்றையக் கூட்டத்திலே அவர்கள் தீர்மானித்திருப்பதாகவும் இது ஒரு முன்னேற்றகரமான விடயம் என்றும் அவர் சொன்னார். அப்போது நான் அவருக்குச் சொன்னேன் தமிழர்களுக்கு என்ன தேவை என்பதை தீர்மானிக்கும் உரிமை தமிழர் கூட்டமைப்புக்கும், புலிகளுக்கும் இருக்கின்றது. இதில் எந்தவிதமான பிரச்சினைகளும் இல்லை. ஆனால், முஸ்லிம்களுக்கு என்ன உரிமைகள், சலுகைகள் தேவையென்பதை அவர்கள் தீர்மானிக்க முடியாது. அதைத் தீர்மானிக்க வேண்டியது முஸ்லிம் எம்.பிக்கள் அல்லது முஸ்லிம்கள்தான். ஆகவே இது தொடர்பில் நாங்கள் நிறையப் பேசவேண்டியிருக்கிறது. இதை நாங்கள் பேசுவோம் என அவருக்கு நான் சொன்னேன். ஆனால், தளபதி ரமேஷ் மட்டக்களப்பிலே ஊடகவியளாளர்களுடனான கூட்டத்திலே பேசியதை நான் தொலைக்காட்சியில் பார்த்தேன். முஸ்லிம்கள் தங்களுக்கென்று ஒரு அதிகார அலகொன்றை கேட்க வேண்டிய அவசியமில்லை. நாங்கள் அவர்களை நியாயமாக நடத்துவோம். நீங்கள் ஆயுதங்களை தூக்க முனைந்தால் பாரதூரமான விளைவுகள் ஏற்படும் என்றெல்லாம் பேசினார். முஸ்லிம்களுக்கு என்ன தேவை என்பதை முஸ்லிம்களே தீர்மானிக்க வேண்டும் என்பதைத்தான் நாம் மீண்டும் வலியுறுத்த முடியும்.

*நீங்கள் முஸ்லிம் காங்கிரஸின் ஸ்தாபக உறுப்பினராக இருந்து பாராளுமன்ற உறுப்பினராக பணியாற்றியுள்ளீர்கள். மட்டுமன்றி வடக்கு கிழக்கு முஸ்லிம்களை பிரதிநிதித்து வப்படுத்துகிறீர்கள். ஒரு மாற்று அரசியல் தலைமையை முஸ்லிம்களுக்குள் கட்டியெழுப்புவது பற்றி நீங்கள் சிந்திக்கவில்லையா?*

முஸ்லிம் காங்கிரஸ் தலைமைத்துவத்தில் நான் மட்டுமில்லை முழு முஸ்லிம்களும் நம்பிக்கை இழந்துவிட்டார்கள். அதிலும் வடக்கு கிழக்கு முஸ்லிம்கள் முற்றும் முழுவதுமாக நம்பிக்கை இழந்து விட்டார்கள். ஹக்கீமை எதிர்த்த காரணத்தினால் நாங்கள் வெளியேறினோம். இப்போது அதாவுல்லா அணியினர். இப்போது அவரை எதிர்க்கவோ. கருத்துக்களைக் கூறவோ அங்கு யாருமில்லை. அங்கிருப்பவர்கள் எல்லோரும் ஏதோ ஒரு அடிப்படையில் ஏதோ ஒரு தேவைக்காக கட்டுப்பட்டிருப்பவர்கள். தங்களின் பாராளுமன்ற உறுப்பினர் பதவி போய்விடும் என்று ஒரு சிலரும், இதை விட்டால் வேறு எந்தக் கட்சியிலும் நாம் எம்.பியாக வரமுடியாது என்று ஒரு சிலரும் தன்னை விட்டு வேறொருவரை தனது தொகுதியில் நிறுத்தினால் தன்னால் எம்.பியாக வரமுடியாதென வேறொரு சிலருமாய் இப்படிக் காரணங்களுக்காக நிற்கிறார்களே தவிர. கொள்கைகளுக்காக அல்ல. இதை நான் தெளிவாகச் சொல்கின்றேன். முஸ்லிம் காங்கிரஸின் கொள்கைகளையும், அதை ஸ்தாபிக்கப்பட்ட நோக்கங்களுக்காகவும் பணியாற்ற அங்கு யாருமில்லை. முஸ்லிம் காங்கிரஸ் தலைவரை இன்னொரு தேர்தலில் அன்றி வேறு வகையில் நீக்க முடியாது. இது தொடர்பாக அதாவுல்லா அணியினருக்கும் நிறைய ஆலோசனை கூறியிருக்கிறேன். அவர்களிடம் நான் ஆரம்பத்திலேயே கூறியிருந்தேன் உங்களால் தடையைக் கூட போட முடியாது என்று. முஸ்லிம் காங்கிரஸில் தலைவர் வைத்தது தான் சட்டம். முஸ்லிம் காங்கிரஸ் தலைவராக ஒருவர் தெரிவு செய்யப்பட்டால் ஒன்றில் அவர் மௌத்தாக வேண்டும் அல்லது அவர் ராஜினாமாச் செய்ய வேண்டும். அதாவுல்லாவுடன் 22 பேர் இருந்தாலும் அவரைத் தூக்கி வெளியே எறிய முடியாது இது தான் உண்மை. அவர் அவரின் பாட்டில் போய்க் கொண்டிருந்ததால்தான் ஒன்றுடன் நாங்கள் வெளியேறினோம். மூன்றுடன் அதாவுல்லா வெளியேறினார். நான்கு. ஐந்து என இப்போது போய்க் கொண்டிருக்கிறது. இவைகளைத் தவிர வேறு எதுவும் நடைபெறவில்லை.

கடைசியாக பேர்லின் பேச்சுவார்த்தைகளில் நடந்தவை தொடர்பாக டொக்டர் ஹஸ்புல்லா அவர்களோடு நான் பேசிய போது. மீள்குடியேற்றம் தொடர்பாக பேர்லின் பேச்சுவார்த்தையின் போது பேசப்பட்டதே தவிர முஸ்லிம்களின் மீள்குடியேற்றம் தொடர்பாக ஒரு வார்த்தைக் கூட பேசவில்லை என்றார். வடக்கிலிருந்து ஒரு இலட்சம் முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டுள்ளனர். அமைச்சர் ரவூஃப் ஹக்கீம் கூட இவ்விடயம் தொடர்பாக எந்தவிதமான ஒரு பேச்சும் பேசியதாக எனக்குத் தெரியவில்லை. அங்குள்ள தகவல்களின் படி அவர் பேசவில்லை என்பதாகவே நான் அறிந்தேன். டொக்டர் ஹஸ்புல்லா அவர்கள்தான் வடக்கில் முஸ்லிம்களின் மீள்குடியேற்றம் சம்பந்தமாக சில விடயங்கள் உள்ளடக்கப்பட வேண்டும். தமிழ் மக்களுடைய குடியேற்றத்திற்கும். முஸ்லிம்களுடைய குடியேற்றத்திற்கும் இடையில் சில வேறுபாடுகள் உள்ளன. தமிழ் மக்களுக்கு வீடு, வீதி போன்றவற்றை ஏற்பாடு செய்து கொடுத்தால் அவர்கள் குடியேற முடியும். ஆனால், முஸ்லிம் மக்கள் மீள்குடியேறுவதாயின் இவையெல்லாவற்றையும் விட புலிகளின் உத்தரவாதமே சர்வதேச சமூகத்திற்கு முன்னால் வழங்கப்பட்டால் மட்டுமே முஸ்லிம்களால் குடியேற முடியும் என்று சொன்னதற்கு. குடியேற்றம் என்றால் எல்லாம் ஒரு குடியேற்றம்தான். முஸ்லிம்கள் வேறு தமிழர்கள் வேறு என்று ஏற்றுக் கொள்ள முடியாது. முஸ்லிம் என்ற வார்த்தையை பாவிக்கக் கூட அன்டன் பாலசிங்கம் அவர்கள் மறுத்து விட்டார் எனச் சொன்னார். கடைசியில் பேர்லின் பேச்சுவார்த்தையின் போது முஸ்லிம் என்ற வார்த்தையே பாவிக்கப்படவில்லை.

→ 5

# முஸ்லிம்களின் வரலாற்றில் மு.கா. ஒரு மைல்கல்




அன்புள்ள நமது மக்களே!

வரலாற்றுச் சக்கரம் மீண்டும் சுழன்று திரும்புகிறது. இங்கு பிரசுரிக்கப்பட்டிருக்கும் ஆவணம் சகோதரர் நிஜாமுதீன் அவர்களால் எழுதப்பட்டு நமது மக்களுக்காக பிரசுரிக்கப்பட்டது. 29.11.1986ம் ஆண்டு ஸ்ரீ.ல.மு.காங்கிரஸ் அரசியல் கட்சியாக பிரகடனப்படுத்தப்பட்ட தினத்தில் "ஸ்ரீ.ல.மு.காங்கிரஸ்" நமது மக்களுக்கான விடுதலைக்கு உயிர்மூச்சாக பாடுபடவும் போராடவுமான நியாயங்களை முன்வைப்பதற்கும், அன்றைய அரசியல் சூழலில் ஐக்கிய தேசிய கட்சி முஸ்லிம் பிரதிநிதிகளின் துரோகத்தனத்தை சுட்டிக்காட்டுவதற்குமாக எழுதப்பட்ட அறிக்கைதான் இது.

இதனை நமது மக்களில் ஒருவர் மிகப்பத்திரமாக வைத்திருந்து முஸ்லிம் குரல் பத்திரிகைக்கு கத்தரித்து அனுப்பிவைத்துள்ளார். அவர் இரண்டு கேள்விகளை கேட்டிருக்கின்றார்.

1. அன்றைய ஐக்கிய தேசிய கட்சியின் துரோகத்தனத்திற்கும் இன்றைய முஸ்லிம் காங்கிரஸின் துரோகத்தனத்திற்கும் ஏதாவது அரசியல் வேறுபாடு இருக்கின்றதா?

2. அன்றைய தலையாட்டி பொம்மைகளையும் ஆலாவட்டங்களையும் பற்றி அதிருப்திகொண்டு கேள்வி எழுப்பிய நண்பர் நிஜாமுதீன் இன்று என்ன செய்துகொண்டிருக்கிறார்? துரோகிகளின் ஆசனங்களை மாற்றி அமர்வதற்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆரம்பிக்கப்பட்டது? நண்பர் நிஜாமுதீன் முஸ்லிம் குரலினூடாக இதற்கு பதில் சொல்வாரா? இந்த ஆவணம் உண்மையின் சாட்சியா? பொய்களின் சாட்சியா?

காலம் காலமாக நிகழ்ந்து வந்த பேரினவாத அலையில் பிறந்த வெடிப்பில் கசிந்த இரத்தத்தினைப் போசாக்காக்கி வளர்ந்து நிற்கும் எண்ணக் கருவானது ஒரு கற்பகத்தரு. அட்டைக் கத்திகளும், வெறும் காட்டுக் கூச்சல்களும் பாளங்கற்கள் போன்ற இதயங்களைத் துளைத்து முளைத்து நிற்கும் தனிக்கட்சி என்ற அந்தக் கற்பகத்தருவை தரைமீது போட்டுவிட முடியுமா என்ன?

இதோ இஸ்லாமிய இளநெஞ்சங்களில் எழுந்த வெடிப்புகள் சில. அவைதான் ஈழத் து முஸ்லிம்களுக்கு ஒரு தனிக்கட்சி தேவை இன்றேல், திருவாளர் அமிர்தலிங்கம் போன்றவர்கள்தான் எமக்காக வாய் திறக்க வேண்டிய அவலத்துக்கு நாம் ஆளாக வேண்டிவரும் என்ற உணர்வுக்கு வித்திட்டது என்பது வெறும் போலி வார்த்தைகளல்ல.

கடந்த காலங்களில் பேரினக் கட்சிகளின் பெருந்துணையாளிகளும், தலையாட்டிப் பொம்மைகளும், ஆலவட்டங்களும், முஸ்லிம்களின் தலைவர்கள் என்ற முத்திரை இடப்பட்டார்கள். எடுபிடிகள் கையாடகள்தான் தலைவர்கட்குப் பக்கபலம், மீறி யாரும் பேசிவிட்டால் அவர் தண்டனைக்குள்ளாக்கப்படுவார். இந்த நிலைமையில் ஏனோ தானோ என்ற நிலையில் சமூகத்தில் பலபேர் குட்டித் தூக்கத்திலிருந்தார்கள்.

எம் சமூகம் தனது பரிபூரண ஆதரவை ஒரு தேசியக் கட்சிக்கு அளித்தது. எமது பாதுகாப்புக்கும், எமது உரிமைகளையும் வென்றெடுக்கவும் இஸ்லாமியரின் நிறமான பச்சை கொண்ட கட்சிக்காக ஆதரவளித்தோம். கடந்த காலச் சம்பவங்கள் மேலும் இடம்பெறாது. இடம்பெற்றாலும் அதற்காக குரல் கொடுக்கவும், நடவடிக்கைகளிலிறங்கவும் எம் தலைவர்கள் அமைச்சரவையில் இருக்கிறார்கள் என இறுமாந்திருந்தோம். இந்த நம்பிக்கைக்கு விழுந்த முதல் வேட்டாக 1983 தமிழ், சிங்கள இனக் கலவரத்தில் பாதிக்கப்பட்ட முஸ்லிம்கள் பற்றிய தகவல்களும், அவர்களின் அநாதரவான நிலையும் இருந்தன. அது மட்டுமன்றி எமது நிலைமை எந்தளவு கேவலமானது என உணரவும் வைத்தது.

மன்னாரில் முஸ்லிம்கள் தமது உடைமைகளை இழந்தார்கள். கிழக்கில் எங்கும் அப்பாவி முஸ்லிம்களின் உயிர்கள் எந்தவித காரணமுமின்றி பறிக்கப்பட்டு வருகின்றன.

இஸ்ரேலிய நலன்காக்கும் பிரிவு அமைக்கப்பட்ட போது இஸ்லாமிய இளவல்கள் அமைதியான வழியில் தமது எதிர்ப்பினைத் தெரிவித்த போது மிகவும் கொடூரமான முறையில் நிராயுதபாணிகளை ஆயுதங்களால் தாக்கினார்கள். அப்போதுகூட எம் இஸ்லாமிய சமூகத்தின் றப்பர் ஸ்டாம்ப் தலைமைகளுக்கு உணர்வு என்ற சொல்லுக்கு அர்த்தம் தெரியாது போயிற்று.

ஒரு சிலர் முதல் நாள் தலையை வெளியே காட்டிவிட்டு அடுத்தடுத்த நாட்களில் ஆமையைப் போல் உள்ளிழுத்துக் கொண்டார்கள். உண்மையில் நாம் வெட்கித் தலைகுனிந்தோம். எமது உணர்வுகளுக்கு மதிப்பளிக்கத் தவறுமிடத்தில் நமக்கென்ன நலன் கிடைத்துவிடப் போகிறது.

மேற்படி - சம்பவங்களின் தொடர்கள் இஸ்லாமியனின் சமாதானம் தேடும் இதயத்தில் ஒரு தனியான இஸ்லாமியக் கட்சியால் மட்டுமே இது முடியும் என்பதை நன்கு உறுதி செய்தது. இவ்வாறு பல்வேறுபட்ட பிரச்சினைகளின் மத்தியில் ஈழத்தின் ஒவ்வொரு இஸ்லாமியனும் அல்லற்படும் வேளையில் இனப்பிரச்சினைத் தீர்வு பற்றிய பேச்சுவார்த்தைக்கு முஸ்லிம்களின் சார்பாக ஒரு குழு செல்லுவதால் மட்டுமே ஒரு யதார்த்தமான பேச்சுவார்த்தைக்கு சாதகமான ஒரு சூழ்நிலையைக் கொடுக்கும். இவ்வாறான ஒரு சூழ்நிலையில் முஸ்லிம்களைப் பிரதிநிதிப்படுத்த தனிக்குழு அவசியமில்லை. ஏனெனில் அப்பணியை செய்வதற்கு அதிக முஸ்லிம் பிரதிநிதிகள் உள்ளனர் என்ற கருத்து முன்வைக்கப்பட்டது. எனினும் முஸ்லிம் எம்.பிக்கள் எமது அபிலாஷைகளை பிரதிபலிக்கவில்லை. இது எங்களது அரசியல் அடிமைத்தனத்தைத் தெட்டத் தெளிவாக்கியது. சுயமகுடம் தாங்கிய எங்கள் போலிகள் அதற்கும் தாயாரானபோது இஸ்லாமிய இளவல்கள் விழித்துக் கொண்டார்கள். உயரிய எண்ணங்களுக்காக ஒன்றுபட்டார்கள். அந்த வகையில் எம்மை ஒன்றுபடுத்தவும் உண்மையாக நாம் பிரச்சினையில் எங்கிருக்கிறோம் என்பதையும் வெளிப்படுத்த ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸும் அதன் தலைவர் ஜனாப் எம்.எச்.எம்.அஷ்ரஃப் அவர்களும் அளித்த பங்களிப்புகளும் அர்ப்பணிப்புகளும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அரசியற் கட்சியாக இருப்பதற்கான அருகதையை நிதர்சனமாக்குகிறது.

இக்கால வேளையில்தான் எங்கே? எங்கள் கட்சி? எமக்குதவி எங்கிருந்து வரும்? நாம் ஆதரவளித்த தலைவர்கள் எங்கே எதிரிகளின் துப்பாக்கி ரவைகள் எம்மிதயத்தைத் துளைக்கின்றனவே! எங்கே எங்கள் தலைவர்கள்? நாங்கள் ஏன் சுடப்பட வேண்டும்? எங்கள் செங்குருதி ஏன் கொட்டப்படுகிறது? ஓலமிட்டு ஓங்கிஅழுதன நல்லிதயங்கள். ஓடி ஒளிந்தன இருண்ட உள்ளங்கள். நமக்கென்ன, தலைமை, நமக்கென கொள்கைகள், நமக்கென்ன கட்சி இல்லாதவரை இவையெல்லாம் சர்வ சாதாரண நிகழ்வுகளாகிவிடும்.

ஆதலால்தான் அவசரமும், அவசியமுமான தேவையாக முஸ்லிம்களுக்கு ஒரு தனிக் கட்சி வேண்டும் என்ற இஸ்லாமியர் சகலரதும் எண்ணங்களும், அபிலாஷைகளும் நிறைவேற்றும் இதய சுத்தியோடு காங்கிரஸ் பிரகடனமாகிறது.

போலித் தலைவர்களும் வாய்ச் சவடால்களும் அரசோச்சிய காலம் போய் அபூபக்கர் (ரலி) உமர் (ரலி) உதுமான் (ரலி) அலி (ரலி) போன்ற உயரிய உத்தமர்களின் சீரிய வழியை பின்பற்றும் இஸ்லாமிய இளவல்கள் விழித்தெழுந்து விட்டார்கள்.

பாறுக் மன்னர் வாரிசுகளும், பஹ்லவிகள் வாரிசுகளும் மக்களை ஏமாற்றிய காலம் என்றோ முடிந்து விட்டது. சமூகப் புல்லுருவிகளுக்கும், சமூக இரத்தத்தை உறிஞ்சும் அட்டைகளுக்கும், காங்கிரஸின் பிரகடனம் நாராசமாய் ஒலிக்கட்டும். உண்மையான சமூக உணர்வு கொண்ட நல்லிதயங்களின் நிம்மதிப் பெருமூச்சு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் வளர்ச்சிக்கு உரமாயமையட்டும். முஸ்லிம்களின் நெடுநாட்கள் கனவான தனிக்கட்சி ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் என்ற உருவில் யதார்த்தமாகவும் நனவானதாகவும் உள்ளார்த்தம் வாய்ந்ததாகவும் அமையும். இந்நாள்தான் எம்வாழ்வின் பொன்னாள் எனில் மிகையாகாது.

நன்றி : தினகரன் வார மஞ்சரி, 29.11.1986

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org



## முல்லாவின் பார்வையிலே...

# இனப்பிரச்சினை - சமாதான முயற்சிகள் பற்றி நம் முஸ்லிம்களுக்கு எந்தளவு தெரியும்....?

இரண்டு தசாப்தங்களாக நம் தாயகத்தை சீரழித்து வந்த இனப்பிரச்சினை; கடந்த காலங்களில் மேற்கொள்ளப்பட்டு வந்த தீர்வு முயற்சிகள்; அவற்றின் தோல்விகள்; ஐக்கிய தேசிய முன்னணியின் அரசு அமைந்த பின், அமுல் நடத்தப்பட்டு வரும் யுத்த நிறுத்தம்; அரசும் - புலிகளும் பேச்சுவார்த்தை மேசையில் கைகுலுக்கி வரும் சமாதான முயற்சிகள் போன்ற முக்கியமான அரசியல் விவகாரங்கள், நம் முஸ்லிம்களுக்கு எந்தளவு தெரியும்? எவ்வளவு புரியும்? எத்தனை பேருக்கு தெரியும்?

இப்படி வினாக்களை "முல்லா" தொடுத்தால்,பதில் திருப்திகரமாக அமையாது எனத் திடமாகக் கூறலாம்! நம் முஸ்லிம்களிடையே அரசியல் அரங்கில் ஆளுங்கட்சியில் அமைச்சர்களாக இருப்போர், எதிர்க்கட்சி உட்பட, நாடாளுமன்றத்தில் எம்.பீக்களாகப் பதவி வகிப்போர், ஏனைய அரசியற் கட்சிகளில் முக்கிய அங்கம் - பதவி வகிப்போர், சமுதாய அமைப்புக்களின் உத்தியோகத்தர்கள் - முன்வரிசை உறுப்பினர்கள் - ஊடகவியலாளர்களிலும் ஒருசிலர், அன்றாடம் பத்திரிகை வாசிக்கும் "பக்கா" வாசகர்கள் சிலர் - மட்டுமே எரியும் அரசியல் பிரச்சினைகள் பற்றி அறிவர். அன்னவர்களுக்கே இது விடயத்தில் தெளிவான சிந்தனை இருக்கும்.

மற்றபடி, சன்மார்க்க சமுதாயத்தில் பிறருக்கு இனப்பிரச்சினை பற்றியோ, அதன் சாதக - பாதகங்கள் பற்றியோ, சமாதான நடவடிக்கைகள் குறித்தோ எதுவும் தெரியாது. ஏதோ மேலோட்டமாக, பிரச்சினை தீர்வு - சமாதானம் - ராணுவம் - புலிகள் போர் - குண்டுவெடிப்பு -" ஹர்த்தால் - கடையடைப்பு - கூட்டங்கள் என்று தெரியுமே தவிர உள்ளீடாக அவற்றின் கோரம் - சாரம் - காரம் - தூரம் - நேரம் எதுவுமே தெரியாது; புரியாது.

நம் சமூகத்தில் தெரிந்தவர்கள் - தெளிவான சிந்தனை உடையவர்கள், முழு சமுதாய வீதத்தோடு ஒப்பிடுகையில், சிறு வட்டத்தினரேயாவர். தெரியாதவர்கள் - புரியாதவர்கள் - அது தொடர்பான சிந்தனையே அற்றவர்கள், மிகப் பெரிய வட்டத்தையும் வரிசையையும் சேர்ந்தவர்களாவர்.

ஒரு சமுதாயம் தன் எதிர்கால முகவரியை தீர்மானித்துக் கொள்ளப்போகும் முக்கியமான ஒரு காலப்பிரிவில், இப்படி தெரிந்தும் - தெரியாமலும், சம்பந்தப்பட்டும் - படாமலும், பங்காளிகளாகவும் - பார்வையாளர்களாகவும் இருந்துவிட்டுப் போவது சரியா? ஆரோக்கியமானதா? அவசியமான அணுகுமுறைதானா? சமூகப் பிரக்ஞையுள்ள உடன்பிறப்புக்களின் சிந்தனைக்கு மேற்கண்ட வினாக்கள் விருந்தாகட்டும்!

சன்மார்க்க இதயங்களே- இனப்பிரச்சினை, சமாதான முயற்சிகள் பற்றி சமுதாயத்து மக்கள் அனைவருமே தெரிந்திருக்க வேண்டும் என்பது அவசியந்தானா?

ஆசிரியர்கள் படிப்பிக்கிறார்கள்; தொழிலதிபர்கள் வர்த்தகம் செய்கின்றார்கள்; உலமாக்கள் சமய விஷயங்களில் தஃவா செய்கின்றார்கள். அதுபோன்று முஸ்லிம் அரசியல்வாதிகள் அரசியல் பிரச்சினைகளை கவனித்துக் கொள்ள வேண்டியதுதானே! இதில் எல்லோரும் சம்பந்தப்பட்டு குட்டையை குழப்புவானேன்? இவ்வாறு கேள்வி எழுப்புவதிலும் நியாயம் இருப்பது போலவே தோன்றுகிறது. அவரவர் துறைக்கான பொறுப்புக்களையும் - பணிகளையும் - கடமைகளையும் சம்பந்தப்பட்ட அவரவர்களே செய்வதுதான் ஒழுங்கும் - சிறப்பும் பொருத்தமுமாகும்.

ஆனால் - ஒட்டு மொத்த சமூகத்தின் கூட்டு மொத்த எதிர்காலம் தொடர்பான விவகாரங்களில், சமூகத்தின் அனைத்துத் தரத்தினரும், துறையினரும் சம்பந்தப்பட்டு, ஒற்றைக் குரலில் சமூகப் பிரச்சினைகளை சபைப்படுத்துவதே, எதிர்நிலை வட்டாரத்தை தம்பக்கம் ஈர்க்கவும், வளைக்கவும், உரிமைகளை வென்றெடுக்கவும் வாய்ப்புண்டாகும். ஒற்றைக் குரலில் சமுதாயக் குறைகளைக் கோடிட்டுக் காட்டி, தேவைகளைத் தெரியப்படுத்தும் போதுதான், ஒரு சமுதாயமே அணிதிரண்டு முன் வந்திருப்பது, எதிர்நிலை வட்டாரத்திற்கு தெரியவரும்.

ஓர் உதைப்பந்தாட்ட ஆட்டத்தில் கோல் அடிப்போர் என்னவோ, முன்னிலை (Forward Line) ஆட்டக்காரர்கள்தாம். ஆனால் - "அவர்கள்" கோல் அடிக்கவும், மற்றவர்கள் பந்தினை தட்டிக் கொடுத்தால்தானே வெற்றி பெற முடியும். உதைப்பந்தாட்ட ஆட்டத்தில் ஒவ்வொரு நிலையில் (Position) ஆடும் வீரர்களும், பந்தினை தட்டிக் கொடுக்கும் தம் பணியை - தம் பொறுப்பை சரிவர செய்தால்தானே, முன்னிலை வீரர்கள் கோல் அடிப்பது சாத்தியமாகும். எல்லாத்தரத்து வீரர்களும் கூட்டுப் பொறுப்பிலுள்ள தனக்குரிய பங்கினை செய்வதால்தான் வெற்றி பெற முடியும். இன்றேல் தோல்விதான் பரிசாகக் கிடைக்கும்.

சமுதாயத்திலுள்ள ஒவ்வொருவரும் சமூக நலன் என்னும் கூட்டுப் பொறுப்பில், தத்தமக்குரிய பங்கினை முதலில் புரிந்து கொள்ள வேண்டும். புரிந்து கொண்டாலதான் தெளிவும் - ஆற்ற வேண்டிய பணியும் தெரியவரும். புரிந்து கொள்வதற்கு முதலில் அறிதல் வேண்டும்.

இந்த "அறிதல்நிலை"யை இனப்பிரச்சினை - சமாதான முன்னெடுப்பு விடயங்களில் சமூக மட்டத்தில் ஏற்படுத்தப்பட வேண்டும் என்பதுதான், "முல்லா"வின் தூரநோக்குடைய விருப்பம். இந்த "முல்லா" வின் விருப்பத்துக்கு காரணம் இல்லாமலில்லை.

சமூகத்து சகோதரர்களே - இன்று சமாதான முயற்சிகளில் பல்வேறு விஷயங்களில் நம்மவர்கள் கவனஞ் செலுத்த வேண்டியது அவசியமாகிறது. முஸ்லிம்களின் தலைவர் என்ற நிலையில், அரச தரப்பு பிரதிநிதியாகவே அமைச்சர் ரவூப் ஹக்கீம் பேச்சுவார்த்தைகளில் கலந்து கொண்டார். இப்போது முஸ்லிம்கள் தனித்தரப்பாக பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்ள வேண்டும் என்ற கோஷம் எழுந்துள்ளது. முஸ்லிம் பிரதிநிதிகள் நேர்வே அமைச்சர்களை காண வேண்டும். புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரனை சந்தித்துப் பேசவேண்டும். ஜனாதிபதியை - பிரதமரை எல்லாம் முஸ்லிம் தலைவர்கள் சந்தித்து கலந்துரையாட வேண்டும். சமஷ்டி முறை அமுலுக்கு வரவேண்டும். எத்தகைய சமஷ்டி முறை நம்நாட்டுக்கு ஏற்றது? கப்பல் தாக்கப்பட்டது, சரியா? பிழையா?

இப்படி பல விடயங்கள் சமகால அரசியலில் அலசப்படுகின்றன. இவை அனைத்தும் நம் சமூகத்தைத் தொட வேண்டும். அந்தத் தொடும் ஸ்பரிசத்தின் தட்ப வெட்ப குணங்கள், நம்மவர்களுக்கு நலம் சேர்க்குமா? பலம் சேர்க்குமா? இவை பற்றி சமூகத்திற்கு தெளிவை ஏற்படுத்த வேண்டும். எல்லாரும் எல்லாம் தெரிந்த ஞானத்தோடு தெளிவோடு இருந்தால், சமூகத்தின் ஒற்றுமைக் குரல் தெளிவாகவும் - துணிவாகவும் ஒலிக்கும் என்பது திண்ணம்.

தமிழ் சமூகம் தம் எதிர்காலம் குறித்து சிந்திக்கத் துவங்கி விட்டது. இப்போது அவர்கள் தம் எதிர்காலத்திற்காகப் போராடுகின்றனர். சமாதான பேச்சுவார்த்தை மேடையில் பேரம் பேசுகின்றனர். ஆனால் - இன்னொரு சிறுபான்மை இனத்தவரான முஸ்லிம்கள் என்ன செய்கின்றார்கள்? அரசியலில் பிணக்கம் கண்டு தடுமாறுகின்றனர். தலைமைத்துவங்கள் தடுமாறுகின்றன. உலமாக்கள் அலங்கார சுன்னத் விவகாரங்களில் முரண்பட்டுக் காணப்படுகின்றனர். அறிஞர்கள் - கல்விமான்கள் மௌனிகளாக வாளாவிருக்கின்றனர். சமூகத்தில் ஒரு சாரார் கிரிக்கெட்டில் மனம் புதைத்தும், இன்னொரு சாரார் தம் வீட்டை குட்டி கொட்டகையாக மாற்றி விட்டு, சினிமாவில் இரவு பகலாக சிந்தை மயங்கியும் கிடக்கின்றனர்.

இப்படி ஒவ்வொரு தரத்தினரும் தத்தம் துறைகளில் பிணங்கியும் - தடுமாறியும் - மௌனித்தும் - சிந்தை மயங்கியும் கிடப்பதற்கு காரணம் என்ன? சமுதாயத்தின் மகாகனம் பொருந்திய ஜமாத்தார் - விஷய விளக்கமின்றி ஒதுங்கியிருப்பதுதான். என்றும் நம் ஜமாத்தார் நாட்டு நடப்புகளில் ஒதுங்கியேயிருப்பது ஏற்றுக் கொள்ளக் கூடியதா?

இன்று தமிழ் கலைஞர்கள் வடக்கே தெருக்கூத்து நடாத்துகின்றனர். இனப்பிரச்சினை - தமிழ் சமூகம் கடந்த காலங்களில் பட்ட துயர் - பண்டா - செல்வா ஒப்பந்தமும், டட்லி-செல்வா ஒப்பந்தமும் மாறி மாறி வந்த பேரினவாத அரசுகளால் கிழித்தெறியப் பட்ட அவலம், இலங்கை -இந்திய ஒப்பந்தம் போன்ற பல விஷயங்களை உள்ளடக்கி, இவற்றை நினைவுபடுத்தும் விதமாக, தெருக்கூத்து நடத்தி , தமிழ் மக்களை விழிப்படையச் செய்கின்றனர். நம் முஸ்லிமகள் இப்படி ஏதேனும் ஒரு வழியில் சமுதாய சரித்திர - நிகழ்கால நிகழ்வு பதிவுகளை மக்களுக்கு விளக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளோமா?

தெருக்கூத்து- ஆடல் -பாடல்- நாடகம்- சினிமா- தொலைக்காட்சி சித்திரம் என்பன , நம் சமூகத்திற்கு சரீஆவின் நிழலில் சம்மதத்திற்குரியன அல்ல எனும் நிலைப்பாடு தடையாய் இருக்கலாம். சமயத்தின் சம்மதத்திற்குரிய வழிகளிலேனும் விளக்கும் நிகழ்வுகளை நாடெங்கும் நடத்தலாமே.

முஸ்லிம்கள் வாழும் ஊர்களில் - கிராமங்களில் - பகுதிகளில் எல்லாம் இனப்பிரச்சினை - சமாதான முயற்சிகள் - முஸ்லிம்களின் குறைகள் - கோரிக்கைகள் - அபிலாஷைகள் போன்றவற்றை முஸ்லிம்களுக்கே புரியவைக்கும் பொதுக்கூட்டங்களை - கருத்தரங்குகளை - மாநாடுகளை நடத்தலாமே. பள்ளிவாயல்களில் ஐங்காலத் தொழுகை முடிவுற்றதை அடுத்து, "பள்ளியினுள் வீண் பேச்சு வேண்டாம்" என்றோர் அறிவித்தல் "பிரேம்" பண்ணி தொங்கவிடப் பட்டப்போதும், வக்பு செய்யப்பட்ட இடத்திலன்றி, வராந்தாவில் - வெளிமுன்றலில் ஜமாத்தாரை கூடச் செய்து பேசலாமே.

"பிரதமர் அல்லது ஜனாதிபதி இப்படியொரு அறிக்கையை விட்டிருக்கிறார். இவ்வறிக்கை மேலோட்டமாகப்பார்த்தால் சிறுப்பான்மை இனங்களுக்கு தீமை இல்லாததுபோல் தெறிந்தாலும், நாளடைவில் நம்மவர்க்கு நன்மை தராது. முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அவ்வறிக்கையை ஆட்சியின் பக்கமிருந்து மட்டும் பார்த்தால் இப்படித்தான் தெரியும், மறுபக்கமும் பார்வையை செலுத்தினால், வேறு பக்கங்களும் வெளிச்சமாகும்" என்றெல்லாம் கதீப் அல்லது பிரதம தர்மகர்த்தா" அல்லது விஷயம் தெரிந்த பிரமுகர் பேசி விளக்கப்படுத்தலாம். இனிமேலாவது இத்தகைய விளக்கக் கூட்டங்களை நடத்தும்படி "முல்லா" வேண்டிக் கொள்கிறேன்.

பள்ளிவாசல் நிழலில் இப்படியான நாட்டு நிலவரங்களை விளக்கும் விழிப்புணர்வு கூட்டங்களை - மஜ்லிஸ்களை நடத்தினால், அவற்றுக்கு பக்தியுடனான வரவேற்பும், மதிப்பும் கிடைக்கும். ஊர் பள்ளிவாசல் தர்மகர்த்தாக்கள் இது விடயத்தில் கரிசனை காட்டி ஆவன செய்ய சிந்திப்பீர்.

## பறவைகள் கூடு திரும்பின

நாளைய சூரியன்
எழுந்து மீண்டும் விழும் மாலைப்
பொழுதின்
மீது கொண்ட அதிகபட்ச ஆசைகள்
இன்றைய வாழ்வினில் நின்றும்
விசாலித்த அவாவுதலை ஏற்படுத்திற்று.

கண்கள் கீழும் மேலும் சுருக்கு விழ
இமைகள் உள்ளிழுக்கும்
ஒரு நூற்றாண்டு வாழ்விற்காய்
ஏங்குகிறேன்.

இன்றிரவில்,
தேய்ந்து இருளடையும் பௌர்ணமியால்
கறுமை கொள்ளும் இம்மண்
அதன் மீதான ஆசைகளது
நினையா எண்ணிக்கைப் பற்றுதலை
ஊட்டிற்று
கோணலாகி துகள் விழுந்த வாழ்வு
பாவச் சுமைகளின் மீதே எழுந்தருளிய
உலகில்
பயணிக்க ஏதேனும் பாதைதேடி
கிடக்கிறது.

அடையாளமின்றி துரத்தப்பட்டதன் மீது
வீறு கொண்டெழும் சத்தியக் குரல்கள்
காயப்பட்டு விழிபிறழும் இங்கும்,
வெற்றிக்கான பாதையால் பயணிக்கிறது.
நாளைய சுதந்திர வாழ்வின் மீது
அளவற்ற ஈர்ப்பினால் இன்றைய துயரம்
புதிய வழியில்
மௌனித்த எம்மாத்மாக்களை
உசுப்பிற்று.

வெற்றிக்கான அல்லது விடுதலைக்கான
காத்திருப்பு தூரமாகி நின்று
ஒரு மாலைப் பொழுதில் சூரியன்
மறைதலாய் மாறிற்று
பறவைகள் கூடுதிரும்பின.

இரவு கடந்த பின்
இருளடைந்த பௌர்ணமி சிறுகச் சிறுக
மறைய
காலையில் சூரியன் புதிதாய் எழும்பும்
பறவைகள் கூடுவிட்டு
சுதந்திரமாய் உலாவும்.

நான் சக ஆத்மாக்களுடன்
காத்திருப்புகள் தரித்து நிற்கும்
தளத்திற்கு
புதியதொரு உத்வேகத்துடன்
பயணிப்பேன்.

மிகப் பெரிய மனிதப் பட்டாளம்
சுயவர்களின் பிடியிலிருந்து விடுபட்டு
சுதந்திரமாய் உலாவும் பறவைகள் போல்
விடுதலைக்கான விலைகளில்
நாளை சில ஆத்மாக்கள் சாந்தியடையும்.

மிகத் திருப்திகர விடுதலையின் பெயரால்
சுவர்க்கத்தில் சில ரூஹூகளுடன்
அதிகபட்ச சுதந்திரத்தில் வாழும் நம்
ஆத்மாக்கள்.

பர்ஸான் முஹம்மத்.

சஞ்சிகை : மருதோன்றி
(சாகித்திய விழா சிறப்பு மலர் 2002)

வெளியீடு : பிரதேச கலாசாரப் பேரவை, கோறளைப்பற்று மேற்கு, ஓட்டமாவடி

பக்கம் : 46




கோரளைப்பற்று மேற்கு பிரதேச கலாசாரப் பேரவையின் சாகித்திய விழா சிறப்பு மலராக "மருதோன்றி" என்ற சஞ்சிகை வெளிவந்துள்ளது. மருதோன்றிக்கும் முஸ்லிம்களுக்கும் நெருங்கிய பந்தம் உண்டு. மண்வாசனையைப் புலப்படுத்தும் நோக்கில் பிரதேச சிறப்பு மலருக்கு "மருதோன்றி" என்ற பெயரை மிகப்பொருத்தமாக இட்டுள்ளனர்.

முஸ்லிம்களுக்கே உரிய கலை கலாச்சார பண்பாட்டு அம்சங்களை "மருதோன்றி" பதிவுசெய்துள்ளது. இன்றைய இலக்ரோனிக் மீடியாக்கள் இன்டர்நெட் மூலம் சிதைந்தும் மறைந்தும் போன பிரதேசத்தின் பாரம்பரியங்களை ஆழகாகவும் ஆழமாகவும் தொகுத்து ஒரு ஆவணமாகவே பதிவு செய்திருக்கின்றது மருதோன்றி.

கல்குடா முஸ்லிம்களின் கலை இலக்கிய முயற்சிகள் ஒரு குறிப்பு எஸ். எல். எம். ஹனிபா, கல்குடா முஸ்லிம் அண்ணாவிப்புலவர் பாரம்பரியம் ஏ. எல். பீர் முகம்மத் கல்குடா முஸ்லிம்களின் பண்டைய திருமண சடங்குகள் வை. அஹ்மதின் இலக்கியப்பணி, கல்குடா முஸ்லிம்களின் கிராமிய வைத்தியப்பாரம்பரியம் ஏ. எல். பீர் முஹம்மத்.

ஓட்டமாவடி, வாழைச்சேனை பிரதேச கவிதை வளர்ச்சி கலாநிதி செ. யோகராசா, கிழக்கிலங்கை முஸ்லிம்களிடம் அருகி வரும் கலைப்பாரம்பரியங்கள், அழகுராணி சிறுகதை (ராசாத்தி) மற்றும் கவிதைகளை உள்ளடக்கியதாக பிரதேச சிறப்பு மலரை வடிவமைத்துள்ளனர். தலைப்புக்களின் கனதிக்கு ஏற்றவாறு கட்டுரைகளின் வலிமையும், தரவுகளும் இல்லை என்பது கவனத்தில் கொள்ளப்படவேண்டிய விடயமாகும். எனினும் அருகிவரும் கலை, கலாச்சார விழுமியங்களையும் அதனுடன் சங்கமித்துள்ள விரல் விட்டு எண்ணக்கூடிய சிலரையும் இந்தமலரில் அறிமுகப்படுத்தியிருப்பது, எதிர்கால சந்ததியினருக்கான ஒரு வரலாற்று ஆய்வுக்குறிப்பென பாராட்டலாம்.

கட்டுரைகள் இன்னும் அழமாகவும், கனதியாகவும் ஆய்வு செய்யப்படவேண்டும். என்றதை அவாவி நிற்கின்றது.

கல்குடாத்தொகுதி முஸ்லிம்களின் வாழ்வியல் பாரம்பரியங்களை மிகக்கவனமாகத் தொகுத்து ஓர் ஆவணப்பதிவாக கொணர்ந்ததில், பிரதேச செயலக கலாச்சாரப்பேரவை வெற்றி பெற்றுள்ளதை இங்கு குறிப்பிட்டே ஆகவேண்டும்.

"மருதோன்றி" சிறப்பு மலரை முன்னோடியாகக்கொண்டு, கல்குடா முஸ்லிம்களின் பண்பாட்டம்சங்கள், இன்னும் விரிவாக ஆராயப்படவேண்டும். அதற்குரிய களப்பணிகளில் இன்றைய தலைமுறையினர் மிகுந்த தேடலுடன் ஈடுபடவேண்டும். நமது முதுசெம்களின் மரபுவழி பழக்கவழக்கங்களை அறியவும், ஆய்வு செய்யவும் "மருதோன்றி" வழிகாட்டியாக இருக்கின்றது என்பது அதன் சிறுதவறுகளையும், குறைகளையும், மீறி அதனைப்பத்திரப்படுத்த நம்மைத்தூண்டுகிறது. இதுவே இப்போதைக்கு ஆறுதலான விடயம்.

ஓட்டமாவடி - அறபாத்

நூல் விமர்சனத்திற்காக நூல்களை அனுப்புவோர் கட்டாயம் இரு பிரதிகளை அனுப்பி வைத்தல் வேண்டும்.
-பிரதம ஆசிரியர்

ஒவ்வொரு பேச்சுவார்த்தை....

நான் அமைச்சர் ரவூஃப் ஹக்கீம் அவர்கள் ஊடகவியலாளர் மகாநாட்டுக்கு வந்திருந்த போது காத்தான்குடி மேடையில் வைத்து சொன்னேன், அந்நேரம் தமிழ் பத்திரிகையாளர்கள் நிறையப் போ இருந்தார்கள். இப்படியானதொரு நிலைப்பாட்டை விடுதலைப் புலிகள் எடுப்பார்களாயிருந்தால், முஸ்லிம்கள் எனும் வார்த்தையைக் கூட பாவிப்பதை. முஸ்லிம்களின் மீள்குடியேற்றம் தொடர்பான ஒரு வார்த்தையைத்தானும் பாவிக்கப்படுவதை விரும்பாத நிலையில் நாங்கள் எவ்வாறு அவர்களுடன் ஒன்றுமையாக வாழலாம். ஆகவேதான் தனித்தரப்பு விடயத்தில் உறுதியாக நாங்கள் செயற்பட வேண்டுமென்று ரவூஃப் ஹக்கீமிடம் மேடையில் கூறினேன். அதற்கு அவர் பதிலளிக்கும் போது அவர் சொன்ன பதில் இந்த போலின் கூட்டத்தில் முஸ்லிம்கள் எனும் வார்த்தையை பயன்படுத்த மறுத்தாலும் அதற்கு முந்திய கூட்டங்களில் ஏற்றிருக்கிறார்கள் என்றே அவர் சொல்லி முடித்தார். நான் என்ன சொல்ல வருகின்றேன் என்றால் இந்த நிலைப்பாட்டிலே புலிகள் இருக்கும் போது ஐந்தாம் கட்டம்! ஆறாம் கட்டம்! ஏழாம் கட்டப் பேச்சுவார்த்தையென பேச்சுவார்த்தைகள் போய்க் கொண்டிருக்கும் போது நாம் சண்டையிட்டுக் கொண்டும் பத்திரிகைகளில் அறிக்கை விட்டுக் கொண்டும் இருக்கிறோம். ஒவ்வொரு பேச்சுவார்த்தையாக நாம் இழந்து கொண்டிருக்கிறோம். எப்படியாவது நாம் தனித்தரப்பாக பேசுவதற்குரிய முயற்சிகள் எடுக்க வேண்டும். இதற்காக ஹக்கீமின் ஒத்துழைப்பைப் பெற அவரை நாங்கள் சந்தித்தோம். அவர் முழு முயற்சி எடுப்பதாகவும் ஒத்துக் கொண்டார். ஹக்கீமின் தலைமையில் எல்லோருமே நம்பிக்கையை இழந்திருந்தாலும் அவரில்லாமல் தீர்வுகாண முடியாது என்பதாலேயே இன்னும் அவரை வைத்துக் கொண்டு செயற்பட வேண்டியுள்ளது. இன்னொரு தேர்தல் வரும் போதுதான் மக்கள் யாராரை என்னென்ன செய்வதென்பதை தீர்மானிக்க வேண்டும்.

*இன்று அரசியலில் ஸ்திரமற்றத் தன்மை காணப்படுகின்றது. ஐக்கிய தேசிய முன்னணி ஆட்டம் காண்கிறது. ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரம் தொடர்பான முரண்பாடுகளும், குழப்பங்களும் நிறைந்த போக்குத்தான் தென்படுகின்றது. இந்த நேரத்தில் முஸ்லிம்களும் பல்வேறு குழுக்களாகவும், பல்வேறு அணிகளாகவும் பல்வேறான அரசியல் செயற்பாட்டுத் தளத்திலுமாக பிரிந்திருக்கிறார்கள். இவ்வாறான நிலையில் தேர்தல் ஒன்று நடந்தால் முழு இலங்கையிலும் முஸ்லிம்களின் பாராளுமன்ற பிரதிநிதித்துவத்திற்கு பெரும் ஆபத்தொன்று இருக்கின்றது. இது பற்றி நீங்கள் என்ன நினைக்கின்றீர்கள்?*

ஜனாதிபதி பாராளுமன்றத்தைக் கலைத்து தேர்தலை நடாத்தலாம் என்று ஒரு கருத்திருக்கிறது. என்னைப் பொறுத்தவரையிலும் ஜனாதிபதி பாராளுமன்றத்தை மிகவிரைவில் கலைக்கக் கூடும். இந்த வருட முடிவு வரை இந்த பாராளுமன்றம் போகுமா என்பது சந்தேகமே. அவ்வாறு கலைக்கப்பட்டு தேர்தல் ஒன்று நடத்தப்படுமாயின், அது முஸ்லிம்களின் பாராளுமன்ற பிரதிநிதித்துவத்தைக் குறிப்பாக வடக்கு கிழக்கில் மிகவெகுவாகப் பாதிக்கும். நாம் இப்போது பெற்றுள்ள 17 ஆசனங்களும் 6, 7யைக் கூடத் தாண்ட முடியாது போகலாம். எங்களுடைய பத்து ஆசனங்களாவது விடுதலைப் புலிகள் தமிழ் கூட்டமைப்புக்குப் போகலாம். இந்நிலை நம்மை மேலும் பலவீனப்படுத்தும். இது இரண்டு வகையான பலவீனப்படுத்தல்களை ஏற்படுத்தும். அதில் ஒன்று, வடக்கு, கிழக்கிலுள்ள நமது குரல், ஐந்தாறு பேர் இருக்கும் போது, நாலைந்து கட்சிகளாக இருந்தால் அது குரலாகவே இருக்காது. மற்றயது, முஸ்லிம்களுக்கு இப்போது விரோதமாக இருக்கும், முஸ்லிம்களுடைய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக இருக்கும் விடுதலைப் புலிகள் 25, 26 ஆசனங்களைப் பெற்று பலப்படுத்தப்படுவார்கள். அவ்வாறான சூழ்நிலையில் அவர்களை யாரும் ஆட்சேபிக்க முடியாத நிலை ஏற்படும். சில வேளை ஐக்கிய தேசியக் கட்சி அவர்களின் கூட்டோடு மீண்டும் ஆட்சியமைத்தால், நூற்றுக்கு நூறு வீதம் விடுதலைப் புலிகளின் கருத்துக்களோடு ஒன்றியதாகத்தான் அந்த அரசாங்கம் போய்க் கொண்டிருக்கும்.

நான் பிரதியமைச்சராக இருந்த போது, அக்கரைப்பற்றில் திறந்த கரையோர மாவட்ட தபாலகத்தை இப்போது ஓரிரு மாதங்களுக்கு முன்னர் அம்பாரைக்கு மாற்றி விட்டனர். பேரியல் அஷ்ரஃப் அமைச்சராக இருந்த போது கல்முனையில் திறக்கப்பட்ட தேசிய வீடமைப்பு அதிகார சபைக்கான கல்முனை கரையோர மாவட்ட காரியாலயத்தையும் மூடி உபகரணங்களை அம்பாரைக்குக் கொண்டு சென்று விட்டார்கள். இதுதான் முஸ்லிம் காங்கிரஸின் அரசியலில் உள்ள பலம்.

புனர்வாழ்வுக்குப் பொறுப்பான அமைச்சராக இருந்து கொண்டு, சாதாரணமாக அனர்த்தங்களின் போது கொல்லப்பட்டவர்களுக்கு வழங்கப்படுகின்ற 2000 ரூபா பணத்தைக் கூட ரவூஃப் ஹக்கீம் அவர்களால் வாழைச்சேனை சம்பவத்தின் போது பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்க முடியாமல் போய் விட்டது. நான் இதுபற்றி அவரிடம் கேட்ட பொழுது இந்த வருடம் கொடுக்கவிருப்பதாகச் சொன்னார். ஆனால், அவருடைய ஒதுக்கீட்டில் இதற்காக ஒரு சதம் கூட ஒதுக்கப்படவில்லை. இது தொடர்பாக நான் பாராளுமன்றத்தில் கேட்ட பொழுது எனக்கு உதவி வழங்கும் நாடுகள் வழங்கும் தொகையிலிருந்து கொடுப்பேன் என்று சொன்னார். உங்களுக்கு நட்ட ஈடு கொடுப்பதற்கு நிதி வழங்கப்படவில்லை. வடக்கு கிழக்கு புனரமைப்புக்காகவே நிதி வழங்கப்படுகிறது. தயவு செய்து மக்களை ஏமாற்றாதீர்கள் என்று அப்போது பாராளுமன்றத்தில் நான் சொன்னேன். மூன்று நான்கு எம்.பிக்களை வைத்துக் கொண்டு எழுநூறு, எண்ணூறு மில்லியன் ரூபா பணத்தை ஆறுமுகன் தொண்டமான் போன்றோரால் பெறமுடியும் என்றால், 12 எம்.பிக்களை வைத்துக் கொண்டு நீங்கள் பாராளுமன்றத்தில் வெட்கமில்லாமல் இருக்கின்றீர்கள். இராஜினாமாச் செய்து விட்டு வெளியே போங்கள் என்று நான் சொன்னேன். இதுதான் அவர்களுக்கு இருந்த, இருக்கும் செல்வாக்கு.

*குறிப்பாக நீங்கள் மட்டக்களப்பு மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்றவர் என்ற வகையில் மட்டக்களப்பு மாவட்ட முஸ்லிம்களுடைய இன்றைய அரசியல் நிலைமைகளை மதிப்பிடும் பொழுது பல்வேறு கட்சிகளாக முஸ்லிம்கள் பிளவுபட்டால், மட்டக்களப்பு மாவட்டத்தின் முஸ்லிம்களுடைய பாராளுமன்ற பிரதிநிதித்துவம் இழக்கக் கூடிய வாய்ப்பிருக்கிறது. இதைப்பற்றி என்ன கூறுகிறீர்கள்?*

மட்டக்களப்பு மாவட்டத்தைப் பொறுத்தவரை முஸ்லிம்கள் இரண்டு மூன்று குழுக்களாகப் பிரிந்து விட்டால் தேர்தலின் போது ஆசனத்தை இழக்க வேண்டி ஏற்படும். குறைந்தது அடுத்த முறைத் தேர்தலிலே நாங்கள் ஒரு ஆசனத்தைப் பெறவேண்டுமாயிருந்தால் ஒரு கட்சி 45,000 மேற்பட்ட வாக்குகளை எடுக்க வேண்டும். இவ்வாறு எடுக்க வேண்டுமாயின் மட்டக்களப்பு மாவட்டத்தின் மூன்று ஊர்களும் கணிசமான அளவு ஒற்றுமைப்பட வேண்டும். இன்ஷா அல்லாஹ் தேர்தல் என்று வரும் பொழுது இந்த மூன்று ஊர்களும் ஒற்றுமைப்படுமென்றே நான் நம்புகிறேன். அதற்கான சூழ்நிலைகள் இப்போது ஏற்பட்டு வருகின்றன.

முஸ்லிம் குரலில்
செய்தியாளராக விரும்புகிறீர்களா?
முஸ்லிம் குரலின் வளர்ச்சியில்
பங்குதாரராக பங்களிக்கத் தயாரா?
நீங்கள் செய்ய வேண்டியது.....
உங்கள் எழுத்தாற்றலை நிரூபிக்கும்
வகையில் உங்கள் பிரதேச செய்திகளை,
அரசியல் அவதானங்களை, தெளிவுடன்
எமக்கு அனுப்பி வையுங்கள்!
உங்கள் முழு விபரத்துடன்!
ஆதாரத்துடன்
செய்திகள் எழுதப்படுவதோடு
நீதிமன்ற, பொலிஸ்,
அடக்குமுறை செயற்பாடுகளை
எதிர் கொள்வதற்கும் நெஞ்சுரத்துடன்
இருப்பதே சிறந்த தகுதி!

நமது பத்திரிகையின் பங்குதாரராக
விரும்புவர்கள் நமது பத்திரிகையின்
பிரதிகளை மக்கள் மத்தியில் விநியோகம்
செய்து நமது மக்களுக்கும்
பத்திரிகைக்குமான
உறவினை பலப்படுத்த வேண்டும்.
சமூகப் பங்களிப்புக்கு தயாரானவர்கள்
முன்வரலாம் முன் மாதிரியாகவும்
செயற்படலாம்!
அதிக ஆவலுடன் உள்ளோம்!

**முஸ்லிம் குரலின் வளர்ச்சிக்கு பக்க பலமாக இருங்கள்**

நமக்கான பத்திரிகைகளின் அவசியம் குறித்து நீங்கள் அறிவீர்கள். மக்களாகிய உங்களின் ஆதரவுடனேயே நமது பத்திரிகையை தொடர்ச்சியாக வெளிக் கொணர முடியும்! சந்தாதாரர்களாக சேருங்கள்! சகோதர சகோதரிகளுக்கும் அறிமுகப்படுத்துங்கள்! பத்திரிகையை வாங்கி விநியோகியுங்கள்!

### சந்தா விபரம்!

3 மாதங்கள் -
(12 இதழ்கள்) - 120/-

6 மாதங்கள் -
(24 இதழ்கள்) - 240/-

1 வருடம் -
(48 இதழ்கள்) - 480/-

(தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும்)

காசோலையாகவோ, காசுக் கட்டளையாகவோ எமக்கு அனுப்பி வைக்கலாம். பத்திரிகையை விநியோகிக்கும் எமது ஊர் பிரதிநிதிகளிடமும் நேரடியாக கையளிக்கலாம். காசுக்கட்டளையாக அனுப்புவதாக இருந்தால் L.Rajeeb, Slave Island Post office எனக் குறிப்பிடவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்க சொர்க்கத்தில் ஆசிய அடிமைகள்

வியர்வை நாற்றம்; அழுகிய குப்பைகளிலிருந்து கிளம்பும் நெடி; கழிப்பறையில் சிறுநீர் கழிக்கும் ஒலி; அருகிலேயே சமையல் வாசம்; தலைமேலே குறட்டைச் சத்தம்; இன்னொரு மூலையில் தொலைக்காட்சியின் இரைச்சல்; எங்கும் கவிந்திருக்கும் சிகரெட் புகை; சாராய நெடி. பத்தடிக்குப் பத்தடி அளவுள்ள இந்த அறையினுள் 8 பேர்; அறைக்கு ஜன்னலில்லை; சுவரின் உச்சியில் அரை அடி விட்டத்தில் ஒரு ஓட்டை - காற்று வெளியே போகவும் உள்ளே வரவும் அவ்வளவுதான் இடம்.

இது சிறைக் கொட்டடியில்லை; பம்பாய், கல்கத்தாவின் குடிசைப் பகுதியில்லை - நியூயோர்க், மண்ணுலக சொர்க்கமான அமெரிக்காவின் மாபெரும் நகரம். 100 மாடி 150 மாடிக் கட்டிடங்கள் நிரம்பிய அந்த கான்கிரீட் காட்டின் ஏதோ ஒரு கட்டிடத்தில் இது ஒரு பொந்து.

இந்தப் பொந்தில் வசிப்பவர்கள் காலை 5 மணிக்கு எழுந்திருக்க வேண்டும். காலைக்கடன்களை முடித்துக் கொண்டு 7 மணிக்கு வேலை செய்யத் துவங்க வேண்டும். வேலை செய்யும் தொழிற்கூடமோ பக்கத்து அறைதான். 15 அடிக்கு 18 அடி அளவுள்ள அறைக்கு 15 தையல் எந்திரங்கள். ஒரு நாளைக்கு 16 மணி நேரம் வேலை. வாரத்தில் ஏழு நாட்களும் வேலை.

இந்தச் சித்திரவதைக் கூடங்களுக்கு அமெரிக்கப் பத்திரிகைகள் சூட்டியிருக்கும் பெயர் "வியர்வைக் கடைகள், நியூயோர்க், லாஸ் எஞ்செல்ஸ் போன்ற அமெரிக்காவின் பெருநகரங்கள் அனைத்திலும் நிரம்பியுள்ள இத்தகைய "வியர்வைக்கடை"களில் பணியாற்றும் ஆண்கள், பெண்கள், குழந்தைகள் ஆகிய அனைவரும் தாய்லாந்து, சீனா போன்ற ஆசிய நாடுகளைச் சேர்ந்தவர்கள் - கொத்தடிமைகள். துபாய்க்கும், சிங்கப்பூருக்கும் வேலை தேடிச் சென்று ஏமாந்து கொத்தடிமைகளாகும் நம்மூர் மக்களின் கதையைக் காட்டிலும் கொடியது இவர்களது கதை.

"லாஸ் எஞ்செல்ஸ் நகரிலுள்ள அதி நவீன தையற்கூடம் ஒன்றின் புகைப் படத்தை எங்களுக்குக் காட்டினார்கள். பார்ப்பதற்கே மிகவும் கவர்ச்சிகரமாய் இருந்தது. காலை 8 மணி முதல் மாலை 6 மணி வரை வேலை; வாரத்தில் 5 நாட்கள் வேலை. மாதம் 2400 டொலர் சம்பளம். விடுமுறை நாட்களில் டிஸ்னிலாந்து போன்ற இடங்களுக்குக் கூட்டிச் செல்வோம் என்று ஆசை காட்டினார்கள்; நம்பி வந்தோம்."

"லாஸ் எஞ்செல்ஸ் விமான நிலையத்திலிருந்து நேரே இந்தப் பொந்துக்குக் கொண்டு வந்தார்கள். எங்களிடமிருந்து பாஸ்போர்ட், பணம் அனைத்தையும் பிடுங்கிக் கொண்டார்கள். அதிகம் பேசாதே - கேள்வி கேட்காதே - யாரோடும் நட்பு சேராதே - என்ற எச்சரிக்கையுடன் இங்கே அடைக்கப்பட்டோம்"

"தாய்லாந்தில் 8 மணி நேரம் உழைத்துச சம்பாதித்ததை இங்கே 16 மணிநேரம் உழைத்துச் சம்பாதிக்கிறோம்."

இது "லேபோர்தாங்" என்ற தாய்லாந்துப் பெண்ணின் கதறல்.

யூ லி என்ற சீனப் பெண்ணின் கதை இன்னும் கொடூரமானது.

"அமெரிக்காவில் வேலை வாங்கித் தருகிறோம். அங்கே சம்பாதித்து எங்கள் கடனைக் கொடுத்தால் போதும்" என்று சொன்ன ஏஜென்டுகளின் பேச்சை நம்பி, தன் கணவனை அமெரிக்காவுக்கு அனுப்பி வைத்தாள் யூ லி.

1991 - இல் அமெரிக்கா போன கணவனிடமிருந்து பணம் வரவில்லை; கடிதமும் இல்லை; ஆளையும் காணவில்லை. அனுப்பி வைத்த ஏஜெண்டுகளைக் கேட்டால் "இன்னும் கடன் அடையவில்லை" என்றார்கள். தன்னந்தனியாக 3 குழந்தைகளை வைத்துக் கொண்டு 5 ஆண்டுகளாக வாழ்வதற்குப் போராடி வருகிறாள்.

**கண்ணீர்க் கதைகளுக்குப் பஞ்சமில்லை.**

இந்தத் தொழிலாளர்களெல்லாம் ஆசிய நாடுகளிலிருந்து மா.ஃபியாக் கும்பல்களால் கொண்டுவரப்பட்டவர்கள் முறையான கடவுச்சீட்டு (பாஸ்போர்ட்) இருந்தால் அதை இத்தொழிலாளர்களிடமிருந்து பறித்து வைத்துக் கொள்கின்றன இந்த மா.ஃபியா கும்பல்கள். ஆனால், பெரும்பாலான தொழிலாளர்கள் கள்ளத்



தோணியில் கொண்டுவரப்பட்டவர்கள்.

ஒவ்வொர் ஆண்டும் அமெரிக்காவிற்கும் சட்டவிரோதமாகக் குடியேறும் சீனர்களின் எண்ணிக்கை ஒரு லட்சம் என்கிறது அமெரிக்க உளவு நிறுவனம். தாய்லாந்திலிருந்தோ 24,000 பேர், சட்டபூர்வமாக தாய்லாந்திலிருந்து அமெரிக்காவில் குடியேறுவோர் ஆண்டுக்கு ஒரு லட்சம் பேர்.

இந்தச் சட்டவிரோதக் குடியேற்றங்களை அமெரிக்க அரசு ஏன் தடுத்து நிறுத்தவில்லை என்று கேட்டால், அந்தக் கேள்விக்கான விடைகளில் ஒன்றுதான் இந்த வியர்வைக் கடைகள்.

பலமாடிக் கட்டிடங்களின் இடுக்குகளிலும், காற்றுப் புகாத பரண்களிலும், நிலவறைகளிலும் இயங்கும் இத்தகைய வியர்வைக் கடைகள், நியூயோர்க் நகரில் மட்டும் 400.

"வேலை நிலைமைகளைப் பற்றியோ, கூலியைப் பற்றியோ யாராவது புகார் செய்தால் மறுகணமே அவர்கள் அமெரிக்காவை விட்டுத் துரத்தப்படுவார்கள். எனவே யாரும் வாய்திறக்கவே அஞ்சுகிறார்கள்" என்கிறார் சீனத் தொழிலாளர்கள் சங்கத்தின் தலைவர் விங்லாம்.

அமெரிக்காவை விட்டு ஓடத் தயாராக இருப்பவர்களையும் அப்படி ஓடிவிடுவதற்கு அனுமதிப்பதில்லை மாபியா கும்பல்கள். "எங்களுக்குச் சேரவேண்டிய தொகையை கொள்ளையடித்தாவது கொடுத்துவிட்டுப் போ" என்று மிரட்டுகிறார்கள். கிரிமினல் நடவடிக்கைகளில் ஈடுபடுத்துகிறார்கள். கொத்தடிமையாக நீடிப்பதா, கிரிமினலாக மாறுவதா என்ற கேள்வி வந்தால் முதலாவதைத்தான் தெரிவு செய்கிறார்கள் அந்த ஏழைத் தொழிலாளர்கள்.

நியூயோர்க் நகரின் தொழிலாளர் சட்டப்படி ஒரு மணி நேரத்திற்கான குறைந்தபட்ச ஊதியம் 5.15 டொலர். இந்தக் கொத்தடிமைகளுக்குக் கொடுக்கப்படுவதோ ஒரு டொலர். அந்தச் சம்பளமும் ஒழுங்காகக் கொடுக்கப்படுவதில்லை. இரண்டு மாதச் சம்பளத்தைப் பிடித்து வைத்துக் கொள்வதென்பது மிகவும் சகஜம். அமெரிக்காவின் காவல்துறை, குடியேற்றத்துறை, தொழிலாளர்துறை ஆகிய மூன்றுமே இந்த இரகசிய உலகத்தைக் கண்டு கொள்வதில்லை.

+++

மே தினப் போராட்டத்தின் மூலம் உலகத்தொழிலாளர்களுக்கு "8 மணிநேர வேலை" எனும் அடிப்படை உரிமையைப் பெற்றுத்தந்த நாட்டில், மே தினப் போராட்டத்திற்கு முன்னால், சென்ற நூற்றாண்டில் நிலவியதைக் காட்டிலும் கொடூரமான சுரண்டலும் ஒடுக்குமுறையும் தொடர்கிறதே இதற்குக் காரணம் என்ன? வியர்வைக் கடைகள் குறித்து ஒரு கட்டுரை வெளியிட்டிருக்கும் அமெரிக்காவின் ரீட்டஸ் டைஜஸ்ட் பத்திரிகை இதற்குப் பதில் சொல்கிறார்கள்.

"அவர்கள் தங்கள் சொந்த நாட்டினராலேயே இரக்கமில்லாமல் சுரண்டப்படுகிறார்கள்."

உண்மைதான், தமது சொந்த நாட்டைச் சேர்ந்த மா.ஃபியாக் கும்பல்களால் தான் அவர்கள் கடத்தப்படுகிறார்கள்; அவர்களால்தான் துன்புறுத்தப்படுகிறார்கள்.

ஆனால், யாருக்காக? அந்த வியர்வைக் கடைகளின் பொந்துகளிலிருந்து அவர்கள் உற்பத்தி செய்யும் காற்றோட்டமான சட்டைகளை அணிபவர்கள் யார்? அவற்றை விற்று ஆதாயம் அடைபவர்கள் யார்?

அமெரிக்காவின் மிகப் பிரபலமான ரெடிமேட் ஆடை விற்பனை நிறுவனங்களும், ஏற்றுமதி நிறுவனங்களும்தான் இந்த வியர்வைக் கடைகளின் சரக்கைக் கொள்முதல் செய்பவர்கள்.

இந்தியாவிலிருந்தும் இலங்கையிலிருந்தும் பிற ஏழை நாடுகளிலிருந்தும் ரெடிமேட் ஆடைகளை இறக்குமதி செய்யும் அமெரிக்க நிறுவனங்களின் பிரதிநிதிகள், நேடியாக வந்திறங்கி, தங்களது ஆடைகள் எங்கே தைக்கப்படுகின்றன, எப்படித் தைக்கப்படுகின்றன என்று சோதனை செய்கிறார்களே - துணை ஒப்பந்தத்தில் வேலை செய்யும் சிறிய முதலாளிகளின் தையலகங்களைக் கூட அவர்கள் விட்டுவைப்பதில்லையே - அத்தகைய அமெரிக்க முதலாளிகள் தங்கள் நாட்டின் வியர்வைக் கடைகளை மட்டும் பார்வையிடாதது ஏன்?

"கலி.ஃபோர்னியாவில் இத்தகைய வியர்வைக் கடையொன்றை தொழிலாளர் துறை அதிகாரிகள் சோதனையிட்ட போது அங்கே உற்பத்தியாகும் ஆடைகளெல்லாம் அமெரிக்காவின் மிகப் பெரும் ஆடை விற்பனையகங்களுக்குச் சொந்தமானவை எனத் தெரியவந்தது" என்கிறது ரீடர்ஸ் டைஜஸ்ட்.

நியூயோர்க்கின் மிகப் பெரும் ஆடை நிறுவனங்களான வால் - மார்ட், கே. மார்ட் ஆகியோரது விற்பனையில் பாதி நியூயோர்க் கொத்தடிமைகளின் தயாரிப்புதான் என்கிறது டைம் வார ஏடு. வால் மார்ட் கே. மார்க் ஆடைகள் உலக நாடுகள் பலவற்றுக்கும் ஏற்றுமதியும் செய்யப்படுகின்றன.

சதாம் ஹுசேனின் கழிப்பறையில் இரசாயன ஆயுதத்தின் நெடி வீசுவதை வானத்திலிருந்தே மோப்பம் பிடிக்கத் தெரிந்த ஜோர்ஜ்புஷ்ஷின் நாசியில் வேல் மார்ட் சட்டைகளில் வீசும் வியர்வையின் நெடி ஏறாதது ஏன்?

இது ஒரு வர்த்தகத் தந்திரம். மலிவான உழைப்புச் சந்தை என்ற ஒரே காரணத்தினால்தான் இந்தியா போன்ற ஏழை நாடுகளிலிருந்து ரெடிமேட் ஆடைகளை இறக்குமதி செய்கிறார்கள் அமெரிக்க முதலாளிகள். இந்த ரெடிமேட் ஆடை ஏற்றுமதித் தொழிலில் இந்தியா உள்ளிட்ட பல ஆசிய நாடுகளில் உள்ள பல லட்சம் தொழிலாளர்களின் தலைவிதி பிணைக்கப்பட்டு விட்டது.

மலிவு விலையில் உழைப்பை இறக்குமதி செய்த அமெரிக்கா, இப்போது உழைப்பாளிகளையே மலிவு விலையில் இறக்குமதி செய்கிறது.

அன்று ஆப்பிரிக்கக் கறுப்பின மக்களை விலங்குகளைப் போல வலைவீசிப் பிடித்து, தாயை கரும்புத் தோட்டத்திலும், பிள்ளையை நிலக்கரிச் சுரங்கத்திலும் பிரித்துப் போட்டு, அவர்களின் ரத்தத்தை உறிஞ்சி அமெரிக்க சொர்க்க பூமியை உருவாக்கிக் கொண்டார்கள்.

இன்று அந்தச் சொர்க்கத்தின் நியான் விளக்குகளில் சொக்கி விழும் விட்டில் பூச்சிகளான நமது ஏழை மக்களை கள்ளத் தோணியின் மூலம் கவர்ந்திழுக்கிறார்கள்.

இது ஒரு ராஜதந்திரம். தமக்கு ஆடை ஏற்றுமதி செய்யும் இந்தியா, சீனா, பாகிஸ்தான், இலங்கை, தாய்லாந்து போன்ற நாடுகள் புஷ்ஷின் அரசியல் ஆணைக்குப் பணிய மறுத்தால், ஆடை இறக்குமதி நிறுத்தப்படும். ஒரே நொடியில் இந்நாடுகளின் இலட்சக் கணக்கான தொழிலாளர்கள் தெருவில் வீசப்படுவார்கள்.

ஆசியாவின் ஆடை இறக்குமதியாகாத அத்தகைய தருணங்களில் ஆசியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட இந்தக் கொத்தடிமைகள் அமெரிக்காவின் நிர்வாணத்தை மறைத்து நாகரிகப்படுத்துவார்கள். இதற்கும் ஆசியத் தொழிலாளிகள் தான் புஷ்ஷுக்குத் தேவை! இது ஒரு வர்க்கத் துவேசம்!

மருத்துவர்களையும், பொறியியலாளர்களையும் கணினி வல்லுநர்களையும் குடியுரிமை தந்து இறக்குமதி செய்து கொள்ளும் அமெரிக்கா இந்த உழைப்பாளிகளுக்கும் குடியுரிமை தரலாமே! சட்டப்படி குடியுரிமை தந்தால், சட்டப்படி ஊதியம் கேட்பார்கள். அவர்களைக் கள்ளத் தோணிகளாகவே வைத்திருந்தால்தான், தேவை முடிந்தபின், அவர்களது இளமை முடிந்தபின், அவர்களைக் கந்தல் துணியைப் போலக் கடலில் வீச முடியும். வீசிவிட்டுக் கள்ளத் தோணியைத் தடுக்கத் தவறியதாக அந்த நாட்டைக் குற்றம் சாட்டி மிரட்டவும் முடியும்.

இதுதான் சுதந்திர வர்த்தகம்! தேசங் கடந்து அமெரிக்கா, ஐரோப்பாவிலிருந்து வரும் மூலதனத்திற்கு இங்கே ரத்தினக் கம்பளம்; மாலை மரியாதைகள். தேசங்கடந்து செல்லும் நம் உழைப்புக்கு அங்கே கொத்தடிமைத்தனம்! குழந்தைத் தொழிலாளர் ஒழிப்பை எதிர்க்கிறது பென்டகன். ஏனென்றால் அமெரிக்க இராணுவத்தின் சீருடைகள் ஆசியக் குழந்தைகளால் தைக்கப்படுகின்றன. இந்த அடக்குமுறைகாரர்களிடம் எச்சில் பிரசாதம் வாங்கும் தன்னார்வத்தொண்டு நிறுவனங்கள் (NGO)

*அப்படியா*
*அப்படி ஓர் இடம் இருக்கிறதா?*
*ஒன்றுமே தெரியாதது போல*
*பாசாங்கு செய்கிறார்கள்*
*ஒப்புக் கொள்ள மறுக்கிறார்கள்*
*அப்படியொரு ரகசிய உலகம்*
*இருக்கிறது என்பதை.*
*சகமனிதர்கள் உமிழும் கழிவிலும்*
*குப்பை கூளத்திலும்தான் - அங்கே*
*சிலர் வாழ்கிறார்கள் என்பதை*
*ஒப்புக் கொள்ள மறுக்கிறார்கள்.*

-என்று அமெரிக்காவில் கறுப்பின மக்கள் வாழும் சேரிகளைப் பற்றி மனம் குமுறிப் பாடினார் கறுப்பினப் பாடகி டிரோஸி சாப்மன்.

விண்ணை முட்டும் 150 மாடிக் கட்டிடத்தின் மொட்டை மாடியில் நின்று கொண்டு, கியூபா முதல் சீனம் வரை உலக மக்கள் அனைவருக்கும் ஜனநாயகமும் மனித உரிமையும் வழங்கப்பட வேண்டுமென அன்று முழங்கினார் கிளின்டன்.

அந்தக் கட்டிடத்தின் நிலவறையில் புதைந்திருக்கும் வியர்வைக் கடையிலிருந்து ஒரு குரல் கேட்கிறது. "நாங்கள் நாய்களைப் போலத் தின்கிறோம்; எலிகளைப் போல வாழ்கிறோம்" என்கிறார் 66 வயதான ஒரு தொழிலாளி.

வால் - மார்ட் சட்டை அணிந்து, பிஸ்ஸா ஹட் தின்று, கொக்கோகோலா குடித்து ஏப்பம் விட்டுக் கொண்டிருந்த நமது துரைகளும் "மனித உரிமை வாழ்க" என்று கைதட்டுகின்றன.




## கப்பலும் நீர்ப்பயணமும்

கடலைக் கடக்க பயன்படும் பலவகைச் சாதனங்களில் பெரியது கப்பல். வணிகக் கப்பல், பிரயாணக் கப்பல், எண்ணெய்க் கப்பல், யுத்தக் கப்பல், நீர்மூழ்கிக் கப்பல் என கப்பலில் பல வகையுண்டு.

ஆதிகாலத்து மக்கள் அவரவர் வாழ்ந்த இடங்களில் குளம், குட்டை, ஏரி, வாய்க்கால், ஆறு முதலிய நீரோட்டங்களில் இலைகள், பூக்கள், மரக்கட்டைகள், மிதந்து செல்வதைக் கண்டனர். நீருக்கு இயல்பாகவே அமைந்துள்ள மிதக்க வைக்கும் தன்மையை உணர்ந்தனர். அம்மிதப்புப் பொருள்கள் மீது வண்டு, தவளை, நீர்வாழ் பறவைகள், ஆகியன பயணம் செய்வது கண்டு - நிலத்தில் வண்டிகளில் செல்வது போல் நீரிலும் செல்லலாம் எனக் கண்டு கொண்டனர்.

முதன் முதலாக மிதவை, தெப்பம் என்பவற்றை அமைத்து மனிதன் நீரில் பயணம் செய்தான். பின்பு மரங்களை குடைந்து ஓடங்கள் செய்தான். இவ்வகையான இயற்கை காட்சி அறிவே முற்கால மக்களுக்கு நீரில் பிரயாணம் செய்யும் அறிவு உந்துதலை வழங்கியது என வரலாற்று ஆய்வு அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர்.

நாளடைவில் அனுபவத்தின் பேரில் மனிதன் துடுப்பினால் செலுத்தும் படகை அமைத்தான். அதற்குப் பின் பாய் மரக் கப்பல் தோன்றிற்று. எகிப்தியர்கள் கி.மு. 3000 க்கு முன்பே கப்பல் கட்ட தொடங்கிவிட்டனர். எகிப்திய ஓவியங்களிலிருந்தும் சிற்பங்களிலிருந்தும் அவர்களின் கப்பல்களின் அமைப்பை நாம் அறிந்து கொள்ளலாம். பெருமளவிலான பொருட்கள், கால் நடைகள் கொண்டு செல்லத்தக்கதாக இக்கப்பல்கள் இருந்துள்ளன. கப்பல் கட்டும் கலையை அடுத்து வளரச் செய்தவர்கள் பீனிஷியர்களும், கிரேக்கர்களுமாகும்.

## கதைகள் எப்படித் தோன்றின?

அன்புள்ள மாணவ, மாணவிகளே நாம் கதை கேட்பதில் அதிக ஆர்வம் உள்ளவர்கள். இந்தக் கதைகள் எப்படித் தோன்றின என்று அறிய விரும்புகிறீர்களா?

கதைகள் முதன் முதலில் எப்பொழுது தோன்றின என்பதை அறிவது கடிணமாகும். ஆனால் ஆதி மனிதன் காட்டில் வேட்டையாடச் சென்று திரும்பியவுடன் தன் அனுபவங்களை மற்றவர்களுக்கு சொன்னதிலேயே கதை கூறுவது தொடங்கிவிட்டது என்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகிறார்கள். உலகம் முழுவதும் கதைகள் பரவி இருப்பதையும் அவற்றை மக்கள் மிகவும் விரும்புகிறார்கள் என்பதையும் நாமறிவோம்!

கதைகளில் பல வகையுண்டு. தேவதைக் கதை, விலங்குக் கதை, நாடோடிக் கதை, புராணக்கதை, வரலாற்றுக்கதை, நீதிக்கதை, காவியங்களின் கதை என்று அதனை பலவாறாகப் பிரிக்கிறார்கள்.

பழங்கதைக்கும், இக்காலத்தில் வளர்ந்துள்ள நாவல், சிறு கதைகளுக்கும் பல்வேறு வேறுபாடுகள் உண்டு. பழங்கதைகளிலிருந்து வளர்ச்சியடைந்தே நாவல், சிறுகதைகள் தோன்றின.

## படிக்கும் போது ஒளி எந்தத் திசையிலிருந்து வரவேண்டும்?

நாம் படிக்கும் போது படிப்பதற்குத் தேவையான ஒளி நம்முடைய பின்புறத்திலிருந்தே வரவேண்டும். அப்படி இல்லாமல், முன்புறத்திலிருந்து ஒளி வரக்கூடாது. அப்படி முன் புறமிருந்து ஒளி வருமாயின் நாம் படிக்கும் புத்தகத்தின் மீது ஒளி பட்டு அதன் எதிரொளி நேரடியாக நம்முடைய கண்களை அடையும்.

இந்த அதிக ஒளியினால் கண் சுருங்கிக் கொள்ளும். இதனால் நமக்கு படிக்கும் எழுத்து சரியாகத் தெரிவதில்லை. மேலும் அதிக ஒளியை மிக நுணுக்கமாக பார்க்க வேண்டியுள்ளதால் கண்களும் பாதிக்கப்படும்.

ஆனால், ஒளிர்க்கதிர் பின்புறமிருந்து வருமாயின் புத்தகத்தில் பட்ட ஒளி மிகக் குறைந்த அளவே நம் கண்ணை வந்து அடையும்.

எனவே, மாணவர்களாகிய நீங்கள் படிக்கும் பொழுது எப்பொழுதும் ஒளிக்கதிர் பின்னால் இருந்து வரும்படி பார்த்துக் கொள்ள வேண்டும். இப்படிச் செய்வதன் மூலம் நீண்ட நேரம் படிப்பதற்கு வசதியாக இருக்கும். மேலும் கண்ணிற்கு அதிக பாதிப்பும் இல்லை.

## வர்ணம் தீட்டும் போட்டி - 5



மாணவ, மாணவிகளே! மேலே உள்ள படத்துக்கு வர்ணம் தீட்டி எங்களுக்கு அனுப்பி வையுங்கள். 12 வயதுக்கு கீழ்ப்பட்டவர்களே இந்தப் போட்டியில் கலந்து கொள்ள முடியும். கீழ் உள்ள விண்ணப்பத்தை பூர்த்தி செய்து 28.03.2003 ஆம் திகதிக்கு முன் எமக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். விண்ணப்பத்தில் பாடசாலை அதிபர் அல்லது ஆசிரியரின் உறுதியுடன் பாடசாலை இலச்சினையும் பொறிக்கப்படல் வேண்டும். வர்ணம் தீட்டியவருக்கு சிறுவர் நூல்கள் பரிசாக அனுப்பி வைக்கப்படும்.

பெயர்: ------------------------------

வயது: ------------------------------

வகுப்பு: ------------------------------

பாடசாலை முகவரி: ------------------------------

------------------------------

அதிபர் / ஆசிரியர் கையொப்பம்:

------------------------------

பாடசாலை முத்திரை:

**நமது மாணவர் குரல் போட்டியில் பங்கேற்றவர்களுக்கு சிறுவர் நூல்கள் பரிசாக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.**

## பரிசு பெற்றவர்கள் விபரம்

1. எம்.எம்.அஹமத் .ஃபஹீம்,
   தரம் 1 A
   க/மு அல் மிஸ்பார் வித்தியாலயம்,
   கல்முனை.
2. ஏ.எச்.ஏ.ஷபீர்,
   தரம் 4
   அக்/அரசினர் முஸ்லிம் ஆண்கள் வித்தியாலயம்,
   அக்கரைப்பற்று.
3. ஏ.எஸ்.பாதிமா ரஸ்மியா,
   தரம் 5 D
   மதீனா தேசிய கல்லூரி,
   ஆரம்பப் பிரிவு, மடவளை பஸார்.
4. ஜே.அஹமட் சம்ரி,
   தரம் 2
   அக்/முஸ்லிம் மத்திய கல்லூரி,
   அக்கரைப்பற்று.

## நீ தெரியும் துப்பனி

என்,
ஒவ்வொரு துப்பனிச் சொட்டினிலும்
நீ.
அழுது வடிப்பது தெரிகிறது.

ஏறு வெயில்
எரிக்கும் வேளை போல்
எல்லா நாளும் இப்படித்தான் நமக்கு!

அள்ளி ஊத்தி
கண்ணீரை அனைப்பதற்கு
என்னிடம் ஒன்றுமில்லையே!

என்ன கேட்டாய்?
ஒரு துளி கண்ணீரின் பெறுமதி
உனக்குத் தெரியுமா?

மண் போராட்டம்,
நச்சு குப்பி நக்கல்,
இவையெல்லாம்
நீ கற்கவில்லையே!

முகம் கழுவாத
தார் ரோட்டு பைத்தியம் போல்
நீயும்!
நகம் வெட்டி,
கண் பூளை எடுத்து
குளிப்பாட்டி எழும்பு!

சூரியன்,
சங்கதி எல்லாம் சொல்லும்!

முகமட் அபார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொழும்பு முஸ்லிம்கள் வாழிடம், பொருளாதாரம், சுகாதாரம் ஒரு நிலவர அறிக்கை!

கொழும்பு முஸ்லிம் சமூகத்தின் வாழிடம், வீட்டுப்பிரச்சினை ஒரு முக்கிய பிரச்சினையாக உள்ளது. கொழும்பு முஸ்லிம்கள் எதிர்கொள்ளும் முக்கிய சவால் இது. பொதுவாக சொந்த வீடுகள் உள்ளவர்களின் எண்ணிக்கையை விட கூலி வீட்டில் உள்ளவர்களின் எண்ணிக்கையும், வீடற்று பிறர் வீடுகளில் தங்கி வாழ்பவர்களின் எண்ணிக்கையுமே அதிகமாக உள்ளது. இதற்கு அடிப்படைக்காரணம் இந்த சன சமூகத்தில் வசிப்போரில் பெரும்பாலானோர் வறியவர்களாகவும், வறுமைக்கோட்டுக்குக் கீழ் உள்ளவர்களாக இருப்பதும்தான்.

பொதுவாக ஒரு வீட்டுக்குரிய அடிப்படை வசதிகள் அற்ற நிலையிலையே பெரும்பாலான வீடுகளில் காணப்படுகின்றன. அதாவது சுத்தமான காற்றைப் பெறும் வழிகள் மிகக்குறைவாகவே காணப்படுகின்றது. இறுக்கமான குடியிருப்புக்கள் இதற்கு முக்கிய காரணமாகும். ஒரே சுவரில் இரு வீடுகள் என்ற அமைப்பில் ஒவ்வொரு வீடும் மற்றைய வீட்டின் புறச்சுவரில் சொந்தத்தை சட்டரீதியாக அல்லது சட்டரீதியற்ற நிலையில் பெற்றுள்ளது. சரியான காற்றுவசதிகள் இல்லாதது போலவே பாதைகள் எல்லாம் நெரிசலாகவும் சேறும் சகதியும் நிறைந்து காணப்படுகின்றன. பிரதான வீதியில் கல்வீடுகளும் மாடி வீடுகளும் அலங்காரமாக தெரிந்தாலும் அதற்குப்பின்னால் ஏராளமான சேரிவீடுகள் மறைந்திருப்பதை கொஞ்சம் உள்ளே சென்று பார்த்தால் புரியும்.

சிறு சிறு கல்வீடுகளைப்போலவே சேரி வீடுகளும் 10x15 என்ற அளவில் காணப்படுகிறது. இத்தகைய 10x15 பரப்புள்ள வீட்டில்தான் பெற்றோர், பிள்ளைகள், சமயலறை முதல் படுக்கையறைவரை இதனையே பயன்படுத்தவேண்டியுள்ளமை கவலைக்குரிய விடயமாகும். இதுபோலவே சிறிய வீடுகளில் இரண்டு அல்லது மூன்று குடும்பங்கள் ஒன்றாக வாழ்ந்துவருவதும் இன்னொரு அம்சமாகும். 1972 லும் 1980 களிலும் அரசாங்கம் மாடி வீடுகளை அமைத்தாலும் இப்பிரதேச மக்களின் தேவையில் சிறிய பகுதியையே அவை தீர்த்துவைத்திருக்கின்றது. முஸ்லிம்கள் மத்தியில் சனத்தொகை அதிகரிப்பும், குடும்ப உறுப்பினர்கள் பெருக்கமும் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது. எனவே இதற்கு ஈடுகொடுக்கும் வகையில் அரசாங்க காணிகளில் சட்டரீதியற்ற முறையில் பலகை, தகரம் என்பவற்றைப் பயன்படுத்தி கட்டப்பட்ட வீடுகளே ஏராளமாகப் பெருகி வருகின்றது. குடிநீர் வசதி, மல சல கூட வசதி என்பன இவ்வீடுகளில் காணமுடியாத துர்பாக்கியம் உள்ளது.

### பொருளாதாரம்

வரலாற்றின் ஆரம்பகாலங்களில் கொழும்பு முஸ்லிம் பிரதேசங்களில் பல்வேறு பயிர்ச் செய்கைகள் இடம்பெற்றதாகக் கூறப்பட்டாலும் இன்று ஒரு சில கீரைத்தோட்டங்களே எமக்கு காணக்கூடியதாகவுள்ளது. பயிற்செய்கைக்கு பொருத்தமான நிலமோ, காலநிலை வசதிகளோ இல்லாத ஒரு நகரபிரதேசமாக இந்த மாளிகாவத்தை காணப்படுவதானது பெரும்பாலானோரை வியாபாரிகளாக மாற்றியுள்ளது. கொழும்புத் தலை நகரம், சந்தை என்பன அருகில் காணப்படுவதால் இந்த மக்கள் வர்த்தக நிலைக்கு ஈடுபட அதிக வாய்ப்புக்கள் இருந்திருக்கலாம் என்று தோன்றுகின்றது. இருந்தாலும் இந்த மக்களின் கலவித்தரம் பெருமளவு குறைவாக இருப்பதும் வியாபாரத்தில் இவர்கள் ஈடுபாடு அதிகமாக இருப்பதற்கு யதார்த்தமான காரணியாகும். அதுவும் சிறு சிறு வர்த்தக நடவடிக்கைகளுக்காகவும் அன்றாடக்கூலிக்காகவுமே இவர்களில் பெரும்பாலோர் உள்ளனர். சுமார் 20 வீதமானவர்களே அரசாங்கத்துறையிலும், தனியார் துறைகளிலும் தொழில் புரிகின்றனர். மற்றைய 80 வீத மானவர்கள் வியாபாரத்தை நம்பி வாழ்கின்றனர். குறிப்பாக இந்தியாவுக்கு சென்று பொருட்களை விற்பவர்கள் கணிசமாக முன்பு காணப்பட்டாலும் அரசாங்கத்தின் சில வரிக் கொள்கைகளால் அதுவும் பாதிக்கப்பட்டுள்ளது. பெரும்பாலானோர் மீன், மரக்கறி, போன்ற வியாபாரங்களிலும், கூலி வேலைகளிலுமே ஈடுபட்டுள்ளனர். இன்னும் சிலர் மத்திய கிழக்கு நாடுகளில் தொழில் புரிவதானது இந்த சமூகத்தின் வாழ்க்கைக்கு ஓரளவு பங்களிப்புச் செய்கின்றது எனலாம்.


வருமானத்தைப்பொறுத்தவரையில் சிலரைத்தவிர பெரும்பாலானோர் மாதம் 5,000 ரூபாவுக்கு குறைவான வருமானத்தையே பெறுகின்றனர். இதுபோலவே இந்த வருமானத்தில் தங்கி வாழ்வோர் எண்ணிக்கையும் கூடுதலாகவே இருப்பதால் ஒவ்வொரு மாதமும் 1000 ரூபா முதல் 3,000 வரை கடன்காரர்களாக இருப்பதும் இந்த மக்களின் இன்னொரு நிலையாக உள்ளது. அரச, மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களிலும், வெளிநாட்டுத் தொழில் புரிவோரினதும் வருமானமே உயர்வாகக் காணப்படுகின்றது.

இந்த சன சமூகத்தின் செலவுகளைப் பொறுத்தவரை பெரும்பாலானோர் தமது வருமானத்தில் உணவுக்கு பெரும்பகுதியை செலவிடுகின்றனர். மிகச்சிறிய எண்ணிக்கையினரே ஆடம்பரப்பொருட்களை வைத்திருக்கின்றனர். மத்திய கிழக்கு நாடுகளில் பணிசெய்த நிலையும் பொருட்கள் கிடைப்பதற்குமான வாய்ப்புமே இதற்குக் காரணமாகும். மேலும் தமது அடிப்படை வசதிகளைவிட பெரும்பாலானோர் தமது வீட்டுக்கு ஒரு தொலைக்காட்சியை வாங்குவதில் கவனமாக இருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

மனித வளம் அதிகமாகக் காணப்படுகின்றது. அல்லது வளமுள்ள மனிதர்கள் இருக்கின்றார்கள் ஆனால் இந்த மனித வளத்தை பயன்படுத்தத்தேவையான பௌதீக வளம் குறைவாக இருப்பதானது மிகப்பிரதானமான விடயமாகும்.

### சுற்றாடலும் சுகாதாரமும

சிறந்த தேகாரோக்கியத்திற்கு போசாக்குள்ள உணவு அவசியம். இந்த சனசமூகத்தின் வாழும் பெரும்பான்மையானோர் மிகக் குறைந்த வருமானம் பெற்றுக்கொள்ளக்கூடியவர்களாக இருப்பதால் அவர்களின் போசாக்கின் அளவும் குறைவாகும். இதனால் பெரும்பாலானோர் பகல் சாப்பாட்டுக்கு மட்டும் சோறு சாப்பிடக்கூடியவர்களாகவுமே உள்ளனர். காலையிலும் இரவிலும் விலை குறைந்ததும் போசாக்குச் சத்து குறைந்ததுமான உணவுகளையே சாப்பிடுபவர்களாகவே உள்ளனர். கணிசமான தொகையினரே பகல், இரவு ஆகிய நேரங்களில் சாப்பாடுகளுக்கு சோறும் காலையில் மட்டும் பாண் அல்லது வேறு உணவுகளையும் சாப்பிடக்கூடியவர்களாக உள்ளனர். இதுபோலவே வசதியுள்ளவர்களும் போசாக்குள்ள உணவைத்தான் சாப்பிடவேண்டும் என்பதில் அசிரத்தையாக இருக்கின்றனர்.



### தண்ணீர் பயன்பாடு

இந்த மாளிகாவத்தை சன சமூகத்தின் ஓரிரு கிணறுகளே காணப்படுகின்றது. இது தவிர ஒருசிலர் குழாய் கிணறும் தமது வீடுகளில் தோண்டி நீரைப்பெற்றுக்கொள்கின்றனர். ஆனால் பொதுவாகப் பார்க்கும் போது பெரும்பாலானோர் அரசாங்கத்தினால் நிர்மாணிக்கப்பட்டுள்ள பொதுக்குழாய் நீரை பயன்படுத்துவடன் பொது குழியலறைகளையும் பயன்படுத்துவதையும் காணக்கூடியதாக இருக்கிறது.

### மல, சல கூட வசதிகள

மல, சல கூட வசதிகளைப் பொறுத்தவரையில் பின்தங்கிய நிலையே காணப்படுகின்றது. ஒரு சிலர் தமது வீடுகளில் தனிப்பட்ட மல, சல கூடங்களை அமைத்து சுத்தமாக வைத்துக்கொண்டாலும் பெரும்பாலானோர் வறுமைகாரணமாக அரசாங்கத்தினால் நிர்மாணிக்கப்பட்டுள்ள பொது மல, சல கூடங்களையே பயன்படுத்துகின்றனர்.

இன்னும் சிலர் தமது வீடுகளில் தனிப்பட்ட மல, சல கூடங்களை கட்டுவதற்கு விரும்பினாலும் அவர்களின் வீடுகள் மிகச்சிறியவையாக காணப்படுவதும் மல, சல கூடங்களை தனிப்பட்ட முறையில் கட்டுவதற்கு பொருளாதார வசதியின்மை இருப்பதாலும் முடியாமல்போகின்றது.

பெரும்பாலான தோட்டங்களில் அரசாங் கம் பொது மல, சல கூடங்களை அமைத்துக் கொடுத்தாலும் அவை போதுமானவையல்ல. நாம் சென்ற ஒரு தோட்டத்தில் 72 வீடுகள் இருந்தது. அந்த 72 வீடுகளுக்கும் 6 மல, சல கூடங்கள் மட்டுமே கட்டப்பட்டிருந்தது. பெருந்தொகையானோர் இதனைப்பயன்படுத்துவதால் பெரும்பாலானோர் தனிப்பட்ட முறையில் இதனை சுத்தமாக வைத்திருப்பதற்கும் விரும்புவதில்லை. காரணம் பிறருக்கு உதவ வேண்டும், தமது சுற்றாடலை சுத்தமாக வைத்திக்க வேண்டும் என்ற இஸ்லாமிய போதனையை மறந்து வாழ்கின்றமையாகும். இங்குள்ள மல, சல கூடங்களை பெரும்பாலானவை வடிகால் அமைப்புகளுடன் தொடர்பானதாகவே காணப்படுகின்றது. ஒரு சில தே PIT என அழைக்கப்படும் குழி மல, சல கூடமாக காணப்படுகின்றது.

### பொது சுகாதார பழக்க வழக்கங்கள்

இந்த சமூகத்தின் பொதுச்சுகாதார பழக்கவழக்கங்களை தீர்மானிக்கும் முக்கிய காரணிகளாக கல்வி, வருமானம், ஒற்றுமை என்பன காணப்படுகின்றது. ஆனால் இந்த மூன்று அம்சங்களும் பின்தங்கிய நிலையில் இருப்பதானது பொதுச்சுகாதார பழக்கவழக்கங்களிலும் பாதிப்பு செலுத்துவதாகவே காணப்படுகின்றது. இந்த வகையில் கல்வி அறிவு, பொது அறிவு என்பன குறைவாக இருப்பதனால் சுத்தமாக இருக்கவேண்டும் என்ற உணர்வும் குறைந்தளவிலேயே உள்ளது.

மேலும் வீட்டுக்குப்பைகளை குப்பை தொட்டியில் போடுவதில் கவனயீனம் காணப்படுகின்றது. இதனால் மக்களின் கூடுதலான இடங்களில் குப்பைகள் கண்டபடி போடப்பட்டிருப்பதும் பொது சுகாரத்தைப்பாதிக்கிறது. அடுத்த வருமானம் குறைவாக இருப்பதால் தமது வருமானத்தை எப்படி உயர்த்திக்கொள்வது, அடிப்படைத்தேவைகளை எவ்வாறு அடைந்து கொள்வது என்று சிந்திக்கிறார்களேதவிர வீட்டையும் தாம் வாழும் பிரதேசத்தையும் எப்படி சுத்தமாக வைக்கவேண்டும் என்று எவரும் (பெரும்பாலானோர்) சிந்திப்பதில்லை.

பொதுசுகாதார பழக்க வழக்கங்களை நிர்ணயிக்கும் இன்னொரு காரணி இந்த சனசமூகத்தில் வாழும் மக்களிடையே காணப்படும் ஒற்றுமையாகும். இங்கு பெரும்பாலானோர் முஸ்லிம்களாக இருந்தாலும் இவர்கள் அரசியல் கட்சி ரீதியாக சன சமூக நிறுவனங்களின் அடிப்படையிலும் பிரிந்து செயற்படுவதானது பிரதேசத்தை சுத்தமாக வைப்பதற்கு கூட்டாக நடவடிக்கை எடுக்க தடையாக இருக்கின்றது. இது உண்மையில் இச்சமூகத்தின் துரதிஷ்டமான நிலையென்றே கூறவேண்டும். ஏனெனில் மாநகர சபை உறுப்பினர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் போன்றோர் இருந்தாலும் இவர்களுக்கு மக்களின் கூட்டான ஒத்துழைப்பு கிடைக்காதிருப்பதும் இந்நிலைக்கு காரணமாகும். இத்தகை நிலைமையை மாற்றி ஆரோக்கியமான சுற்றாடலை உருவாக்க வேண்டும். என்று சிலர் விழிப்பாக இருப்பதும் இதற்கான நடவடிக்கைகளை எடுப்பதும் முக்கியமான விடயமாகும்.

### எனது கருத்து

எனது முதலாவது களவேலைக்காக பத்து (10) நாட்கள் இந்த சமூகத்தின் மூலை முடுக்குகளை ஓரளவு சுற்றித்திரிந்து நான் பெற்ற தகவல்கள், அனுபவங்கள் என்பவற்றை மையமாகக்கொண்டு பின்வரும் கருத்துக்களைத் தெரிவிக்கலாம் என்று நான் நம்புகின்றேன்.

இந்த கொழும்பு ஏழை முஸ்லிம் சமூகமானது வரலாற்றில் ஆரம்பக்காலங்களில் சிறப்பான மாற்றங்களையும், சிறந்த மனிதர்களையும் உருவாக்கினாலும் 1970களின் பின்னால் இருந்து இன்றுவரை நோக்கும்போது மோசமான நிலையில், கைவிடப்பட்ட நிலையில் இருப்பதைக் காண்கின்றோம். இதற்கு அடிப்படை க்காரணம் அரசியல் என்று சொன்னால் மிகையாகாது. தமது சுயநலன்களை அடைந்து கொள்வதற்காக அரசியல்வாதிகள் இந்த சமூகத்தை முன்னேற விடாமல் தடுத்து தொடர்ந்தும் மக்களை பாமரர்களாக வைத்து தமது பதவிகளை தாக்குப் பிடிக்க நடவடிக்கை எடுத்தனரேயன்றி சமூகத்தின் மாற்றங்களுக்கு பேச்சளவிலேயே முக்கியத்துவம் கொடுத்துள்ளனர்.

இந்த சமூக வீழ்ச்சிக்கு அடுத்த காரணி கல்வித்துறையை வளர்ப்பதில் பாடசாலை எனும் சமூக நிறுவனம் தவறியமையே யாகும். இது தவிர இந்த சமூக மக்கள் அரசியல் கட்சி, சங்கம் என்று பிரிந்து பொதுவான ஐக்கியத்தை சிந்திக்காமையாகும். மேலும் சமய நிறுவனமான மஸ்ஜிதின் பணியும் இந்த சமூகத்தின் மாற்றங்களுக்கு போதுமான பங்களிப்புச் செய்யாமையும் இன்று இந்த சமூகத்தின் பின்னடைவுக்கு இன்னொருகாரணியென நான் கருதுகின்றேன்.

எனவே இந்தக்குறைபாடுகளை இங்கு வாழும் மக்கள் சரியாக இனங்கண்டு மாற்றம் கொண்டுவர முயலவேண்டும். பெரும்பாலானோர் தங்கி வாழ்பவர்களாக இருப்பதால் வீட்டிலிருந்து பெண்கள் மேற்கொள்ளக்கூடிய சுயதொழில்களை உருவாக்குவதன் மூலம் இந்த மக்களின் வாழ்க்கை தரத்தை உயர்த்தமுடியும். இது போலவே மக்களிடையே விழிப்புணர்ச்சியினையை ஏற்படுத்தும் நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்தல் மிகவும் அவசியமாகும்.

எம்.எம்.எம். நாஸிம்
பொதுச் செயலாளர்
மனித வள ஆணைக்குழு
மாளிகாவத்தை.

---

நீங்களும் படிக்கலாம் - சில குறிப்புகள்.

# உதாரணப் பெற்றோர்கள்

அன்று ஒருநாள் என்னுடைய உறவினர் ஒருவரின் வீட்டுக்குச் சென்றிருந்த போது பக்கத்து வீட்டில் நடந்த பேச்சுவார்த்தை எனது கவனத்தை ஈர்ப்பதாக இருந்தது.

கணவன் மனைவிக்கு இடையில் ஒரு சிறுவாக்குவாதம் நடந்து கொண்டிருப்பது போல் தெரிந்தது. நேரம் ஆக ஆக அவர்களின் வாக்குவாதம் வாய்ச்சண்டையாக வலுத்தது. சண்டை போட்டுக் கொள்ளும் பெண் மற்றும் ஆணின் குரல் ஓங்கி ஒலிக்க ஆரம்பித்தன. நேரம் ஆக ஆக வார்த்தைகள் சரமாரியாகப் பொழிந்தன. வாக்குவாதத்தில் கொச்சை வார்த்தைகளும் மறக்கப்பட்ட குடும்ப ரகசியங்களும் அம்பலத்திற்கு வந்தன.

நம் நாட்டுக் குடும்பங்களில் நாம் அடிக்கடி பார்க்கும் நிலமை இதுவாக இருக்கிறது. நிலைமை மீறிப் போனால் இதனைத் தொடர்ந்து பொருட்கள் உடைவதும், அடி உதைகளும் தொடர்ந்து வரும்.

வீட்டுக்கு வீடு வாசற்படி என்பது போல கணவன், மனைவிக்குள் பிரச்சினை, கருத்து வேறுபாடு போன்றவை எழுவது சகஜமே. அமைதியாகப் பேசித்தீர்க்க வேண்டிய அவர்களது பிரச்சினைகளை "ஜெயிப்பது நானா - நீயா" என்ற தோரணையில் தீர்க்க முயலும் போது, நம் வீட்டு பிரச்சினையைப் பார்த்து சந்திசிரிக்கும் நிலை ஏற்படுகிறது.

குடும்ப பிரச்சினைகளின் போது காட்டுத்தனமாக கத்துவது, நம் வீட்டு பிரச்சினைகளை நம் வீட்டை சுற்றியிருப்பவர்களுக்கு டமாரம் அடித்துக் கொள்ளும் அதே வேளை, வீட்டில் உள்ள குழந்தைகளும் கணவன், மனைவிக்கு இடையில் ஏற்படும் பிரச்சினைகளினால் பல வழிகளில் பாதிப்புக்களுக்கு இலக்காகிறார்கள்.

சண்டை நடக்கும் சமயங்களில் கூட இருக்கும் குழந்தைகள் தங்கள் பெற்றோர் இருவரும் பேசிக் கொள்ளும் கொச்சை வார்த்தைகளைக் காது கொடுத்துக் கேட்டுக் கொண்டிருப்பர். சண்டை நடக்கும் நேரத்தில் அதைத் தடுக்க நினைத்தால் அவர்களுக்கும் சேர்ந்து அடிவிழும். இவ்வாறான சூழ்நிலை தொடர்ந்து ஏற்படுமேயானால் ஒரு குழந்தை மன வளர்ச்சியும் கூட பாதிப்புறலாம்.

பெற்றோர்கள், சண்டையின் போது தங்களை மறந்து பயன்படுத்தும் கொச்சை வார்த்தைகளும், மொழிகளையும் கேட்டு கொண்டிருக்கும் ஒரு குழந்தை பிறகு தங்களது தம்பி தங்கைகளை இந்த வார்த்தைகளைக் கொண்டு திட்டினால் போதும் உடனே பதறி அடித்து கொண்டு எங்கிருந்து இந்த கெட்ட வார்த்தைகளை கற்றுக் கொண்டாய் என்று முதுகில் இரண்டு வைப்போம்.



ஆனால், அவர்கள் இப்படி மோசமான மொழிகளைப் பயன்படுத்துவதற்கு நாம்தான் முதற் காரணம் என்பதை உணர்வது இல்லை.

முன்னுதாரணமாக பெற்றோர் ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுக்காமல், சிறிய விஷயத்தக்கெல்லாம் சண்டை பிடித்துக் வாழும் போது தங்கள் குழந்தைகள் நல்ல மனிதராக வளர வேண்டும் என்ற நிறைய எதிர்பார்ப்புக்களுடன் இருப்பர். இது எப்படி சாத்தியப்படும்?

ஒரு குழந்தை வளரும் சமயத்தில் தன்னை சுற்றி நிகழ்பவைகளைப் பார்த்துதான் பல விஷயங்களைக் கற்று கொள்கிறது. ஒன்றும் அறியாத பருவத்தில் நாம் பேசுவதையும், பழகுவதையும் பார்த்து அப்படியே ஒப்புவிக்கும் போது பல சமயங்களில் பல பெற்றோர்கள் பூரித்துப் போவதை நாம் பார்க்கலாம்.

அதே பாணியில்தான் குழந்தைகளுக்கு முன்பு நாம் சண்டை போட்டு கொள்ளும் போதும் நம்மை மறந்து நாம் சொல்லும் வார்த்தைகளைப் பிள்ளைகள் பிடித்து வைத்துக் கொண்டு அவ்வார்த்தைகளை பிறகு உபயோகிக்கும் போது நாம் சீறி பாய்கின்றோம். எங்கிருந்து இதைக் கற்று கொண்டாய் என்று எகிறி குதிக்கின்றோம்.

குழந்தைகள் தங்களைச் சுற்றி நிகழுபவற்றைப் பார்க்கும் எது நல்லது எது கெட்டது என்பதை தீர்மானிக்கும் மனப்பக்குவத்தைக் கொண்டிருப்பதில்லை. எதை பார்க்கின்றதோ அதை செய்வதற்கும், அதைக் கற்றுக் கொள்வதற்கும், பின்பற்றிக் கொள்ளும் திறமையை மட்டும் அது வளர்த்துக் கொள்கிறது.

ஆக, குழந்தைகள் பக்கத்தில் இருக்கின்றார்கள் என்பதை மறந்து நாம் போட்டுக் கொள்ளும் சண்டை அவர்களுக்கு ஒரு கெட்ட உதாரணமாக அமைந்துவிடுவது திண்ணம்.

தவறை நாம் செய்து விட்டு பிறகு நம் வீட்டு குழந்தை ஒழுக்கசீலனாக வளர வேண்டும் என்று எதிர்பார்ப்பது அபத்தமாகும்.

குழந்தைகளுக்குத் தாய் தந்தை இருவருமே முதலில் நல்ல முன்னுதாரணமாக இருக்க சற்றுக் கொள்ள வேண்டும்.

---

"முஸ்லிம் தேசமும் எதிர் காலமும்"




"முஸ்லிம் தேசம் பற்றிய" புரிதல்கள் அது தொடர்பான கருத்துக்கள் பெருமளவில் எழுதப்பட்டும் பேசப்பட்டும் வருகின்ற இன்றைய சூழலில் அது பற்றிய அதிக தெளிவுக்கும் வாசிப்பிற்குமான மிக முக்கிய நமது மக்கள் அனைவருக்கும் வாசிக்க வேண்டிய நூல் ஆவணம். 1996 இல் லண்டனிலிருந்து வெளிவரும் "உயிர்ப்பில்" பிரசுரிக்கப்பட்டு 1997 இல் முதற் பதிப்பாக வெளி வந்தது. 2001 ஆம் ஆண்டு தமிழகத்தில் இண்டாம் பதிப்பு கண்ட நூல்!

நமது மக்களின் பரந்துபட்ட வாசிப்புக்குள்ளான அரசியல் ஆவணம் இது! இந்நூலை நீங்கள் இன்னும் வாசிக்கவில்லையா? உங்கள் புத்தக அலுமாரியில் "முஸ்லிம் தேசமும் எதிர் காலமும்" என்ற இந்நூல் இல்லையோ?

மிகக் குறைந்த விலையில் இந்நூல் உங்கள் கரம் சேர்க்க ஆவலாய் உள்ளோம்!

ரூபா 150க்கான காசுக்கட்டளை அல்லது காசோலையை அனுப்பி பெற்றுக் கொள்ளலாம். புத்தகம் தேவையாயின் மேலதிக விபரங்கள் இப்பத்திரிகையில் உள்ள சந்தா விபரப் பெட்டியை பார்த்து எமக்கு அனுப்பி வைக்கவும்.

---

## முஸ்லிம் அபிலாசைகள் நிறைவேற்றப்படுமா?

வடக்கு - கிழக்கு முஸ்லிம் மக்களின் உரிமைகளையும், வடக்கு - கிழக்கிற்கு வெளியே இருக்கும் முஸ்லிம் மக்களின் உரிமைகளையும் பெறுவது இன்றைய சூழலில் அவசியமாகிறது.

பேச்சுவார்த்தையில் பங்கு பற்ற வேண்டிய முஸ்லிம் தரப்புப் பிரதிநிதிகளை முஸ்லிம்கள்தான் தீர்மானிக்க வேண்டும். முஸ்லிம் சமூகத்தை பேச்சுவார்த்தை மேசையிலிருந்து ஓரங்கட்டுவது வேதனைக்குரிய விடயமாகும்.

ஐக்கிய இலங்கையில் வாழ்கின்ற முஸ்லிம்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும். விஷேசமாக வடக்கு - கிழக்கில் வாழ்கின்ற முஸ்லிம்களின் பாதுகாப்பும் தென்னிலங்கையில் வாழும் முஸ்லிம்களின் பாதுகாப்பும், முஸ்லிம் மக்களின் உரிமைகளையும் பெறுவதாயின் எமது முஸ்லிம் அரசியல் தலைவர்கள் ஒன்றுபட்டு, கருத்தொருமித்து இலங்கை முஸ்லிம்களுடைய எதிர்காலத்துக்கும் இனப்பிரச்சினைத் தீர்வுக்கும் தமது பங்களிப்பினைச் செய்ய வேண்டும்.

இதனடிப்படையில் படித்தவர்கள், அறிஞர்கள், புத்திஜீவிகள், முஸ்லிம் அரசியல் தலைவர்கள் அனைவரும் கருத்தொருமித்து இலங்கை முஸ்லிம்களின் விடயத்தில் ஒரே நிலைப்பாட்டை கைப்பிடிக்க வேண்டும்.

ஒற்றுமை, சமாதானம், சகோரத்துவம் ஆகியவையே இஸ்லாம் வலியுறுத்துகிறது. அல்குர்ஆனில் கூறப்படுகின்றது "உங்கள் எதிரிகள் உங்களோடு சமாதானத்திற்காகக் கரம் நீட்டினால் அல்லாஹ்வின் மீது நம்பிக்கை வைத்து நீங்களும் சமாதானத்திற்கு நேசக்கரம் நீட்டுங்கள். சகோதரத்துவம் இஸ்லாத்தின் அடிநாதம். அப்படியிருந்தும், இலங்கை வாழ் முஸ்லிம்களிடையே சகோதரத்துவம் நிலவுகிறதா? ஒற்றுமை காணப்படுகிறதா? சமாதானக் காற்று வீசுகிறதா?

விடுதலைப் புலிகள் எவ்வாறு அவர்களின் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதற்கு முனைப்புடன் செயற்படுகிறார்களோ அவ்வாறே முஸ்லிம்கள் தங்களுடைய பிரச்சினைகளை ஆராய்ந்து அவற்றை தீர்த்து வைப்பதற்கு முனைப்புடன் செயற்பட முன் வரவேண்டும். மறைந்த மாமனிதர் எம்.எச்.எம்.அஷ்ரஃப் வடக்கு - கிழக்கிலுள்ள முஸ்லிம்கள், தென்னிலங்கை முஸ்லிம்கள் தனித்துவமாகவும், நிம்மதியாகவும் தலைநிமிர்ந்து வாழவேண்டும் என்ற கொள்கையை கைப்பிடித்தார்.

எம்.இசட். ஆரீப், றாகம.

---

## நீங்களும் எழுதலாம்

அரசாங்கத்தினாலும், விடுதலைப் புலிகளினாலும் நசுக்கப்பட்டு உரிமைகள் மறுக்கப்பட்டு நாதியற்று சொந்தக் கருத்துக்களைக் கூட வெளியிட முடியாமல் ஊமையாக வாழும் எமது சமுகத்திற்கு நீண்ட காலமாக ஒரு நிலையான பத்திரிகை இல்லாமல் இருந்து வருகின்றது. இருந்த பத்திரிகைகளும் குறுகிய காலத்தில் சமுகத்தில் இருந்து மறைந்து விடுகின்றன. இந்நிலையில் எமது சமுகத்திற்கு ஒரு தனியான பத்திரிகை இல்லாத குறையை முஸ்லிம் குரல் நிவர்த்தி செய்யும் என எதிர்பார்த்து இப்பத்திரிகை சம்மந்தமாக பின்வரும் எனது கருத்துக்களை தங்கள் முன் சமர்ப்பிக்கின்றேன்.

1. இப்பத்திரிகையின் பெயர், செய்தித் தலைப்புக்கள், உபதலைப்புக்கள் என்பவைகளுக்கு பல நிறங்கள் தீட்டப்படல் வேண்டும். 2. வெளிநாட்டு செய்திகளுக்கு இப்பத்திரிகையில் ஒரு பக்கம் ஒதுக்கப்படல் வேண்டும். அதில் முஸ்லிம் நாடுகளில் முஸ்லிம் மக்களுக்கு இழைக்கப்படும் அநியாயங்கள் புகைப்படங்கள் மூலம் வெளிக்காட்டப்படல் வேண்டும். 3. பொது அறிவு நடப்பு உலக விவகாரங்கள், விளையாட்டுத் தகவல்கள், மக்கள் மன்றங்கள், முஸ்லிம் ஊர்கள் பற்றிய வரலாறுகள் பற்றிய விடயங்கள் வெளிவரல் வேண்டும். 4. எந்தவொரு முஸ்லிம் அரசியல் தலைமைத்துவத்திற்கும் பக்கம் சாராமல் நடு நிலையாக நின்று உண்மையான கருத்துக்களை தெரிவிக்க வேண்டும். சொல்லும் கருத்துக்கள் தெளிவானதாகவும், உறுதியானதாகவும் இருக்க வேண்டும். 5. சரிநிகர் பத்திரிகையில் எழுதி வெளிவந்த "அபுநிதாலின்" கருத்துக்கள் இப்பத்திரிகையிலும் வெளிவரல் வேண்டும். 6. எதிர்காலத்தில் முஸ்லிம்கள் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பது பற்றி எழுதப்படல் வேண்டும். முஸ்லிம் காங்கிரஸ் பற்றி எழுதி எழுதி உங்கள் உழைப்பையும், காலத்தையும் வீணடிக்க வேண்டாம்.

எம்.ஐ.எம்.இஸ்ஹாக், ஏறாவூர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு தனி மனிதனின் ஆணவத்தால் உலகமே நெருக்கடியில்!

**இக்கட்டுரையை நீங்கள் வாசித்துக் கொண்டிருக்கும் போதே ஈராக் தாக்கப்பட்டு கொண்டிருக்கலாம்.**



"யுத்தம் என்று வந்தால் அதில் முதலாவது பலியாவது உண்மையும், சத்தியமும்தான்" என்று எங்கோ படித்த ஒரு ஆங்கில முதுமொழிதான் இன்று வளைகுடாப் பிராந்தியத்தைப் பற்றிச் சிந்திக்கின்ற போது ஞாபகத்துக்கு வருகின்றது.

ஆனால், இன்றைய நவீன போர் முறையை நோக்குகின்ற போது யுத்தம் ஆரம்பிப்பதற்கு முன்பாகவே உண்மையும், சத்தியமும் குழிதோண்டிப் புதைக்கப்படுகின்றன. அது மட்டுமல்ல ஒரு நாட்டின் மீதான ஆக்கிரமிப்பை நியாயப்படுத்தும் விடயத்தில் பொய்மையும், வஞ்சகமும்தான் தலை தூக்கி நிற்கின்றன.

அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ், அவரது பாதுகாப்பு அமைச்சர் டொனால்ட் றம்ஸ்பீல்ட், அவரின் வெளிவிவகார அமைச்சர் கொலின் பவல், புஷ்ஷின் நெருங்கிய சகாக்களான பிரிட்டிஷ் பிரதமர் டொனி பிளாயர், ஸ்பெயின் பிரதமர் ரோஸ் மரியா அஸ்னார் ஆகியோர் தலைமையிலான ஒரு குமபல் ஈராக் மீதான தாக்குதல் திட்டங்களை பூரணப்படுத்தும் பணியில் முழு மூச்சாக ஈடுபட்டுள்ளது.

அமெரிக்காவைப் பொறுத்தமட்டில் ஈராக் மீதான தாக்குதலுக்கானத் திட்டம் ஏற்கனவே வகுக்கப்பட்ட ஒன்று. இப்போது இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கான பங்காளிகளையும், காரணிகளையும்தான் அது தேடிக் கொண்டிருக்கின்றது. பங்காளிகளும் காரணிகளும் கிடைக்காவிட்டாலும் கூட அமெரிக்கா தனது நோக்கத்தை நிறைவேற்றுவதால் உறுதியாக உள்ளது. இருந்தாலும் கூட உலகில் என்றுமில்லாத அளவுக்கு எதிர்ப்புக்கள் வலுவடைந்ததும் அமெரிக்கா தனது நோக்கத்திலிருந்து பின்வாங்குவதாகவுமில்லை.

இதற்குப் பின்னர்தான் நான் முன்பு குறிப்பிட்டது போல் உண்மைகளையும், சத்தியங்களையும் அமெரிக்கா குழிதோண்டிப் புதைக்க ஆரம்பித்தது. ஈராக் மீதான தாக்குதலுக்கு ஆதரவுதேட அமெரிக்கா மேற்கொண்ட இராஜதந்திர முயற்சிகள் எதுவுமே பலனளிக்கவில்லை.

இராஜதந்திர முயற்சிகள் பலனளிக்காத நிலையில், போலிக் காரணங்களை முன்வைத்து தாக்குதலை ஆரம்பிப்பது என்பது அமெரிக்காவுக்கு ஒன்றும் புதிய விடயமல்ல. 50 ஆயிரம் அமெரிக்கர்களையும், இலட்சக்கணக்கான வியட்நாமியர்களையும் பலியெடுத்த வியட்நாம் யுத்தத்தைக் கூட ஒரு பொய்யைச் சொல்லித்தான் அமெரிக்கா ஆரம்பித்தது. வியட்நாம் பிரதேசத்தில் டோன்கின் வளைகுடாவில் 1964 ஆம் ஆண்டு ஆகஸ்ட் இரண்டாம் திகதி வழமையான ரோந்துச் சேவையில் ஈடுபட்டிருந்த அமெரிக்காவின் நாசகாரிக் கப்பலான மெடொக்ஸ் மீது வட வியட்நாமிய படகுகள் இரண்டாவது தடவையாகவும் சரமாரியாகத் தாக்குதலைத் தொடுத்து விட்டார்கள். இனிமேலும் அவர்களை விட்டு வைக்க முடியாது. அவர்களை முற்றாக அழித்து விடுங்கள் எனக் கூறித்தான் அப்போதைய அமெரிக்க ஜனாதிபதி லிண்டன் ஜோன்ஸன் தனது படைகளுக்கு உத்தரவிட்டார்.

உண்மையில் அமெரிக்க நாசகாரிக் கப்பலான மெடொக்ஸ் டோன்கின் வளைகுடாவில் வழமையான ரோந்துச் சேவையில் ஈடுபட்டிருக்கவில்லை. வட வியட்நாம் படைகள் மீது தென்வியட்நாம் கடற்படையும், லாஓஸ் விமானப் படையும் தாக்குதல் நடத்துவதற்குத் தேவையான தகவல்களைத் திரட்டுவதில்தான் இந்த நாசகாரிக் கப்பல் ஈடுபட்டிருந்தது.

இந்தக் கப்பல் மீது தாக்குதல் நடத்தப்பட்டதாகக் கூறப்பட்டது சுத்த அபத்தம் என்பது பிற்காலத்தில் தெளிவாக நிரூபிக்கப்பட்டது. ஜனாதிபதி லிண்டன் ஜோன்ஸன் சுமார் ஒரு வருடம் கழித்து ஒரு வைபவத்தில் பேசும் போது இதை மறைமுகமாக ஒப்புக் கொண்டார். அவர் பிரயோகித்த வார்த்தைகள் இதுதான் "டோன்கின் குடாவில் எமது கடற்படை அன்று சுறாவேட்டையில் ஈடுபட்டிருந்தது என்பது எனக்கு நன்றாகவே தெரியும்" என்று அவர் தனது பொய்யை மறைமுகமாக ஒப்புக் கொண்டார்.

எனவே, தனது கொடூர நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக உலகுக்குப் பொய் உரைப்பதும், அதற்காக இலட்சக்கணக்கான அப்பாவி உயிர்களைப் பலி கொடுப்பதும் அமெரிக்க ஜனாதிபதிகளுக்கு ஒன்றும் புதிய விடயமல்ல. இந்தப் பொய்களுக்கு ஒத்துப் போகும் கைங்கரியத்தை அமெரிக்காவின் வெகுஜன ஊடகங்களும் மிகவும் சிறப்பாக நிறைவேற்றி வருகின்றன. இதில் வேடிக்கை என்னவென்றால் அமெரிக்க ஊடகங்களின் இந்த அபத்தமான பிரசாரத்தை புரிந்து கொள்ளாத உலக நாடுகள் ஊடகத்துறைக்கு உதாரணமாக அமெரிக்க ஊடகங்களைத்தான் முன் வைக்கின்றன. அமெரிக்காவின் இந்தப் போக்கோடு மேற்கு நாடுகள் சிலவும் கூட ஒத்துப் போகின்றன. அவற்றுள் முன்னணி வகிக்கும் ஐரோப்பிய நாடாக இன்று பிரிட்டன் ஆகிவிட்டது.

பிரிட்டனைப் பொறுத்தமட்டில் பிரதமர் டொனி பிளயர் தலைமையிலான தொழிற்கட்சி அரசு இன்று தனக்கென ஒரு வெளிநாட்டுக்குக் கொள்கையை வகுத்துக் கொள்ள முடியாமல் அமெரிக்காவின் வாலைப் பிடித்துக் கொண்டு தொங்கும் நிலைக்கு வந்துவிட்டது.

ஈராக் மீதான யுத்தத்தை நியாயப்படுத்துவதற்கு அமெரிக்கா தேடும் போலியான காரணங்களை உண்மையென நிரூபிக்க பிரிட்டனும் இன்று பகீரதப் பிரயத்தனங்களை மேற்கொண்டு வருகின்றது.

ஈராக்கிற்கு எதிராக அமெரிக்கா தயாரித்து முன்வைத்த ஆவணங்கள், அத்தாட்சிகள் அனைத்துமே போலியானவை. சர்வதேச சமூகத்தை தவறாக வழிநடாத்துவதற்காகத் தயாரிக்கப்பட்டவை என்பது தெட்டத் தெளிவாக நிரூபிக்கப்பட்ட நிலையில், இது பற்றி கருத்து வெளியிட்ட கொலின் பவல் எமக்குக் கிடைத்தவற்றை நாம் சமர்ப்பித்தோம். அவை போலியானவை என்றால்... ஓகே! பைன்! என எவ்வித பொறுப்பும் இன்றி பதிலளித்து தனது கேவலமான இராஜதந்திரத்தை ஒப்புக் கொண் டுள்ளார்.

இந்நிலையில் தனது உளவுப்படையில் திரட்டப்பட்ட தகவல்கள் எனக் கூறிக் கொண்டு பிரிட்டிஷ் அரசாங்கம் ஒரு சில ஆவணங்களை சர்வதே சமூகத்தின் முன்வைத்தது சர்வதேச சமூகத்தின் முன் இந்த ஆவணங்களை முன்வைத்த பிரிட்டிஷ் அரசு இன்று வெட்கித் தலைகுனிய வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. ஏன் தெரியுமா? இந்த ஆவணத்தில் உள்ள பெரும் பாலான பகுதிகள் எகிப்திய மாணவர் ஒருவரால், அவர் கற்கும் கலாசாலையின் கல்விச் சஞ்சிகைக்கு எழுதப்பட்ட கட்டுரையில் இருந்து திருடப்பட்டவை என்பது இப்போது நிரூபிக்கப்பட்டுள்ளது. அந்த மாணவர் ஏதோ கற்பனையில் சில விடயங்களை முன்வைக்க அவற்றை அப்படியே அள்ளி எடுத்து தனது உளவுப் பிரிவால் திரட்டப்பட்டவை என உலகை நம்பவைக்க முயன்ற பிரிட்டிஷ் அரசு இன்று தனது இயலாமையை வெளிப்படையாக ஒப்புக் கொண்டுள்ளது. இதற்குப் பிறகுதான் டொனி பிளாயருக்கு உள்ளூரில் எதிர்ப்பு மேலும் அதிகரித்தது. அமெரிக்காவோடு ஒத்துப் போனால் அமைச்சர் ஒருவர் பதவி விலகப் போவதாகக் கூட அறிவித்துள்ளார்.

இல்லாத ஒன்றை நிரூபிக்க முடியாது என்பதையும், அவ்வாறு நிரூபிக்க முயன்றால் வெற்கித் தலைகுனிய வேண்டும் என்பதையும் அமெரிக்காவும், பிரிட்டனும் இன்று உலகுக்கு உணர்த்தியுள்ளன.

பொய்யை உண்மை என உலகுக்கு கூறுவதும், அல்லது இல்லாத ஒன்றை இருப்பதாக உலகுக்கு நிரூபிக்க முனைவதும் மனிதனது அடிப்படை ஒழுக்கப் பண்புகளோடு சம்பந்தப் பட்ட விடயங்கள். சிறந்த ஒழுக்கமும் உன்னத மனிதப் பண்புகளும் மிக்கவ ர்கள் நிச்சயம் இப்படி நடந்து கொள்ள மாட்டார்கள். தாம் தவறு செய்தால் கூட அது தவறு என்பதை அவர்கள் வெளிப்படையாக ஒப்புக் கொள்வார் கள்.

எது எவ்வாறாயினும் சரி, ஈராக் மீது அமெரிக்கா தலைமையில் இடம் பெறும் தாக்குதல் உண்மைக்கு எதிரானது, சாத்தியத்துக்கு விரோதமானது, மனிதப் பணபுகளுக்கு நேர் மாறானது, தர்மத்துக்குப் புறம்பானது. உலகில் இன்று பொய்மை வஞ்சகம், அசத்தியம், அதர்மம் என்பனவதான் மேலோங்கி உள்ளன. ஆனால் இந்த அதர்மச் சக்திகளின் அரசாட்சி தற்காலிகமானதே தவிர நிரந்தரமானதல்ல. சத்தியமும் அதர்மமும் தற்போது உலகில் சற்று பின்னடைவைச் சந்தித்திருந்தாலும் கூட அவை நிச்சயம் மீண்டும் நிலைபெறும்.

"சத்தியம் வந்தது
அசத்தியம் அழிந்தது
நிச்சயம் அசத்தியம் அழிந்தே தீரும்" என அல்குர்ஆன் உறுதியாக உரைக்கின்றது. இந்த நம்பிக்கையோடுதான் ஈராக் மக்கள் அமெரிக்கத் தாக்குதலுக்கு முகம் கொடுக்க தயாராகி வருகின்றனர்.

-ஆபூ மஹ்தியா

## பொத்துவிலில் உல்லாச ஹோட்டலை முஸ்லிம் கலாசார அமைச்சர் திறந்து வைக்கலாமா?

பொத்துவிலில் உல்லாச ஹோட்டல் ஒன்றை முஸ்லிம் கலாச்சார அமைச்சராகவும், முஸ்லிம் காங்கிரஸ் தலைவராகவும் இருக்கும் ஹக்கீம் எப்படிப்போய் திறந்துவைக்கமுடியும்? முஸ்லிம்களுக்குள் யானைகளைக் கொண்டு வந்து அட்டகாசம் பண்ணிக்கொண்டு, அதே தினத்தில் ஹக்கீம் உல்லாசமாக பொத்துவிலில் உள்ள உல்லையில் 'திறீ ஸ்டார்' ஹோட்டலைத் திறந்துவைத்து பொழுது போக்கிக் கொண்டிருந்திருக்கிறார். ஹக்கீமை நியாயப்படுத்தும் ஆதரவாளர்கள் இப்போக்குகளைப் புரிந்துகொள்ளவேண்டும். நாங்கள் சொன்னால் அவதூறு என்று சொல்லுவீர்கள்! நீங்கள் போயாவது ஹக்கீமிடம் சொல்லுங்கள்! ஹக்கீமைத் திருத்தி நல்வழிப்படுத்துங்கள்! ஏன் நீங்கள் மையோனுக்கு ஏசுகிறீர்கள்? அன்று அஷ்ரப் அவர்கள் இருக்கும்போதும் மையோனுக்குப் பதிலாக சட்டத்தரணி நிசார் கல்முனையில் இருந்து கொண்டு மையோன் இன்று செய்ததைத்தானே தலைவர் அஷ்ர.்.புக்கு சட்டத்தரணி நிசார் செய்தார்! முஸ்லிம் காங்கிரசை தலைவர் அஷ்ர.்.ப் காலத்தில் எவ்வாறாவது அழித்து விடவேண்டும் என்று எஸ்.எல்.எப்.பி. அமைப்பாளர் என்ற எலும்பைத் தூக்கித் திரிந்த நிசார் இன்று எங்களை துரோகி என்றால் எப்படிப் பொறுத்துக் கொள்வோம். தலைவர் அஷ்ரபையே அவர் வாழும் காலத்தில் ஏற்றுக்கொள்ளாத நிசார் - இப்போது முஸ்லிம் காங்கிரசுக்கு எதற்கு? மற்றவர்களைக் குற்றம் சாட்டுகிறமாதிரி உங்களுக்குள் நடப்பதையும் தயவுசெய்து தட்டிக்கேளுங்கள்.

பொத்துவிலில் உல்லாச ஹோட்டல் திறந்ததை கிழக்கு மாகாண ஜம்இய்யத்துல் உலமா சபை ஆதம்பாவா மௌலவி கண்டிக்கலாம் தானே! வால் பிடிப்பதற்கு மட்டும்தானா பத்திரிகை அறிக்கை விடுவீர்கள். ஹக்கீம் போன்ற தலைவர்கள் மார்க்கத்திற்கு விரோதமாக நடந்தால் ஏன் மௌனமாக இருக்கிறீர்கள். தவறுகளை நியாயப்படுத்தவும் மௌனமாக இருக்கவும் நாம் பழகித்தான் விட்டோமா?

எம்.ஏ.ஷாபி,
கல்முனை


முஸ்லிம் குரல் பத்திரிகை வாசித்தேன். மகிழ்ச்சியடைந்தேன். பத்திரிகைகள், வானொலி போன்றவை மூலம் விளம்பரம் செய்து வாசகர்களுக்கு அறிமுகம் செய்யவும். மேலும் நாடு முழுவதும் விநியோகஸ்தர்கள், நிருபர்கள், விமர்சகர்கள், வாசகர்கள், எழுத்தாளர்கள் போன்றவர்களுடன் குரல் தொடர்பு கொள்ள வேண்டியுள்ளது. எமது நாட்டில் பல்வேறு பகுதிகளில் காலத்திற்கு காலம் இனக்கலவரங்கள் நடைபெற்றுள்ளன. தவறுகள் இரு இனங்களிலும் இருக்கலாம்

பெரும்பாலும் பொய்வதந்திகள், இனவெறி, பொறாமை, துவேசம் போன்றவைகளே காரணம். மற்றும் சந்தேகம் ஒரு இடத்தில் ஒரு முஸ்லிம்களுக்கும், காபிர்களுக்கும் இடையில் பிரச்சினை ஏற்பட்டால் காபிர்கள் அப்பகுதியிலுள்ள எல்லா முஸ்லிம்களையும் தாக்குவார்கள் அதனால் முஸ்லிம்கள் முதலில் தமது இனத்தவர்களை உண்மை முஸ்லிம்களாக வாழச் செய்ய உலமாக்கள், புத்திஜீவிகள் தம்மாலான சகல முயற்சிகளிலும் ஈடுபட வேண்டும். ஓர் ஊரில் ஓர் பிரச்சினை ஏற்பட்டால் சிறுபான்மையினரான நாம் காவல்துறையுடன் மோதிக் கொள்ளாமல் நடந்து கொள்ள வேண்டும். காவல் துறையில் பெரும்பான்மை இனத்தவர்களே கடமையில் ஈடுபட்டுள்ளார்கள்.

அவர்கள் எப்போதும் அவ்வினத்தவர்களுக்குச் சார்பாகவே நடந்து கொள்வார்கள். முஸ்லிம்களிடம் ஆயுத பலம் இல்லை, ஆள் பலம் இல்லை, நியாயத்தை எடுத்துச் சொன்னால் ஏற்க மாட்டார்கள். அரசாங்கங்களும் அந்த நேரத்துக்கு மட்டும் கண் துடைப்பார்கள். இனிமேல் அசம்பாவிதங்கள் நடக்க இடமளிக்க மாட்டோம் என ஒவ்வொரு வன் செயலுக்குப் பிறகும் உறுதி அளிப்பார்கள். அவை எல்லாம் வெறும் பேச்சுகள் மட்டுமே. வெறும் உறுதிமொழிகள் மட்டுமே. உரிமைகளில் விகிதாசாரம் கேட்கும் முஸ்லிம்கள், எல்லாத்துறைகளிலும் விகிதாசாரப் படியாவது சேவையில் ஈடுபட்டால் ஓர் அளவாவது முஸ்லிம்களுக்கு விமோசனம் கிடைக்கும் என எதிர்பார்க்கின்றேன். குறிப்பாக முப்படையில், ஏனைய சகல துறைகளிலும் முஸ்லிம்கள் ஈடுபடவேண்டும். முஸ்லிம்கள் அதிகமாய் உள்ள பகுதிகளில் அதற்கேற்றவாறு முஸ்லிம் அதிகாரிகளை ஈடுபடுத்த வேண்டும். நாட்டில் உள்ள சகல பொலிஸ் நிலையங்களிலும் முஸ்லிம் பொலிசார் சேவையில் ஈடுபடுத்த வேண்டும்.

மேல் குறிப்பிட்ட விடயங்கள் முஸ்லிம் குரல் மூலம் முஸ்லிம்களுக்கு அறிவுறுத்த முயற்சி செய்ய வேண்டும்.

எம்.எல்.எம்.ரஸீக், தெரனியாகல.




சுவடு - 05
முஸ்லிம் குரல்
Muslim Kural
21 மார்ச் 2003 17 - முஹர்ரம் - 1424
Chief Editor, 143, Muhandhiram Road, Colombo - 03.
Tel: 0777-389127, Fax: 01-667963, E-mail: mm-s@eol.lk

## நீங்கள் வழங்கி வரும் உளப்பூர்வமான ஆதரவுக்கு நமது மக்களின் சார்பில் நன்றிகள்!

முஸ்லிம் குரலின் ஐந்தாவது சுவடு உங்கள் கரங்களில் இப்போது தவழ்கிறது. அல்ஹம்துலில்லாஹ். எல்லாப் புகழும் இறைவனுக்கே! இவ் ஐந்து சுவடுகளையும் நமது மக்கள் அரங்கில் பதிப்பதற்கு மிகப் பெரும் உழைப்பினை செலவிட்டிருக்கிறோம். இரண்டு மூன்று பேரின் கூட்டு உழைப்பினால்தான் இம் முயற்சியும் பணியும் சாத்தியப்பட்டிருக்கிறது.

மக்களாகிய நாம், நமது மக்களின் நலனின் பேரான பணிகளின் செயற்பாட்டுக்கு அதிகூடிய உழைப்பினை வழங்க வேண்டியவர்களாக உள்ளோம்! பெருமளவிலானோர் பார்வையாளர்களாக இருந்து கொண்டு, நமக்கு முன்னுள்ள மிகப் பெரும் சவால்களை எதிர்கொள்ள முடியாது என்பதை நாமறிவோம்!

கூட்டு உழைப்பையும் சுய மதிப்பீட்டையும், சுய விமர்சனத்தையும் நமது சமூக அரங்கு உடனடியாக வேண்டி நிற்கிறது. அக, புற ரீதியான சூழல்களை நாம் உடனடியாக மிகத் தெளிவாக இனம் கண்டுகொள்ள வேண்டியவர்களாக உள்ளோம்! ஏற்கனவே நாம் - நமது பாதையில் மிகவும் தாமதித்தவர்களாகவே இருக்கிறோம் என்பதை நாம் அனை வரும் அறிவோம்!

முஸ்லிம் குரல் பத்திரிகை ஆசிரியர் பீடத்தை பொறுத்தவரை, நமது மக்களின் ஆன்மாவாகவே அது செயற்பட திடசங்கற்பம் பூண்டுள்ளது - மக்களிடமிருந்துதான் நாம் கற்றுக்கொள்கிறோம். மக்களின் கருத்துக்களை தொகுத்து வெளியிடுவதுதான் எமது பணி. இந்த அடிப்படைச் செயற்பாட்டில் நாம் அனைவரும் தெளிவுடன் இருத்தல் வேண்டும்!

நமது மக்களின் தலைமைகளை, நாம் நியாயமாக கேள்விக்குட்படுத்த முடியாது என்று யாரும் வாதாட முடியாது. நமது அரசியல், சமூகத் தலைமைகளின் மீது அபாண்டமாக குற்றம் சாட்டப்படுகிறது என நமது மக்களில் ஒருவர் தானும்கருதுவாராக இருந்தால், தயவுசெய்து அவர் - அவருடைய கருத்தை எமக்கு எழுதி அனுப்புதல் வேண்டும்! நிச்சயமாக இறைவன் மீது ஆணையாக, அக்கருத்தினை நாங்கள் மக்கள் முன்வைக்க உறுதி கொண்டிருக்கிறோம்! எங்கள் உறுதியை - பரந்துபட்ட மக்கள் மத்தியில் ஆதாரபூர்வமாகவும் செயற்பாட்டு வழியிலும் நிரூபிப்பதற்கு மாற்றுக் கருத்துக்கள் எழுதப்படல் வேண்டும்.

நமக்கான பத்திரிகை என்பது சுயமாக உருவாகி விட முடியாது! அர்ப்பணிப்பு மிக்க உழைப்பு, பொருளாதார ஆதரவு, மக்களின் பரந்துபட்ட வாசிப்பு, விற்பனை, எழுத்து, சிந்தனை, செயற்பாட்டு ஆதரவு போன்ற பல்வேறு தளங்களில் அதற்கான ஆதரவுக் கரம் நீட்டப்படல் வேண்டும். இவைகள் நமது மக்களிடமிருந்து எமக்கு கிடைப்பதற்கான சூழல்கள் தோன்றிவிட்டன. இன்ஷா அல்லாஹ் இந்த பத்திரிகையின் எதிர்காலம் பிரகாசமாகவே எமக்குத் தெரிகிறது.

மூன்று மாதங்களுக்கான பொருளாதார உதவியுடன்தான் நமக்கான பத்திரிகை தொடங்கப்பட்டுள்ளது. இப்பத்திரிகை வெளிவருவதற்கான பெருமளவிலான உதவியை முஸ்லிம் சமூக ஆய்வு நிலையம் எமக்கு வழங்கியுள்ளது. மற்றும் சமூகத்திலுள்ள ஓரிரு சமூகப் பிரதிநிதிகளும் உதவி உள்ளனர். இவர்கள் அனைவருக்கும் நமது மக்களின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்! உண்மையையும் உதவியையும் நமது மக்களுக்குத் தெரியப்படுத்துவதே எமது கடமையாகும்.

இம்மூன்று மாதங்களுக்கு பின் முஸ்லிம் குரலுக்கான பொருளாதாரத் தேடலை; நமது மக்களிடமிருந்தே நாம் பெற வேண்டி உள்ளது. அந்தப் பணிக்காக நாம் உங்களை நாடி வர உள்ளோம்! எமக்கு பூரண ஒத்துழைப்பை நீங்கள் வழங்க வேண்டும். நமது மக்களுக்குத் துரோகமிழைக்கும் எந்தவிதமான தலைமைகளுடனும், தனிப்பட்ட நபர்களுடனும் நாம் நமது மக்களின் உன்னத கொள்கைகளை, அரசியல் அபிலாஷைகளை சமரசம் செய்துகொள்ள மாட்டோம் என்பதை உறுதியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

பத்திரிகைப் பிரதிகளை வீடு வீடாக, வர்த்தக நிலையங்களாக சென்று நமது மக்களின் பல்வேறு பிரிவினர் கையளித்து வருகின்றனர். எல்லாப் பிரதேசங்களிலும் பாரந்தளவில் ஆதரவுக் கரம் நீட்டப்படுகிறது. முஸ்லிம் குரலும் இன்னும் பல பத்திரிகைகளும் நமக்காக வெளியிடப்பட வேண்டும் என்ற கருத்து மக்கள் மத்தியில் வலுப்பெற்று வருகிறது. மக்களாகிய உங்களின் மனச்சாட்சி நீதிமன்றமே இறைவனுக்கு அடுத்த உன்னத சந்நிதானம் என்பதில் எமக்கு அசைக்க முடியாத நம்பிக்கை உண்டு. பல்வழிகளிலும் ஆதரவு தரும் உங்கள் அனைவருக்கும் எமது மக்களின் சார்பில் நன்றிகளும் பிரார்த்தனைகளும்.

பிரதம ஆசிரியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 143, முகாந்திரம் றோட், கொழும்பு -3 இல் அமைந்துள்ள முஸ்லிம் குரல் பப்ளிகேசன் நிறுவனத்தினால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.